



# நியாயமான சமுதாயத்தின் நிர்மாணம்

செஸ்ட்டர் போல்ஸ்

டில்லி சர்வகலாசாலை
உப-அத்யட்சகர்
சி. டி. தேஷ்முக்
முன்னுரையுடன்

## செஸ்ட்டர் போல்ஸ் எழுதிய புத்தகங்கள்

பயமற்ற வருங்காலம்

தூதர் அறிக்கை

சமாதானத்தின் புதிய பரிமாணங்கள்

அமெரிக்காவுக்கு ஆபிரிக்க அறைகூவல்

மாறிவரும் உலகில் அமெரிக்க அரசியல்

கருத்துகள், மக்கள், சமாதானம்

வரப்போகும் அரசியல் முன்னேற்றம்

முற்போக்குவாதியின் மனச்சாட்சி

# நியாயமான சமுதாயத்தின் நிர்மாணம்

[தேசிய வளர்ச்சி: யுத்த பிற்கால அனுபவங்களின் படிப்பினை]

செஸ்ட்டர் போல்ஸ்

அமெரிக்கத் தகவல் நிலையம்
சென்னை - 2
1964

அமெரிக்கத் தகவல் நிலைய வெளியீடு.

தமிழாக்கம் : ஏ. ஜி. வேங்கடாச்சாரி
அட்டைப்படம் : எப். ஸி. பஸ்ரிச்சா
அச்சிட்டது : வடபழனி அச்சகம், சென்னை 26

# முகவுரை

உயிரினங்கள் அனைத்திலும் மனித ஜாதி ஒரு தனி வகைப்பட்டது. பத்து லட்சம் ஆண்டுகளாகவே இந்த நிலை இருந்து வருகிறது. ஆனால் சென்ற 18 ஆண்டுகளில்தான் அதற்கு ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது. இது பலருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கலாம். எனினும் இது வரலாறு புலப்படுத்தும் உண்மையே. சென்ற சில நூற்றாண்டுகளில் நாகரிகம் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. ஆனால் 300 வருஷ காலம் விஞ்ஞானத் தொழில் முறைப் புரட்சியை அனுபவித்த பிறகுதான், பெருநாசம் விளைவித்த இரண்டு உலக யுத்தங்களை அடுத்துத்தான், பெரும்பாலான உலக நாடுகளின் தலைவர்களுக்கு இந்த ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது. நாகரிக வாழ்க்கையின் நன்மைகள், மனிதவர்க்கம் அனைத்துக்குமே கிடைக்கும்படி செய்வது முற்றிலும் அனுபவ சாத்தியமானது என்பதுதான் இந்த உண்மை.

சுமார் 80 கோடி மக்கள் சமீபத்தில் சுதந்திரம் அடைந்துள்ளனர். பழமையை அழித்து, புது வழியில் தமது எதிர்காலத்தை நிர்மாணித்துக் கொள்ள முற்பட்டுள்ளனர், இன்னொரு 70 கோடி மக்கள். அதற்கான வெறியுடன் கூடிய சுதந்திர உணர்வு அவர்களுக்கு இருந்து வருகிறது. தேசிய விடுதலை முழுமை கண்டு, பொருளாதார வளர்ச்சி துரிதப்படுவதற்கான பணிகளில் உலகமெங்கும் ஒரு பெரு முயற்சி உருப்பெற்று

வருகிறது. இதற்குக் காரணம் மேலே கூறப்பட்ட நம்பிக்கைதான்.

“நியாயமான சமுதாயத்தின் நிர்மாணம்” என்ற நூலை இந்த விரிவான கண்ணோட்டத்துடன்தான் ஆசிரியர் இயற்றியிருக்கிறார். தேசிய நிர்மாணக் கோட்பாடுகளை அவர் மதியூகத்துடன் நிர்ணயித்துக் கூறியிருக்கிறார். கிராமப்புற வளர்ச்சி எவ்வளவு உள்ளுறைச் சக்தி வாய்ந்தது என்பதை விளக்கியிருக்கிறார். தொழில் வளர்ச்சியும் சமூக நீதியும், அடைந்தாக வேண்டிய இரட்டை இலக்குகள் என்பதையும் அவர் விவரித்துள்ளார். சீனா, இந்தியா ஆகிய இரண்டின் பிரச்சினைகளையும் அவற்றின் எதிர்காலச் சாத்தியக் கூறுகளையும் விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்.

தம் கண்முன் நடப்பதைக் கூர்ந்து கவனிப்பதற்கு ஒரு இணையற்ற வாய்ப்பு தூதர் போல் ஸுக்குக் கிடைத்துள்ளது. அதுமட்டுமல்ல. இந்தப் புத்தகத்தில் ஆராய்ந்துள்ள சமூக, ராஜீய, பொருளாதாரப் பிரச்சினைகளை சமாளிப்பதில் பொறுப்புள்ள பங்கை அவர் வகித்துள்ளவர்.

தமது வாழ்க்கையின் ஆரம்பகாலத்தில் அவர் வெற்றிகரமாக தொழில் நடத்தியவர். பொது நலத்தைக் கருத்திற்கொண்டு ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் எவ்வாறு உழைக்க முடியும் என்பதை அவர் செய்துகாட்டியுள்ளார்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, ஜனாதிபதி பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் பதவிவகித்த காலையில், விலை, வாடகை, ரேஷன், கண்ட்ரோல்

நிர்வாகியாக அவர் பொறுப்பு வகித்துள்ளார். எல்லா வசதிகளையும் பூராவாக ஈடுபடுத்தியாக வேண்டிய ஒரு யுத்தம் விளைவித்த பிரமாதமான சிரமநிலைகளின் கீழ் ஒரு ஜனநாயக நாடு தனது பொருளாதாரக் கட்டுக்கோப்பை ஸ்திரப்படுத்திக் கொள்வது மாபெரும் தனி முயற்சி. அதை அவர் முன்னின்று நடத்திவைத்திருக்கிறார். ஜனாதிபதி ட்ரூமன் பதவிக் காலத்தில் யுத்தகாலப் பொருளாதாரம், சமாதானகால நிலவரத்துக்கேற்ப, ஒழுங்காக மாறுதல் காண்பதற்குப் பொருளாதார ஸ்திர நிலைமை டைரக்டர் என்ற வகையில் அவர் உழைத்திருக்கிறார். யுனெஸ்கோவின் குழந்தைகள் நிதியை நிர்வகிக்குங்காலையில், வறுமை, பசி, நோய் ஆகியவை எத்தகைய பிரச்சினைகள் என்பதை, உலகின் அதிர்ஷ்டக் குறைவுள்ள மக்களிடையே நேரிடையாகத் தாமே அவர் கண்டறிந்தவர்.

கனெக்டிக்கட் ராஜ்யத்து கவர்னர் என்ற வகையில் வளர்ச்சிக்கு இடையூருக இருந்துவந்த பல நெகிழ்ச்சியற்ற நிலவரங்களுக்கு ஈடுகொடுத்து, ராஜீய, பொருளாதாரச் சிரமங்களை அகற்றிய அனுபவம் அவருக்கு உண்டு. அவர் இடையருது உலகமெங்கும் சுற்றிப் பார்த்தவர். அதன்மூலம் உலக மக்களைப்பற்றிய விசேஷ அனுபவம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. உதவி ராஜாங்கக் காரியதரிசிப் பதவியை ஏற்றபோது, இந்த அனுபவமும், ராஜதந்திரத்தைப் பற்றிய விவரமான பரிச்சயமும் அவருக்குப் பெரிதும் பயன்பட்டன.

ஜனுதிபதி கென்னடியின் விசேஷப் பிரதிநிதியாக ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் போல்ஸ் பணியாற்றினுர். உலகமெங்கும் வளர்ச்சி கண்டுவரும் தேசங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அவர் உழைத்து வந்திருக்கிருர்.

நமது பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான பத்தாண்டுகளின் தொடக்கத்திலும் இறுதியிலும் தமது நாட்டின் தூதராக இந்தியாவிற்கு அவர் சேவை புரிந்தவர், புரிந்து வருபவர். தமது நாட்டின் சேவகராக மட்டுமன்றி, இந்தியாவின் ஆலோசகராகவும் நண்பராகவும் அவர் செயலாற்றி வருகிருர்.

டில்லி சர்வகலாசாலையில் 1963 டிசம்பரில் 10-ம் தேதி முதல் 13-ம் தேதிவரை நிகழ்த்திய உரைகளின் அடிப்படையில் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அவர் எழுப்பியுள்ள பிரச்சினைகள் உடனடியான முக்கியத்துவம் உள்ளவை. நீண்டகாலப் பொறுப்புக்கள் விஷயத்திலும் முக்கியமானவை. அவர் உரை நிகழ்த்தியதை நேரடியாகக் கேட்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் இப் பிரச்சினைகள்மீது நிறைய சர்ச்சை செய்தனர். அதைப்போலவே இதைப் படிக்கின்றவர்களிடையேயும் சர்ச்சையை இது ஊக்குவிக்கும் என நம்புகிறேன்.

சி. டி. தேஷ்முக்

டில்லி சர்வகலாசாலை, உப-அத்யட்சகர்

டிசம்பர் 14, 1963.

# உள்ளடக்கம்

# I

## சமுதாய நிர்மாணத்தின் ஐந்து தேவைகள்

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்ததை அடுத்த 18 ஆண்டுகளில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா பகுதிகளில் 150 கோடி மக்களுக்கு மேல் இதற்கு முன் எப்போதும், எங்கும் கண்டிராத வகையில், சமுதாய நிர்மாணப் பணிகளில் துணிவுடன் ஈடுபட்டிருக்கின்றனர்.

ரோடுகளை அமைப்பது, தொழில்களை உருவாக்கி நடத்துவது, அதிக உணவை உற்பத்தி செய்வது போன்றவைகளைவிட இன்னும் விரிவானவை இந்த முயற்சியின் நோக்கங்கள். சமுதாய நல உணர்வு இவற்றில் எடுப்பாகக் காணப் பெறுவது குறிப்பிடத்தக்க விஷயம். இதுவே சற்று அசாதாரணமானது.

தமது சுதந்திரத்தைப் பெற்று, தேசியப் புரட்சிகளை நடத்திவைத்துள்ள தேசங்கள், பெரும்பாலும் சில நியதிகளின் அடிப்படையில் உழைத்து ஏற்றம் கண்டவை. வளர்ச்சி கண்டு வரும் சமுதாயங்களில் வெகு சிலவே இதற்கு விலக்கானவை. தனிநபரின் சுதந்திரம், இன சமத்துவம், வளர்ச்சியின் பயன்களைப் பொதுவாக எல்லோரும் பகிர்ந்துகொள்வது என்பனவே எல்லாவற்றிலும் சிறந்து காணப்பெற்ற சாசுவத மான அந்த நியதிகள்.

நடைமுறையில் இந்த நியதிகள் அடிக்கடி அலட்சியம் செய்யப்படுகின்றனவாயினும், இவை அடிப்படையானவை என்று மதித்துச் செய லாற்றுவதற்கு மக்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர். எனவே, மனிதவர்க்கத்தில் மிகப் பெரும்பாலோரின் ஆழ்ந்த பேரவாக்களை இவை பிரதிபலிக்கின்றன என்று நான் நம்பு கிறேன்.

இவற்றை மதித்து நடக்கத் தம்மை மக்கள் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது உண்மையுணர் வுடன் கூடியது. தனிநபர்களின் உரிமைகளுக்கு மதிப்புத் தராத சர்வாதிகார அரசாங்கங்கள் கூட, ராஜீய அவசியம் என்று கருதி, இவற்றிற் குத் துதி பாடுகின்றன. இந்தியா, சீன நட்புற வின் எதிர்கால அடிப்படையாக, பஞ்சசீலக் கோட்பாடுகளை 1954-ம் ஆண்டில் மா சே-துங் வஞ்சனையுடன் ஏற்றுக்கொண்டது இதற்கு ஓர் உதாரணம். 1955-ம் ஆண்டில் சுதந்திரத்தின்

அடிப்படை நியதிகள் அனைத்தையும் சூ யென்லாய் அங்கீகரித்தது அதைப்போன்ற மற்றொரு நிகழ்ச்சி.

புதிதாக சுதந்திரம் அடைந்த மக்கள் தமது எதிர்காலத்தைப்பற்றிப் பொதுப்படையானதோர் கருத்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அத்துடன், அவர்களிடையே பொதுப்படையான பிரச்சினைகளும் இருக்கின்றன. உதாரணமாக அவை எல்லாமே வறுமை மிகுந்தவை. விஞ்ஞான, தொழில் நுட்பத் துறை அனுகூலங்களை அவை அடியோடு அடையவில்லை, அல்லது மிக மிகக் குறைவாகவே அவற்றைச் சுவைத்துப் பயனடைந்துள்ளன. அவை எல்லாவற்றிலுமே மக்கள் ஊட்டக் குறைவுடன் காணப்படுகின்றனர். பலர் நோய்வாய்ப்பட்டவர்கள். வெகு சிலரே தமது குழந்தைகளுக்குப் போதிய கல்வியை அளிக்கக்கூடிய வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

இந்த சிரமங்கள் எல்லாமே பயங்கர மானவை தாம். எனினும், அவற்றையும் மிஞ்சித் தமது நிலைமையைச் சீர்திருத்திக்கொள்வது என்ற திட உறுதி அவர்களிடம் பிரகாசமாகக் காணப்படுகிறது. அண்மையில் தாம் வரைந்த ஒரு கட்டுரையில் ஆர்னல்ட் டாயின்பி என்ற வரலாற்று ஆசிரியர் இந்த அம்சத்தைச் சுட்டிச் சொல்லியிருக்கிறார்: "பயங்கரமான குற்றங்கள் நமது காலத்தில் இழைக்கப்பட்டுள்ளன. வியக்கத்தக்க புது விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால், இவற்றிற்காக இந்தக்

563



காலத்தை, எதிர்காலத்தில் நினைவுகொள்ள மாட்டார்கள். வரலாற்றிலேயே முதல் தடவையாகப் பண்பாட்டின் நலன்கள் அனைத்தும் மனித வர்க்கம் பூராவுக்குமே கிடைக்கச் செய்வது முற்றிலும் சாத்தியமானது என்று இக்காலத்தில் மனிதன் துணிந்து நம்பினான். இதற்காகத் தான் நம்மை நினைவுகொள்வர்.''

ஒரு காலத்தில் வளர்ச்சியைப்பற்றிய பொருளாதாரமும், ராஜீயமும், கற்றறிந்த புலவர்களுக்கு மட்டுமே சிரத்தையுள்ள விஷயங்களாக இருந்து வந்தன. ஆனால் மேலே குறிப்பிட்ட புது நம்பிக்கையின் காரணமாக, இவை உலகின் கவனத்தை ஈர்த்துள்ள விஷயங்களில் முதலிடம் பெற்றுள்ளன. பத்தொன்பதாவது நூற்றாண்டில் அமெரிக்காவும் ஐரோப்பாவும் வளர்ச்சி கண்டது சாவதானமான மந்தகதியில் தான். ஆனால், நல்வாழ்க்கை வேண்டுமென்று உலகெங்கும் வளர்ந்து வருகின்ற கோரிக்கையைத் திருப்தி செய்விப்பதற்கு அந்தக் காலத்து வேகம் போதுமானதாக இருக்கவில்லை. பொருளாதார வளர்ச்சியும், ராஜீய சமுதாய நீதியும் தமக்குக் கிடைக்கும் என்று இப்பொழுது மக்கள் எதிர்பார்க்கின்றனர், கிட்ட வேண்டுமெனக் கோருகின்றனர். அவற்றை உறுதி செய்வதற்குத் தம்மிடமுள்ள வசதிகள் அனைத்தையும் முழு அளவில் ஈடுபடுத்தி எல்லாவிதமான சிரமங்களையும் அரசாங்கங்கள் மேற்கொண்டாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வளர்ச்சியில் ஆர்வம் என்ற இந்த நவீன அறைகூவல் பிற்பட்ட நிலையிலுள்ள கண்டங்கள் என்று கருதப்படும் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவை மட்டிலுமே தலைதூக்கி யிருப்பதாகக் கருதலாகாது. உற்பத்தித் துறை களில் முதன்மையாக இருக்கும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பல நாடுகளில், செல்வமும் வறுமையும் அதிர்ச்சி தரக்கூடிய வேறுபாட்டு நிலையில் காணப்படுகின்றன. எல்லோரது கவனத்தையும் அவை ஈர்க்கின்றன. கிரீஸின் கிராமப் பகுதிகளில், இத்தாலியின் தென் பிராந்தி யத்தில், பிரான்ஸின் தென்பாகத்தில், அமெரிக்க நாட்டின் சில பகுதிகளிலே, சோவியத் யூனியனின் பெரும் பகுதிகளில் இருந்துவரும் நிலவரத்துக்கும் இது பொருந்தும். வறுமையை முற்றிலும் அகற்றிவிட்டதாக எந்த நாட்டினரா லும் சொல்ல இயலாது. சுதந்திர சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான அடிப்படைகள் என்று கருதப்படும் சம சந்தர்ப்பத்தை இனம் சமயம் என்ற பாகுபாடு இல்லாமல் ஒவ்வொரு பிரஜைக்கும் கிடைப்பதற்கு வழி செய்துவிட்ட தாக எந்தப் பெரிய சமுதாயத்தினராலும்கூடச் சொல்ல இயலாது.

வளர்ச்சிக் குறைவுள்ள தேசங்களின் பிரச் சினைகளிடையே, அவற்றில் இருந்துவரும் வாய்ப் புக்களிடையே, மிக விரிவான வேறுபாடுகள் உண்டு. லத்தீன் அமெரிக்காவின் பெரும் பகுதி யில் ராஜீய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு

பிரதான இடையூறு இருந்து வருகிறது. இது எல்லா சுதந்திர சமுதாயங்களிலும் தென்படுகின்ற வில்லங்கம்தான். தனி உரிமை கொண்டாடும் அந்தஸ்தினர் காலப்போக்கை உணர்ந்து அதற்கு இசைவாக நடந்துகொள்வதில்லை. இவ்விஷயத்தில் அவர்கள் காட்டுகின்ற பிடிவாதமான தயக்கந்தான் இந்த இடையூறு. லத்தீன் அமெரிக்காவிலுள்ள சாகுபடி நிலத்தில் பாதியை 1½ சதவிகிதத்துக்கும் குறைவான பேர் தமது உடைமைகளாக அனுபவித்து வருகின்றனர். பல பேரிடம் 15 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள பூஸ்திதிகள் இன்னும் இருந்து வருகின்றன.

ஒரு சில லத்தீன் அமெரிக்க தேசங்களில் மட்டுமே காரியகரமான வருமான வரி விதிக்கப்படுகிறது. அரிதாக உள்ள அந்நியச் செலாவணி அவசியமில்லாத ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுகிறது. பந்தோபஸ்தை நாடி வெளிநாடுகளுக்கு உள்நாட்டு மூலதனம் அனுப்பப்படுகிறது. இவை விஷயமாகப் போதிய வரம்புகள் வெகு சில தேசங்களில் தான் இருக்கின்றன. தனிநபர் வீதாச்சார வருமானச் சராசரியைக் குறிக்கும் புள்ளிவிவரங்கள், மேலெழுந்தவாறு பார்க்கையில் திருப்திகரமாகத் தோன்றலாம். ஆனல் திடுக்கிடவைக்கும் வருமான வேறுபாடுகள் இருக்கும் நிலவரம் அவற்றின் பின்னல் மறைந்து கிடக்கின்றது. போதிய வசதியில்லாத மிகப் பெரும்பாலோரின் மனதில் கசப்பை வளர்த்து, ஆசாபங்கத்தில்

அவர்களை ஆழ்த்துகின்றன இந்த வேறுபாடுகள்.

துரிதமான தேசிய வளர்ச்சிக்கு ஆபிரிக்காவில் காணப்பெறும் பிரதான இடையூறுகள் வேறுவகைப்பட்டவை. பெரும்பாலான சாகுபடி நிலங்கள் தனித்தனியாக இயங்கும் இனக் கோஷ்டிகள் வசம் இருந்து வருகின்றன. தேவையையும் தகுதியையும் கருத்திற்கொண்டு, தனிப்பட்ட குடும்பங்களுக்கு அவை வழங்கப் பெறுகின்றன. பல பகுதிகளில் இந்த ஏற்பாடானது இப்போது நவீன ஜனநாயகக் கூட்டுறவுகளாக உருப்பெற்று வருவது இயல்பே. பெரும் செல்வர்கள் அதிகாரத்தில் வேரூன்றி இருக்கின்ற நிலவரம் அரிது. எனவே வரி செலுத்துவதற்குள்ள தகுதியின் அடிப்படையில் எழுகின்ற எதிர்ப்பு இங்கு பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. இன்னும் பல்லாண்டுகள் வரை துரிதமான வளர்ச்சிக்குப் பிரதான இடையூருக இருக்கக்கூடியவை போதிய கல்வி இல்லாமையும், அடிப்படையான தொழில் திறன்கள், நிர்வாகத் தகுதி, அரசாங்கப் பரிபாலன அனுபவம் முதலியவை இல்லாமையும், தனிநபர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கப்படாத நிலவரமுமாகத் தான் இருந்து வரும்.

ஆசியாவில் இன்னும் வேறுவகைச் சிரமங்களைக் காண்கிறோம். அவை தேசத்திற்குத் தேசம் விரிவாக வேறுபடுகின்றன. வசதிகளைக் கருத்திற்கொண்டு ஒப்புநோக்கிப் பார்க்கையில்,

ஜனத்தொகை வளர்ச்சி மிகுதியாகி வருகின்ற பிரச்சினை அவற்றில் ஒன்று. தலைமுறை தலைமுறையாகச் சுரண்டலுக்கு ஆளாகி, கவனிப்பாரற்று இருந்து வந்த நிலைமையில் வேரூன்றிக் கிடப்பதால், கிராமப் பகுதிகளில் காணப்படுகின்ற அலட்சிய புத்தி குறிப்பிடத்தக்கது. நிர்மாண ரீதியில் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதைவிட வாணிபத்திலும் ஹேஷ்ய பேரங்களிலும் அதிக அக்கறை காண்பிக்கின்ற தன்மை இவற்றில் ஒன்று.

செல்வம் படைத்த நாடாயினும், வறுமை மிக்க தேசமாயினும், அரைகுறையான நிலையில் இருந்து வருகின்ற, விரைவில் நிறைவேற்றியாக வேண்டிய, பணிகள் ஒவ்வொன்றிலும் நிறைய இருந்து வருகின்றன என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அவற்றின் அரசாங்கங்கள் நிதானம் தவறாமல் இப்பிரச்சினைகளைக் கவனித்து வழி செய்தாக வேண்டும். இப்போது நாம் இங்கு காண்கின்ற விஷயம், வளர்ச்சிக் குறைவாக உள்ள கண்டங்களில், சமுதாய நிர்மாண நடைமுறைகளை எந்தெந்த விசேஷ அம்சங்கள் பாதிக்கின்றன என்பதைக் கண்டறிந்து தெளிவுபடுத்துவதுதான்.

வேகமாக, சமநிலை வாய்ப்புடன் வளர்ச்சி காண வேண்டுமாயின், அதற்கு ஐந்து அடிப்படைகள் தேவை என்பதைச் சமீப ஆண்டுகளின் அனுபவம் அறிவுறுத்துகின்றது. இவற்றில் முதலாவது சாதன வசதி; மற்ற நான்கும்

பொதுமக்களின் மனப்பான்மையையும், மனிதத் திறன்களையும் பற்றியவை. இந்த ஐந்து அத்தியாவசியத் தேவைகள் பின்வருமாறு :—

1. உள்நாட்டிலும், அயல்நாடுகளிலிருந்தும் போதிய மூலதனம் கிடைக்கச் செய்வது.
2. வளர்ச்சிக்கு மக்களின் சொந்தத் தனி முயற்சி மிக மிக அவசியம். அதை அவர்கள் அளிக்கும்படி சொல்லிச் செய்ய வைப்பதற்குத் தேவையான பொருட்களும் சேவைகளும் கிடைத்தாக வேண்டும்.
3. நிர்வாகம், அரசாங்க ஆதிக்கம், பொருள் உற்பத்தி, குடிமை வாழ்வு ஆகிய துறைகள் அனைத்திலும் போதிய திறமை ஏற்பட்டாக வேண்டும்.
4. இந்தியா, பாகிஸ்தான் போன்ற மித மிஞ்சிய ஜனநெருக்கம் உள்ள நாடுகளில் இருந்து வரும் வேகமான ஜனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான இணக்கமும் திறமையும் தேவை.
5. மக்களுக்கும் அவர்களது தலைவர்களுக்கு மிடையே பயனுள்ள தொடர்புகள் இருந்து வருவதுடன் தேசிய நலன்களைப் பெரிதாக மதித்துச் செயல்படும் ஒற்றுமையுணர்வு காணப் பெறுதல் வேண்டும்.

இரண்டாவது உலக யுத்தமானது ஐரோப்பாவையும், ஜப்பானையும் தவிடுபொடியாக்கி

ஆசாபங்கத்தில் ஆழ்த்திவிட்டிருந்தது. அந்த நிலையினின்று வியக்கத்தக்க வகையில் மீண்டு, அவை மறுமலர்ச்சி கண்டதற்குக் காரணம் இந்த ஐந்து அம்சங்கள்தாம். ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் வளர்ச்சி கண்டு வருகின்ற தேசங்களில் இந்தத் தகுதி களைச் சிருஷ்டித்தாக வேண்டும். ஒழுங்கான ஓர் அரசியல் கட்டுக்கோப்புக்கு உட்பட்டு மக்களது வாழ்க்கை நிலைமையை உயர்த்த விரும்புகின்ற எல்லோரும் இந்தப் பணிக்கு முதலிடம் தருதல் வேண்டும்.

## I

அத்தியாவசியமான இந்த ஐந்து தேவைகளை யும் வரிசைக்கிரமமாக எடுத்துக்கொண்டு பார்ப் போம். வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனம் விடு முதலாவதைப்பற்றிய பிரச்சினையை முதலில் எடுத்துக் கொள்வோம்.

தேவைப்படுகின்ற மூலதனத்தின் பெரும் பகுதியை உள்நாட்டு வசதிகளினின்று திரட்டுவது எந்தத் தேசத்திலும் தவிர்க்க முடியாத நிலைமை. தனி நபர்கள் வரவர அதிகமாக மிச்சப்படுத்தி முதலீடு செய்ய வேண்டும். அல்லது பல்வேறு வகைகளில் வரிகளைப் போட்டும், தமது சொந்த உபயோகத்திற்கு மூலதனத்தை மக்கள் பயன் படுத்துவதற்கு வரம்பு கட்டியும் இந்த மூலதன வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

வளர்ச்சி கண்டு வருகின்ற பெரும்பாலான நாடுகளில் தனிநபர்கள் மிச்சப்படுத்தும் தொகைகள் தாம் மூலதனத்திற்குப் பிரதான ஆஸ்பதங்களாக இறுதியாக அமைய வேண்டியவை. ஆனல் இந்த வசதியைத் திறம்படப் பயன்படுத்துமுன், சமுதாயத்தின் நெடுநாளைய மனப்பான்மைகளை மாற்றவேண்டியிருக்கும். தமது பொன் நகைகளையும், தேவைக்கு மிகுதியாகவுள்ள நிலங்களையும், வழிவழியாக நிதி விஷயங்களில் பந்தோபஸ்து உணர்வை அளித்து வந்த பிற வாய்ப்புக்களையும் கைவிட வேண்டுமென மக்களைக் கோருவதற்கு முன்னர், சமூக, பொருளாதாரச் சூழ்நிலையானது, போதிய அளவு பந்தோபஸ்து உள்ளதாக அமைந்தாக வேண்டும்.

வளர்ச்சிக் குறைவாக உள்ள பெரும்பாலான நாடுகளில் ஆரம்பதசையில் தேவைப்படுகின்ற மூலதனத்தைப் பலவகைப்பட்ட வரி ஆஸ்பதங்கள் மூலமாகத்தான் அரசாங்கம் பெரும்பாலும் அடைந்தாக வேண்டும். உதாரணமாக, பெரிய நில உடைமைகள் மீது வரியைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே போகலாம். இதன் மூலம் வருவாய் கூடுதலாகும். அதே சமயத்தில் குடும்பத்தினர் திறமையுடன் நிர்வகிக்கக்கூடிய அளவுக்குப் பல பண்ணைகள் உருவாகி வளர்ச்சி காண்பதற்கு வேண்டிய ஊக்கத்தையும் அளிக்கலாம். விற்பனை வரிகளும், எக்சைஸ் வரிகளும் அதிகப்படி வருவாயைத் தரக்கூடியவை. பொறுக்கி எடுத்த அபிவிருத்தித் திட்டங்களில் மூலதனம்

போடுவதற்கான சாதனங்களாகவும் இவை பயன்படும்.

விகிதங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்ற வகையில் வருமானங்கள் மீதும் வரிகளை விதிக்கலாம். வருமான வரி விகிதம் வரவர அதிகரித்துக் கொண்டே போகின்ற நில வரமானது, தனிப்பட்டவர்கள் மீதப்படுத்தி விடு முதல் செய்வதற்கு ஆர்வம் இல்லாது செய்து விடுகிறது என்ற வாதம் நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. அமெரிக்காவில் அரை நூற்றுண்டுக்கு முன்னர் இத்தகைய வரி, முதலாவதாக விதிக்கப்பட்டது. அப்போது வேதனைக் குரல்கள், மிகத் தெளிவாக, உரக்க, வீறிட்டெழுந்தன. ஆனல் அமெரிக்காவின் தொழில் உற்பத்தித் தகுதியை வருமான வரி யானது பழுதுபடுத்தி விட்டது என்பதற்கு ருசுவே கிடையாது. அதற்கு நேர்மாருக, ஜனநாயக ரீதியில், வருமானம் மறு வினியோக மாவதை அது சாத்தியமாக்கியுள்ளது. அதனல் பெரும்பாலான மக்களிடம் பண்டங்களை வாங்கு கின்ற சக்தியானது புதிதாகச் சிருஷ்டிக்கப்பட் டுள்ளது. இதன் காரணமாக, வரவர உற்பத் தியை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே போகின்ற ரீதியில் பொருளாதாரம் வளர்ச்சி காண்பதற்கு அது தூண்டுகோலாக இருந்து வந்திருக்கிறது.

வரிகள் மூலமாகவும், மக்கள் பண்டங்களை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்தியும் உள்

நாட்டில் திரட்டக்கூடிய மூலதனத்தின் அளவுக்குத் தெளிவான வரம்புகள் உண்டு. எக்சைஸ் வரி, விற்பனை வரி போன்றவை சுலபமாக வசூலிக்கக் கூடியவை. ஆனால், அவற்றின் பளு அதைத் தாங்குவதற்குத் தகுதியில்லாதவர்கள் மீதுதான் மிகக் கடுமையாக அழுத்துகின்றது. எனவே, குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அவசியமான பண்டம் வாங்கும் சக்தியை அவர்கள் விஷயத்தில் அது கம்மியாக்கிவிடுகிறது. வருமானவரி போன்றவை பொருளாதாரத்திற்கு அதிகபட்ச நன்மையைத் தரக்கூடியவை. ஆனால் வசூல் விஷயத்தில் அவை மிகக் கடினமானவை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். மேலும் வளர்ச்சி கண்டுவரும் தேசங்களில் பெரிய வருமானம் உள்ளவர்கள் மிகமிகச் சிலரே. எனவே, இந்த வரி ஆஸ்பதத்தின் மூலம் கிடைக்கக்கூடிய தொகை ஒரு வரம்புக்கு உட்பட்டதாகத்தான் இருக்க முடியும்.

மூலதனம் திரளுவதற்கான பிரதான சாதனங்களில் ஒன்று கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்வது. ஆனால் நாம் விரிவான அஸ்திவாரத்தின்மீது உருவாக்க விரும்புகின்ற பொருளாதார வளர்ச்சியை அத்தகைய ஏற்றுமதிகள் மட்டுமே ஒழுங்கு செய்யக்கூடியவை அல்ல. காபி, வெள்ளீயம், எண்ணெய் மற்ற அடிப்படையான மூலப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி மூலம், பல லத்தீன் அமெரிக்க உற்பத்தியாளருக்கு மிகப் பெரிய வருமானங்கள் தாராளமாகக் கிடைத்

துள்ளன. ஆனல் இவ்வாறு கிடைக்கின்ற மொத்த வருமானத்தில் ஒரு சின்னஞ்சிறு வீதாச் சாரந்தான் வயல்களிலும், சுரங்கங்களிலும் உழைக்கின்ற மக்களை வந்தடைகின்றது. எனவே, செல்வர்களுக்கும் வறியவர்களுக்கு மிடையே யுள்ள பிளவு வரவரப் பெருகிக்கொண்டே வந்திருக்கிறது. மேற்கு ஆசியாவில் எண்ணெய் வளம் அபரிமிதமாக இருக்கிறது. எனினும், பெரும்பாலான மக்கள் பரம தரித்திர நிலையில் தான் அங்கு வாழ்கின்றனர்.

தனது பொருளாதாரத்தை நவீன மயமாக்கிக் கொள்வதில் வெற்றிகண்ட ஒவ்வொரு தேசமும், முற்போக்கான தேசங்களிடமிருந்து கடன்களை யும், மானியங்களையும் பெற்றுத்தான் நன்மை அடைந்துள்ளது என்பது தெளிவு. இதில் ஆச்சரியம் எதுவுமில்லை. உதாரணமாக, பத்தொன்பதாவது நூற்றுண்டில் அமெரிக்கா வளர்ச்சி கண்ட வேகத்திற்கு முக்கியமான காரணம் ஐரோப்பாவிலிருந்து பெருமளவில் தனிப்பட்டோரின் விடுமுதல் வந்து சேர்ந்தது தான். 1912-ம் ஆண்டுக்குள் அமெரிக்காவில் அயல்நாட்டு விடுமுதலானது 600 கோடி டாலராக உயர்ந்துவிட்டது. அக்காலத்திய நிலவரத்தில் இது மாபெரும் தொகையே.

ஜப்பான் நீங்கலாக, அந்நிய மூலதன உதவி இல்லாமல் வளர்ச்சி கண்டு, தனது பொருளா தாரத்தை நவீனமாக மாற்றியுள்ள ஒரே தேசம் சோவியத் யூனியன்தான். சோவியத் யூனியனில்

ரஷ்ய மக்களை நிர்த்தாட்சண்யமாகக் கசக்கிப் பிழிந்தனர். தவிர ஈடு ஜோடில்லாத இயற்கை வளங்கள் ரஷ்யாவில் மிகுதியாக உண்டு. எனவே, இவை இரண்டுமாகச் சேர்ந்து போதிய விடுமுதல் கிடைக்கச் செய்தன. விதிவிலக்கு என்று கருத வேண்டிய இந்தத் தேசம் அடைந்துள்ள வெற்றி மிகமிக அற்பமானது. எனினும், 1930-க்கும் 1940-க்குமிடையே, இவ்வளவு இயற்கை வசதிகள் இருந்தபோதிலும், சோவியத் பொருளாதாரமானது நிர்ப்பந்தத்துடன்கூடிய அபிவிருத்தியின் பளுவைத் தாங்க முடியாமல், ஏறக்குறைய குமுங்கி விட்டது என்றே சொல்ல வேண்டும்.

சோவியத் யூனியனிடம் வரம்பற்று இருந்து வரும் பல வசதிகள் சீனவிடம் கிடையாது. எனவே, பெரிய அளவில் அந்நிய உதவி கிடைக்காமல், ஸ்திரமாக வளர்ச்சி காணக்கூடிய பொருளாதாரத்தை அங்கு வெற்றிகரமாக உருவாக்க முடியாது. இப்போதைய சந்தர்ப்பச் சூழ்நிலையில் அத்தகைய அந்நிய உதவி சீனவுக்குக் கிடைப்பது அரிது.

அந்நிய மூலதன உதவிப் பிரச்சினை விஷயத்தில் நமக்குத் தெளிவானதோர் கண்ணேட்டம் எப்போதுமே தேவை. பொருளாதார வளர்ச்சியானது, ஜனநாயகச் சூழ்நிலையில், போதிய வேகத்தில் ஏற்றம் காண வேண்டுமாயின், அந்நிய உதவி கிடைப்பது ஜீவாதாரமான முக்கியத்துவமுள்ள விஷயமாகிறது. ஆனல் உதவியைப்

பெறுகின்ற அரசாங்கமும் மக்களும் எவ்வாறு சுறுசுறுப்புடன், திறம்பட அதைப் பயன்படுத்து கின்றனர் என்பதையே இறுதி வெற்றி முக்கிய மாகப் பொறுத்திருக்கும்.

சொந்த வசதிகளைத் திரட்ட இயலாதுபோய், பொருளாதாரச் சிரம நிலைகளில் ஆழ்ந்துவிட்ட பல தேசங்களுக்குக் கடன்களையும், மானியங்களை யும் கொடுத்து அவற்றின் வளர்ச்சிக்கு அமெ ரிக்கா உதவியிருக்கிறது. பொருளாதார, சமு தாய நல மாறுதல்களுக்காக உழைக்கின்ற சக்தி களுக்கு ஊக்கமளிப்பதுதான் நமது கொள்கை. பல சந்தர்ப்பங்களில், நாம் தருகின்ற உதவியை, இப்போது இருந்து வருகின்ற நிலவரத்தை அரண் செய்து காப்பதில் அக்கறையுள்ள பிற்போக்குத் தன்மையுள்ள அரசாங்கங்கள், மாறுதலை நாடும் சக்திகளுக்கு எதிராகப் பயன் படுத்துவதைக் காண்கிறோம்.

யு. எஸ். உதவி மிகமிகக் குறைந்தபட்ச பயன் அளித்துள்ள தேசங்கள் அனைத்திலும் பொதுவான சில தன்மைகள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலும் வரி விதிப்புத் திட்ட மானது நீதியற்றதாகவும், திறமையற்றதாகவும் இருந்து வந்துள்ளது. உள்நாட்டில் மிகமிகத் தேவைப்படுகின்ற முதலீட்டு நிதிகள் அயல் நாடுகளுக்குப் போகுமாறு அனுமதிக்கப்பட் டுள்ளன. ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி அந்நியச் செலாவணியை விழுங்கிவிட்டது.

அரசாங்கத்தில் ஊழல் மலிந்து கிடக்கிறது.

பெரும்பாலான மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அபிவிருத்தித் துறைகளில் அரசாங்கம் செயலற்றுக் காணப்படுகிறது. சாகுபடியாளர் சொந்த முயற்சி எடுத்துக்கொண்டு பாடுபடுவதை அடக்குகின்ற வகையில், நில உரிமை விதிமுறைகள், பழைய ஆதிக்கத்தன்மை படைத்தனவாகவே இருந்து வருகின்றன. இதன் விளைவாக, விளைபொருட்களின் உற்பத்தி தடைப்படுகிறது. அதே சமயத்தில் தேசமெங்கும் அநீதி நிலவுவதை மக்கள் கசப்புடன் காண்கின்றனர்.

இந்த அத்தியாவசியமான தேவை விஷயத்தில் எனது அனுபவம் மிகத் தெளிவானது; எந்தத் தேசங்கள் தமது சொந்த வசதிகளைத் திரட்டிப் பயன்படுத்திக் கொள்வதற்கு இணக்கமும் தகுதியும் உள்ளனவாக இருக்கின்றனவோ, அவைதாம் அந்நிய முதலீட்டினால் பயனுள்ள வகையில் ஏற்றம் காண்கின்றன. வெற்றி தோல்வியைத் திடமாக நிர்ணயிக்கின்ற ஒத்தாசையை அந்தத் தேசங்கள் விஷயத்தில் அந்நிய உதவி அளிக்கின்றது. அவசியமான சுயமுயற்சி இல்லாத நாடுகளில் அந்நிய உதவியின் பலாபலன்கள் அநேகமாக பூஜ்யம் என்றே கூறிவிடலாம்.

அயல்நாடுகளுக்குப் பொருளாதார உதவி அளிப்பதற்கு அண்மையில் அமெரிக்காவில் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. தவறான வழிமுறை என்றுங்கூட அதைச் சொல்லலாம். ஆனால்

தமது சொந்த முயற்சியின் மூலம் பொருளாதார, சமுதாய நலப் பிரச்சினைகளை ஒழுங்கு செய்ய முடியாமல் இருக்கின்ற அரசாங்கங்களுக்கு நிதி உதவியை எங்கள் தேசம் அளித்தாக வேண்டுமென்ற கட்டாயம் எதுவும் கிடையாதென்ற ஒரு திடநம்பிக்கை இருந்து வருகிறது. அதனின்று எழுந்ததுதான் இந்த எதிர்ப்பு.

இக் கருத்தினர் விஷயத்தில் எனக்கு மிகுந்த அனுதாபம் உண்டு. நாம் அளிக்கின்ற பொருளாதார உதவியானது, அதைப் பெறுகின்ற நாட்டின் தகுதியையும், தனது சொந்த வசதிகளைப் பயனுள்ள வகையில் உபயோகிப்பதற்கான இணக்கத்தையும் பொறுத்ததாகவே இருக்க வேண்டும், அதற்குச் சில தரங்களை நிர்ணயிக்க வேண்டுமென்று யு. எஸ். காங்கிரஸில் மெம்பராக இருந்தகாலையில் நானே பிரேரித்தது உண்டு.

தமது சொந்த மரபுகளுக்கும் பண்பாடுகளுக்கும் இசைவாக, சுபிட்சத்தையும், நல் வாய்ப்பையும் வரவர அதிகமாக மக்கள் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் வளர்ந்துகொண்டே வருகின்ற ரீதியில், சுதந்திர நாடுகள் திறம்பட வளர்ச்சி காண வேண்டுமென்பதுதான் உதவி அளிப்பதன் ஒரே பிரதான நோக்கம். வேறு எந்த அடிப்படையிலும் நாம் தருகின்ற பொருளாதார உதவியானது இந்த நோக்கம் கைகூடுவதற்குத் துணை புரியாது. சில அசாதாரணமான ராஜீயச் சூழ்நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்காகக் காணப்பெறும்.

இப்போதுள்ளவைகளைவிட இன்னும் சிறப்பான திட்டங்களையும் உற்பத்திப் பெருக்கிற்கான நடைமுறைகளையும் உருவாக்குவது பெரிய பிரச்சினை. வளர்ச்சி கண்டுள்ள தேசங்களின் மொத்த தேசிய வருமானம் இப்போது ஆண்டு தோறும் சுமார் 90 ஆயிரம் கோடி டாலர். இதில் ஒவ்வொரு வருஷமும், ஒரு சதவிகிதம், வளர்ச்சிக் குறைவுள்ள நாடுகளுக்குக் கடனாகத் தரப்படுமாயின், பணக்கார தேசங்களுக்கும் வறுமை மிகுதியான நாடுகளுக்குமிடையேயுள்ள பிளவு குறுகிக்கொண்டு வரும். இதன் விளைவாக கொடுப்போருக்கும் நன்மை உண்டு, வாங்குவோருக்கும் நன்மை உண்டு. இருதரப்பினரின் தன்மதிப்பும் இதனால் உயரும். நாம் வசிக்கின்ற இந்த உலகமானது எல்லோருக்குமே பந்தோபஸ்து உள்ளதாகவும் சிறந்ததாகவும் அமைய முடியும்.

## II

ஐந்து அடிப்படை விஷயங்களில் இரண்டாவதான தேசிய வளர்ச்சியை எடுத்துக்கொள்வோம். கஷ்டப்பட்டு, சுயமாக முயற்சி எடுத்துக்கொண்டு உழைப்பவர்களுக்கு, நியாயமான அடிப்படையில், போதிய பயன் கிடைத்தாகவேண்டியது அவசியம்.

வரி மூலம் திரட்டக்கூடிய தொகைக்கு ராஜீய வகையில் ஒரு வரம்பு இருக்கத்தான் செய்யும். மக்கள் தமது அவாக்களைக் கட்டுப்படுத்திக்

கொண்டு, எளிய வாழ்க்கையை நடத்த வேண்டு மென்பதற்கும் அதேபோல வரம்பு உண்டு. செல்வம் ஒரு சீராக விநியோகிக்கப்பட்டிராமல் உள்ள நிலைமையின் காரணமாக, அரசாங்க அமைப்பு முறை ஊழல் மயமாகி, அதன் நாண யத்தில் மக்கள் நம்பிக்கையற்றுப் போகிற ஒரு நிலைமை நீடிப்பதற்கும் ஒரு வரம்பு உண்டு. அத்தகைய சர்க்காரைப் பதவியிலிருந்து விரட்டும் ஆர்வம் எழத்தான் செய்யும்.

வாழ்க்கையை வளப்படுத்தக்கூடிய பொருட் களை, உற்பத்தியில் ஈடுபட்டிருப்போருக்கு அளிக் காமல் மறுத்து, அவர்களைக் கருணையின்றிக் கசக்கிப் பிழிவதன் மூலம், சற்றுக் கூடுதலான விகி தத்தில் முதலீடு திரளக்கூடியவாறு சர்வாதிகார அரசாங்கங்கள் நிர்ப்பந்தம் செய்துவரும். அதே சமயத்தில், தேசத்தின் பெயரால், மக்கள் இடை யருது பெரு முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்ற பிரசாரம் மட்டும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

ஆனால் கெடுபிடி மிகக் கடுமையாகவுள்ள அரசாங்க ஆதிக்கத்திலுங்கூட கோஷங்களும் பிரசாரமும் ஓரளவு மட்டுமே பயன்படவல்லவை. இதை சோவியத் யூனியன் அனுபவபூர்வமாகக் கண்டறிந்துள்ளது. தனது பயிர்த்தொழிலை தேசியப் பொதுஜன உரிமை அடிப்படையில் இணைத்து நடத்தும் பணியில் 40 ஆண்டுகளுக்கு மேலாக அந்நாட்டின் அரசாங்கம் ஈடுபட்டு வந்திருக்கிறது. ஆனால் உண்மையில் தமக்குச் சொந்தமானவை என்று சோவியத் விவசாயிகள்

கருதுகின்ற சின்னஞ்சிறு காய்கறித் தோட்டங்களில், விளைபொருள் உற்பத்தியானது, அரசாங்கப் பண்ணைகளில் இருக்கும் நிலவரத்தைவிட அதிக தரமானதாக இருந்து வருகிறது. அரசாங்கப் பண்ணைகளில் அதிக உற்பத்திக்குத் தூண்டுகோலாக சுயமுயற்சிகள் போதிய அளவு உருப் பெறுவது இல்லை. சோவியத் யூனியன் சமத்துவ அடிப்படையில் இயங்குவதாகக் கருதப்படுவது உண்டு. ஆனால் அந்நாட்டில் ஆலைத்தொழிலாளருக்குத் தரப்படும் ஊதியம், போனஸ் போன்ற வசதிகளை ஒப்புநோக்கிப் பார்த்தால், அமெரிக்காவில் இருந்து வருவதைவிட அதிகமான வேறுபாடுகள் அவற்றிடையே இருந்துவருவதைக் காணலாம். உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பது என்ற நடைமுறையானது, சோவியத் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பெருக்கிற்குப் பெரிதும் துணை புரிந்திருக்கிறது.

எனவே, ஒரு நாட்டில் எத்தகைய ராஜீய சித்தாந்தம் செல்லாகி வந்தபோதிலும், வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனம் பயனுள்ள வகையில் திரண்டெழுவது, உடனடியாக, கண்ணுக்கு மெய்யாக நன்மைகளை மக்கள் அடைவதையே முக்கியமாகப் பொறுத்திருக்கும். மூலதனம் சேர வேண்டிய அவசியத்தை முன்னிட்டு மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தக்கூடிய பொருட்கள், பிற சேவா வசதிகள் முதலியவற்றை அலட்சியம் செய்துவிடலாகாது. அவை சிறுபிள்ளைத் தனமான அலங்கார அம்சங்கள் என்று கருதுவது

சரியாகாது. வளர்ச்சி காண்பதில் அக்கறையுள்ள எந்தத் தேசமும் இந்த அம்சங்களைப் புறக்கணிக்க இயலாது. உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பது என்ற திட்டம் எவ்வளவு அடக்கமானதாக இருந்த போதிலும், உண்மையில் தேசத்தின் செல்வம் வளர்ச்சி காண்பதற்கு வேண்டிய சக்தி அதனின்று தான் வெளிப்பட முடியும்.

சைகிள், ஜோடுகள், ஆடை, பாத்திரங்கள், சாதாரண குடும்பச் சாதனங்கள், டார்ச் லைட்டுகள் அன்றாடப் பணிகளைச் சிரமமின்றி செய்வதற்கான சுய உதவிச் சாதனங்கள் முதலியவைதாம் வாழ்க்கையை வளப்படுத்தும் வசதிகள் எனலாம். அவற்றை அளிப்பதன் மூலம் வேலைவாய்ப்புக்கள் பெருகும். வளர்ச்சி காண்கின்ற பெரும்பாலான நாடுகளில் கனரகத் தொழில்கள் வேலைவாய்ப்பைக் கணிசமாக அதிகரிக்கக் கூடியவை அல்ல.

சமுதாய நிர்மாணப் பணிகள் வெற்றி காண வேண்டுமாயின், தனது வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்வதற்கான வாய்ப்பு தனி நபருக்கு அளிக்கப்படவேண்டும். அதுமட்டுமல்ல. தனக்கென ஓர் உரிமையும் அந்தஸ்தும் கண்ணியமும் அவனுக்கு இருந்தாக வேண்டும். தனது அரசாங்கத்தின் அந்தரங்கசுத்தியிலும், தகுதியிலும் அவனுக்கு நம்பிக்கை இருந்தாகவேண்டும்.

## III

தேசிய வளர்ச்சிக்கான மூன்றாவது அத்தியாவசியத் தேவையை இப்போது கவனிப்போம்.

நிர்வாகம், பொருள் உற்பத்தி, குடிமைத் திறன் ஆகிய மூன்றிலும் தகுதி வாய்ந்தவர்கள் நிறையத் தேவை.

வளர்ச்சி காண்கின்ற எல்லா நாடுகளிலுமே, குறிப்பாக புதிதாய்ச் சுதந்திரம் அடைந்துள்ள தேசங்களில், திறமையுள்ள நிர்வாகிகள் பற்றாக் குறையாகவே இருந்து வருகின்றனர். இந்தியா வில் போலத் திறமைவாய்ந்த சிவில் சர்விஸ் இருந்து வரும் தேசங்களில்கூட, தைரியமாக, நிர்மாண ரீதியில், கொள்கையை உருவாக்குவ தற்கு வேண்டிய அனுபவஸ்தர்கள் மிக அரி தாகவே காணப்படுகின்றனர்.

வளர்ச்சி காண்கின்ற பெரும்பாலான நாடு களில், குறிப்பாக ஆபிரிக்காவில், தொழில் துறைத் திறம்படைத்தவர்கள் மிகமிகக் குறைவு. இன் னும் நெடுநாளைக்கு இவ்வகையில் நமது தேவை அதிகரித்துக்கொண்டுதானிருக்கும். திறமை யுள்ள டாக்டர்கள், பள்ளி ஆசிரியர்கள், என்ஜினி யர்கள், கட்டிடக் கலைஞர்கள், தொழிலாளர் தலை வர்கள் போன்ற நிபுணர்கள் போதிய அளவில் கிடைக்கமாட்டார்கள்.

மூலதனத்தைப் போலவே, நிர்வாக, தொழில் துறைத் திறன்களையும் பெரிய அளவில் சுயமாகவே எந்தத் தேசமும் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். சற்று முற்போக்காக உள்ள நேச நாடுகளிலிருந்து ஓரளவு இதற்கு உதவி கிடைக்க லாம். ராஜீய காரணங்களை முன்னிட்டு அரசாங்க நிர்வாகத்தில் அயல் நாட்டினர் இடம் பெறுவது

சாத்தியமல்ல. அயல் நாடுகளில் பணிபுரிவதற்கு தகுதியுள்ள தொழில்துறை நிபுணர்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. எனவே, அயல் தேச நிபுணர்களை, மிக அரிதாகவுள்ள வசதி என்று மதித்து, சுதேசிகளுக்கு விசேஷ பயிற்சி தரும் பணியாளராக மட்டுமே பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அந்நியத் தொழில் உதவி சிறிதளவாக இருந்தபோதிலும், அயல்நாட்டு மூலதனம் சிறுகச் சிறுகக் கிடைப்பதைப் போலவே அதுவும், அதிர்ஷ்டவசமாக, வளர்ச்சிக்கான நடைமுறைகளைப் பெரிதளவு ஊக்குவிக்க வல்லது. ஆனால் இதற்கு ஒரு நிபந்தனை உண்டு. தகுதியுள்ள மக்கள் போதிய எண்ணிக்கையில் பயிற்சி பெறுவதற்கு, உதவி பெறுகின்ற நாடானது, தானாகவே கணிசமான முயற்சிகளைச் செய்யவேண்டும். தவிர, அப்படிப் பயிற்சி பெறுகின்றவர்கள், தாம் கற்றறிந்த திறன்கள் பொருளாதார நல்வாழ்வுக்குத் தொடர்ந்து பயன்படக் கூடியவாறு பொறுப்பான பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும்.

வாலாயமாக நடக்கவேண்டிய பணிகளில் புதிதாகப் பயிற்சிபெற்ற தொழில் நிபுணர்களை அமர்த்தி, தமது சொந்த முயற்சி திறம்பட வெளிப்படாவண்ணம் அமுக்கிவிட்டால், தமக்குக் கீழே உள்ளவர்களுக்குப் பயிற்சி தருவதற்கு வேண்டிய ஊக்கம் அவர்களுக்குத் தரப்படாமல் இருந்தால், எவ்வளவுதான் அந்நியத் தொழில்

துறை உதவி கிடைத்தபோதிலும், அது குறிப் பிடத்தக்க பயனைத் தராது.

மக்களது சம்மதத்தின் அடிப்படையில் அர சாங்கங்கள் இயங்குகின்ற ஜனநாயக நாடுகளில், வளர்ச்சியைத் தொடர்ந்து சமூக அமைப்பில் மாறுதல்கள் விளைகின்றன. அவற்றையும் கருத்திற்கொண்டு, குடிமக்களிடையே போதிய ராஜீய, சமூகநலத் துறைகளில் திறம் படைத்த வர்கள் தோன்றியாக வேண்டிய அவசியம் இருக் கிறது. குடிமைத்திறன் என்பது ஓட்டுச் சீட்டில் குறி போடுவதற்குள்ள தகுதியென்று நினைப்பது தவறு. புரட்சி செய்யாமல் எதிர்ப்பை வெளிப் படுத்தும் திறன், ஒருமுகக் கருத்தொற்றுமை ஏற்படுவதற்காகவேண்டி சமரசத்தை ஏற்றுக் கொள்கின்ற தன்மை, அதே சமயத்தில் தனிப் பட்ட முறையில் சுதந்திர உணர்வுடன் செய லாற்றுவது, பிறருடன் ஒத்துழைத்து, தனது சொந்தக் கிராமமும், சமுதாயமும் திருந்துவதற் காகப் பாடுபடுவது ஆகியவை 'குடிமைத் திறன்' என்பதில் அடங்கும்.

அடிப்படையான இந்த ராஜீயக் கருத்துக்கள் நிலவும் நாடுகளில் ஜனநாயகம், உயிர்த் துடிப் புடன்கூட வளர்ச்சி காண்பதற்கான தோதுக்கள் அதிகம் உண்டு. அவை இல்லாத தேசங்களில் இறுதியாக கொந்தளிப்பான நிலைதான் ஏற்படும்; அல்லது சர்வாதிகார ஆட்சி வந்துவிடும்.

வளர்ச்சிக் குறைவாகவுள்ள பெரும்பாலான தேசங்களில், காலனி ஆதிக்கமுறை அமலாகி

வந்த காலத்தில், இந்த அத்தியாவசியமான ராஜீய, சமூகநலத் திறன்கள் வளர்ச்சி காண்பது மிகவும் தடைபட்டிருந்தது. மிக மிக முற்போக்கான நிலவரத்தில் இருந்து வருகின்ற தேசங்களின் நிர்வாகத் தகுதிகளுக்கே அறைகூவலாக அமைகின்ற பெரிய பிரச்சினைகளை, அவை சமாளித்தாக வேண்டியிருக்கிறது. எதை, எவ்வாறு செய்யவேண்டுமென்ற வரிசைக் கிரமங்களை நிர்ணயித்து நடத்தி வைக்கின்ற பொறுப்பை இவ்வகையில் குறிப்பாகச் சொல்லவேண்டும். அதே சமயத்தில், சமூக அமைப்பில் மாறுதல்களைச் செய்தாகவேண்டுமென்ற கோரிக்கைகள் கூடவே எழுகின்றன.

பெரும்பாலான பாமர மக்கள் நாட்டின் அபிவிருத்தியில் தாமே கலந்துகொண்டு, தனிப்பட்ட முறையில் பொறுப்பு ஏற்கவேண்டிய உணர்வைச் சிருஷ்டிப்பது அவசியம். அதற்கான முதல் நடவடிக்கை கல்வித்துறையின் விஸ்தரிப்புத்தான். இது மிகமிக முக்கியமானது. எழுதப்படிக்கத் தெரிந்தவன், வாழ்க்கை அளிக்கின்ற வாய்ப்புக்கள் அனைத்தையும் படித்துக் கண்டுகொள்ளக் கூடியவன். குடும்பத்திற்கும் தனக்கும் என்னவெல்லாம் செய்துகொள்ள முடியும் என்பதை அவன் உணருகின்றான். முழுச் சக்தியுடன் உழைப்பதற்கான வேகத்தை அது அவனுக்குத் தருகின்றது. எழுதப் படிக்கத் தெரிந்தவன், தானாக என்ன செய்யவேண்டுமென்பதைப் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடியவன். மனப்

பாடம் செய்து தெரிந்துகொள்வதைவிட எளிதான தொழில் திறன்களை, பயிற்சிப் பாடங்கள் மூலம் வளர்த்துக்கொள்ள முடியும் என்பதை எழுத்தறிவு அவனுக்குப் புலப்படுத்துகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, குடிமக்கள் என்ற வகையில் தமக்குள்ள உரிமை கடமைகளை நன்கு அறிந்துகொள்ளக் கூடியவர்கள் எழுத்தறிவு உள்ளவர்கள் தாம். அவர்கள் விரும்புவது ராஜீய, பொருளாதார, சமூக நிலை மாறுதல்கள். அவற்றை அவர்கள் அடைய முடியாதபடி மரபில் ஊறித் திளைக்கும் சில சக்திகள் ஆழ .வேர்விட்டு, தொடர்ந்து உழைத்து வருகின்றன. எழுத்தறிவு இருந்தால், அவர்களது தயவில் தொடர்ந்து தான் வாழ்ந்தாக வேண்டியதில்லையென்பதை பிரஜை தெரிந்துகொள்வான்.

ஜப்பானில் 100க்கு 98 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அத்தகைய எழுத்தறிவு இல்லாமல் இருந்திருந்தால், யுத்த பிற்காலத்தில் அங்கு ஏற்பட்ட வியக்கத்தக்க வளர்ச்சி சிறிதும் சாத்தியப் பட்டிராது. வளர்ச்சி கண்டு வருகின்ற பெரும்பாலான நாடுகளில் எழுத்தறிவு 30 சதவிகிதத்துக்கும் குறைவாகவே இருந்து வருகிறது.

## IV

வளர்ச்சிக்கான ஐந்து அத்தியாவசியத் தேவைகளின் நான்காவது ஜனத்தொகைக் கட்டுப்பாடு. வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தேசங்களில்

இயற்கை வசதிகள் குறைவு. ஜனத்தொகையோ பெரிய அளவில் விரிவுகண்டு, அந்த வசதிகளைப் பகிர்ந்துகொள்ளப் பார்க்கின்றது. எனவே, ஜனத்தொகைக் கட்டுப்பாடு இந்தத் தேசங்களுக்கு விசேஷமுக்கியத்துவம் உள்ளதாகிவிட்டது. பல நாடுகளில் இப்பிரச்சினை இன்னும் தலைதூக்கவில்லை. உதாரணமாக, பெரும்பாலான ஆபிரிக்க தேசங்களில் வசதிகள் கணிசமாகவும், அதனுடன் ஒப்புநோக்கின் ஜனத்தொகை குறைவாகவுமே இருந்து வருகின்றன. பயிர்த் தொழிலை நடத்தவும், இயந்திரங்களை இயக்கவும் இவற்றில் இன்னும் நிறையப் பேர் தொடர்ந்து தேவைப்படுவர்.

ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகின்ற வேகத்தின் காரணமாக, மக்கள் பெருமளவில் பட்டினியால் தவிக்க நேரிடும் என்று மால்துஸ் கூறினர். ஜன நெருக்கம் மிகுதியாக உள்ள தேசங்களில், ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத நிலையிலுங் கூட, இது உடனடியான அபாயமாக வளர்ந்துவிட்டது என்று சொல்வதற்கு இல்லை. போதிய அளவு உர வகைகளும், நவீன உற்பத்தி முறைகளும் கையாளப்படுமாயின், இப்போது சாகுபடி செய்கின்ற நிலங்களிலேயே மும்மடங்கு உணவுத் தானியங்களை விளைவிக்க இந்தியாவால் முடியும். மீன்வளத்தை மிக விரிவான அளவில் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிறைய உண்டு. இந்த வசதி ஏறக்குறைய கவனிக்கப்படாத நிலைமையிலேயே இருந்து வருகிறது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, இந்தோனிசியா, சீனு ஆகியவை ஏற்கெனவே ஜன நெருக்கம் மிகுதியாக உள்ள தேசங்கள். இவற்றில் ஜனத்தொகை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதால், உண்மையில் பொருளாதார நிலைமை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். தேசிய வருமானம், சராசரி தனிநபர் அடிப்படையில் ஏற்றம் காண முடியாதபடி அது தடை செய்துவிடுகிறது. சில நாடுகளில் திருப்திகரமான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்று சாதாரணப் பிரஜை கருதக்கூடிய வகையில் பொருளாதார வளர்ச்சியின் வேகம் இருந்து வருகிறது. ஆனுல் அதே வேகம், ஜன நெருக்கம் மிகுதியாக உள்ள நாடுகளில், இருந்த நிலையைவிட்டு நகராத, மாறுதலே இல்லாத ஒரு நிலவரத்தைத்தான் தோற்றுவிக்கின்றது.

காங்கோவையும், சூடானையும் இந்தியாவுடன் ஒப்புநோக்கிப் பார்த்தால் இந்த விஷயம் தெளிவாகப் புலப்படும். இந்தத் தேசங்கள் ஒவ்வொன்றும் இந்தியாவின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு விஸ்தீர்ணம் உள்ளவை. ஒவ்வொன்றிலும் 160 லட்சம் பேர் வசிக்கின்றனர். இந்தியாவில் 4,500 லட்சம் பேர் வாழ்கின்றனர். விவசாயக் கணக்குப்படி இவை மூன்றிலுமே இயற்கை வசதிகள் ஏறக்குறைய ஒரேமாதிரி இருப்பதாகச் சொல்லலாம். தொழில்முறைப் பயிற்சி, மூலதனம் ஆகிய இரண்டும் ஒரே ரீதியில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆனுல்

பயன்களைக்கொண்டு மதிப்பிட்டால், இரண்டு ஆபிரிக்க நாடுகளின் சராசரி வருமான நிலையும் இந்தியாவில் காணக்கூடியதைவிட அதிக வேக மாகவே ஏற்றம் காண்கிறது என்ற உண்மை புலனாகும். ஆபிரிக்க நாடுகளில் உடலுழைப்பு விரயமாகாமல் இருப்பதற்கு இயந்திர சாதனங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுமாகையால், அங்கு ஊதிய நிலைகள் ஏறிக்கொண்டே போகும்.

சென்ற பத்தாண்டுகளில் இந்தியாவில் தேசிய வருமானம் வருஷம் 4 சதவிகிதத்தில் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. ஆனால் ஜனத் தொகை 2½ சதவிகிதத்தில் கூடுதலாகிக் கொண்டே வந்துள்ளது. எனவே தனி நபர் வருமானம் 1½ சதம்தான் உயர்ந்திருக்கிறது.

இந்தியாவின் ஜன நெருக்க நிலைமையை நல்லபடி சமநிலைக்குக் கொண்டுவருவதற்கான பெருமுயற்கிகள் இப்போது நடந்துவருகின்றன. 1930-ம் ஆண்டில் பிறப்பு விகிதம் 1000-க்கு 48-ஆக இருந்தது. இப்போது 41.5 ஆகக் குறைந்துவிட்டது. பம்பாய் போன்ற நகரங்களில் பல வருஷங்களாகவே ஜனத்தொகைக் கட்டுப் பாடு முயற்சிகள் உறுதியுடன் உருவாகிவந் துள்ளன. அங்கே பிறப்பு விகிதம் 30-ஆகக் காணப்படுகிறது.

இப்போது கிடைக்கின்ற சாதன வசதிகளை யும், கட்டுப்பாட்டுத் திட்டங்களையும் பயனுள்ள வாறு உபயோகிக்க முடிந்தால் 1974-ம் ஆண்டிற் குள் பிறப்பு விகிதத்தை 25-ஆகக் குறைத்துவிட

முடியும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். மரண விகிதம் 14-ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நோக்கம் கைகூடும் பட்சத்தில் இந்தியாவின் சராசரி வருமானம் இரட்டிப்பாக முடியும். பிறப்பு விகிதமும், இறப்பு விகிதமும் இறுதியாக ஒரு சமநிலைக்கு வருகின்ற காலத்தில் ஜனத்தொகை ஸ்திர நிலைமையை அடையும். அப்போது வருஷா வருஷம் தேசியப் பொருள் உற்பத்தி 4 சதவிகிதம் ஏற்றங் கண்டு வருகின்ற நிலவரமானது, வாழ்க்கைத்தரத்தை வியக்கத்தக்க வகையில் உயர்த்திவிட வல்லதாக இருக்கும்.

## V

வளர்ச்சிக்கான ஐந்தாவது அத்தியாவசியத் தேவை சரியான சூழ்நிலையைத் தோற்றுவிப்பது. இதுவே இறுதியான தேவை. மூலதனம், அதிக உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பது, தொழில் திறன், ஜனத்தொகைக் கட்டுப்பாடு ஆகிய நான்கு அவசியமான தேவைகளைக் கவனித்தோம். பண்பாட்டுத் துறையிலோ, ராஜீயத் துறையிலோ சூன்யநிலை இருக்குமாயின் இவை சரிவரச் செயல் படமாட்டா. ஒவ்வொரு புதிய சமுதாயமும் தனது கடந்த கால அனுபவம், இக்காலத்துத் தேவைகள், எதிர்காலத்தைப் பற்றிய லட்சியங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு உழைத்தாக வேண்டும்.

இவ்வாறு பாடுபட்டால்தான் தேசம் அனைத்துமே ஒன்றுபட்டு உழைத்தாக வேண்டுமென்ற உணர்வு தோன்றும். பலதரப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து, பரஸ்பரம் நல்லிணக்கத்துடன், ஒருவருக்கொருவர் மதிப்புக்கொடுத்து, தமது தலைமுறையினருடன் இசைவாக உழைப்பது அந்நிலையில் தான் சாத்தியமாகும்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க சமுதாயத்தை நிறுவியவர்கள் ராஜீய தூர திருஷ்டியுடன்கூட, தமது லட்சியம் என்னவென்பதை தீரமிக்க சொற்களால் பிரகடனம் செய்தனர். அந்த லட்சியத்தை அடைகின்ற பணி இன்னமும் தொடர்ந்து நடந்து வருகிறது. "எல்லா மக்களும் சமநிலையில்தான் படைக்கப்படுகின்றனர்" என்று அடித்துக் கூறுகிறது எங்கள் சுதந்திரப் பிரகடனம். அதை வெளியிட்டவர் தாமஸ் ஜெபர்ஸன். "மனிதனது சிந்தனை எவ்வாறெல்லாம் மலர்ச்சி காண்கின்றது என்பதை அனைவரும் கவனிக்கத் தொடங்கியுள்ளனர்............... மனித வர்க்கத்தில் பெரும்பாலோர் பிறரது சவாரிக்கான சேணங்களுடன் பிறந்தவர்கள் அல்லர். கடவுளின் கிருபையால் அவர்கள்மீது ஏறிச் சவாரி செய்வதற்கு ஜோடும், சிராயும் அணிந்த ஒருசில அதிர்ஷ்டவான்களாக அவர்கள் ஜனித்தவர்கள் அல்லர்" என்று நம்பினார் ஜெபர்ஸன்.

தனிநபரின் மாண்பில் இருந்துவரும் இந்த ஆழ்ந்த நம்பிக்கையானது முதல் தடவையாக,

பெரியதோர் ஆதிக்கத்திற்கு எதிரிடையான புரட்சியை உலகில் தோற்றுவித்தது. ஒரு பெரிய ராஜீய, ஜனநாயகப் பரீட்சையையும் அது தொடங்கிவைத்தது. எந்த லட்சியங்களை அடைவது என்று, மரபுக்கேற்ப சங்கற்பித்துக் கொண்டோமோ அவற்றை இன்னும் முழுசாக அடைந்தாகவில்லை. ஆனால் தனிநபரின் சுதந்திரத்துக்கும் நல்வாய்ப்புக்குமான அடிப்படைகள் தொடர்ந்து விரிவுகண்டே போகக்கூடியவாறு, ஒன்றன்பின் ஒன்றாக வந்த பல தலைமுறைகளைச் சேர்ந்த அமெரிக்கர்கள் உழைத்து வந்திருக்கிறார்கள்.

தான் அடைந்தே தீருவது என்று இந்தியா ஓர் ஆதரிச லட்சியத்தை வரித்துக்கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட நிலைமையில் இருந்து வருகின்ற ஒரு சமுதாயத்திற்கு எது நல்லதோ, அது வேறுபட்ட நிலைமையிலுள்ள மற்றொரு சமுதாயத்திற்கு நல்லதாகத்தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. இந்தியா தனக்கென சொந்தமாக ஒரு பொருளாதார வழியையும், சொந்தமானதோர் கொள்கையையும் உருவாக்கிக் கொள்ளவேண்டிய அவசியம் உண்டு என்று காந்திஜி கண்டுணர்ந்தார்.

மனிதப்பிறவி உயர்ந்தது, அதில் தனிநபர் மிகமிக உயர்வு உள்ளவன் என்று இந்தியா எப்போதுமே கருதி வந்திருக்கிறது. இது அடிப்படையான நம்பிக்கை. காந்திஜி கூறினார்: "தனது தனித் தன்மையை ஒருவர் இழந்து,

இயந்திரத்தில் ஒரு சாதாரண உறுப்பாகிவிடுவது போன்ற நிலைக்குத் தாழ்ந்துவிடுவது மானிட கண்ணியத்திற்கு இசைவானதல்ல. ஒவ்வொரு தனிநபரும் சமூகத்தின் நலனில் முழு அக்கறையுள்ள முழு அளவில் வளர்ச்சி கண்டு விளங்க வேண்டுமென்றே நான் விரும்புகின்றேன்."

காந்திஜியின் உபதேசங்கள் முற்றிலும் ஜன நாயகத் தன்மை படைத்தவை. சமுதாய நல உணர்ச்சி அதில் எடுப்பாகக் காணப்படுகிறது. எதுவுமே மிகப் பெரிதாக வளர்ந்துவிடுமாயின் அதனின்று தீமை விளையலாம் என்ற ஆழ்ந்த சந்தேகம் அதில் கூடவே தென்படுகிறது. இன்னும் பல தலைமுறைகளுக்கு காந்திஜியின் இந்த உபதேசம் நேரிடையாகவும், மறைமுகமாகவும் இந்தியாவின் வளர்ச்சியை உருவாக்குவதில் செல்வாக்குப் பெற்றிருக்கும்.

சமுதாயம் பூராவின் நலனுக்காக தம்மைப் பணித்துக் கொண்டிருக்கின்ற தலைவர்கள் இத்தகைய லட்சியத்தை, அபிவிருத்திக்கேற்ற சாதனங்களாகப் பயன்படுத்திக்கொள்வர். லட்சியத்தில் உறுதியுடன் செயலாற்றுகின்றோம் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் தலைவர்களால் பதிய வைக்கக்கூடுமானால், அது எல்லோருக்குமே சொந்தமான ஒரு தேசிய உடைமையாகிவிடுகின்றது. அந்த நிலவரத்தில் அபிவிருத்திக்கான போராட்டத்தில் நிச்சயமாக வெற்றி காண முடியும்.

## VI

இந்த ஐந்துந்தான் துரிதமாக, சமநிலையில் வளர்ச்சி காண்பதற்கு அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகள். ஒவ்வொரு பிரஜையின் சக்தியையும் பயன்படுத்தி, வாழ்க்கையை வளமுறச் செய்து, அபிவிருத்தியை சாத்தியமாக்குவது இவைதாம்.

ஆருவது அத்தியாவசியத் தேவை என்று மற்றென்றைச் சேர்க்கலாமா என்ற நப்பாசை எழுகின்றது. பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்கின்றவர்கள் சித்தாந்தங்களுக்கு அடிமையாகாமல், நிலைமையின் தேவைக்கேற்ப, நீக்குப்போக்குடன் செயலாற்றும் மனப்பான்மைதான் இந்த ஆருவது தேவை. ஆனல் இதுவரை நாம் நடத்திய சர்ச்சை அனைத்திலும் இது உள்ளூற உறைகின்றது என்றே எனக்குத் தோன்றுகிறது.

வளர்ச்சி காண்கின்ற தேசங்களின் பிரச்சினைகள் சிக்கல் நிறைந்தவை. கச்சிதமான சிப்பம் போல் அழகாக உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு சித்தாந்தமானது, தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தன்னுள் கொண்டிருக்கிறதென்ற கருத்து நிச்சயமாகத் தோல்வியைத்தான் விளைவிக்கும். இன்றைய உலகம் சிக்கல்கள் நிறைந்தது. ஆடம் ஸ்மித் இலக்கணம் கூறியுள்ள முதலாளித்துவமும், மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் விளக்கம் தந்துள்ள கம்யூனிசமும், இன்றைய சூழ்நிலையில்

பெரிதும் பொருத்தமற்றவையாகிவிட்டன. தேசிய வளர்ச்சிப் பணிகளில் சுயமாகவே சிரமம் நிறையக் காணப்படுகிறது. வேறொரு காலத்தில் பொருள் படைத்ததாக இருந்த, உணர்ச்சி வேகத்துடன் கூடிய கோஷங்களையும், ராஜீய சித்தாந்தங்களையும் இன்றைய நிலவரத்துடன் கொண்டுவந்து கலந்தால் குழப்பந்தான் அதிகரிக்கும்.

தேசிய வளர்ச்சியின் அறைகூவல்கள் பல தரப்பட்டவை. அவற்றைச் சமாளிப்பதற்குச் சில சமயம் அயல்நாடுகளிலிருந்து சில சக்திகளையும், சில உத்திகளையும் கடன் வாங்கவேண்டி நேரிடலாம். மேற்கு ஐரோப்பா, ஸ்வீடன், யூகோஸ்லாவியா, ஜப்பான், அமெரிக்கா ஆகியவற்றிடமிருந்து அவற்றை அடைய முயற்சிக்கலாம். ஆனால் முக்கியமாக இந்தியா தன்னுடைய சுய பலத்தை, சொந்த அனுபவத்தை, சம்பிரதாயங்களை நம்பியிருந்து, தனக்கே உரிய வகையில், நான் விவரித்துள்ள ஐந்து அத்தியாவசியத் தேவைகளுடன் இவற்றைப் பிணைத்துக்கொண்டு செயலாற்றும் என்று நான் நம்புகிறேன்.

# II

# நாட்டுப்புற வளர்ச்சியின் இயக்கம்

சமுதாய நிர்மாணத்திற்கு அத்தியாவசியமான ஐந்து தேவைகளைக் கருத்திற்கொண்டு, நாட்டுப் புறம் வளர்ச்சியடைவது அடிப்படையில் எவ்வளவு முக்கியமானது என்பதை இப்போது கவனிப் போம். நாம் உபயோகிக்கும் சொற்றொடர்க ளுக்கு இங்கேயும் விளக்கம் தருவது அவசியம். "கிராமப் பிரதேசங்கள் (Rural Areas)" என்ற சொற்றொடரின் பொருள் என்ன? ஆசியா, ஆபி ரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் கிராமப் பிரதேசங்கள் என்றால் கிராமங்களையும் அவற்றைச் சூழ்ந்துள்ள சாகுபடி நிலங்களையும் மட்டுமன்றி, சிறிய நகரங்களையும் குறிக்கும். இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஜனத்தொகை முதல் பல் லாயிரம் பேர் வரை வசிக்கின்ற கிராமப் பகுதி நகரங்கள், விவசாயிகளுக்கும் நிலமில்லாத உழைப்பாளருக்கும் சந்தைகளாகப் பயன்படு கின்றன.

"கிராமப் பிரதேச வளர்ச்சி" என்பதில், விவசாய வளர்ச்சி மட்டுமன்றி, சிறிய தொழில்கள், பள்ளிக்கூடங்கள், பயிற்சிக் கேந்திரங்கள், திருந்திய போக்குவரத்து, கிராம மின்சார வசதி, பொதுச் சுகாதாரம், ஜனத்தொகைக் கட்டுப்பாடு நிலையங்கள் ஆகியவையும், கிராம மக்களிடையே பண்பாட்டின் மலர்ச்சிக்கு ஊக்கந்தரும் பிறவகைப் பணிகளும் அடங்கும்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்ருது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் குறள் சுட்டிக்காட்டியது. எனினும், நடைமுறையில் இதைப் பெரும்பாலும் அலட்சியம் செய்துவிட்டார்கள். ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், பல நூற்ருண்டுகள் ஒருவர்பின் ஒருவராக, ஊர்வலம் போல, படையெடுப்பாளரும் சக்கரவர்த்திகளும், பின்னர் காலனி ஆதிக்க வல்லரசுகளும் வந்து சென்றனர். ஆனல் கிராம மக்களை அவர்களது ஆட்சி எவ்வகையிலும் பாதித்ததாகத் தெரியவில்லை. வரியைத் தண்டியபோதும், ராணுவச் சேவைக்கு அதிகமான இளைஞர்களைத் திரட்டிச் சென்றபோதும் மட்டுமே அரசாங்கம் இருக்கின்றதென்ற பிரக்ஞை கிராம மக்களிடம் காணப்பட்டது. லத்தீன் அமெரிக்காவிலும் வரலாற்றின் போக்கினல் பாதிக்கப்படாமலேயே கிராமப் பகுதிகள் பெரும்பாலும் இருந்துவிட்டன.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பிறகு, வளர்ச்சியில் தேக்கமுற்ற நாடுகள் சுதந்

திரத்திற்கான போராட்டங்களில் ஈடுபட்டிருந்தன. காலனி ஆதிக்க வல்லரசுகள் அவற்றை அடுத்து வாபஸாயின. விடுபட்ட நாடுகளின் புதிய தலைவர்களில் பெரும்பாலோர் தமது தேசங்களின் தொழில் வளர்ச்சியில் முதன்மையாகக் கவனம் செலுத்தலாயினர். மேலைநாடுகளின் தொழில் வளர்ச்சிதான் பகட்டான பொருளாதார முன்னேற்றத்தின் புறச் சின்னம் என்று அவர்கள் கருதினர். இந்தியாவின் வளர்ச்சிக்கு உண்மையான அளவுகோல் தொழில்துறை விஸ்தரிப்புத்தான் என்று கருதியவர்கள் உண்டு. அவர்கள் நகரங்களின் வளர்ச்சியை விசேஷமாக மதித்தவர்கள். விவசாயிகள் கிராம வாழ்வின் மதியீனத்தில் ஆழ்ந்து கிடப்பவர்கள் என்று, கார்ல் மார்க்ஸைப் போலவே இந்த அவநம்பிக்கையாளரும் எண்ணமிட்டனர்.

வளர்ச்சி காண்கின்ற தேசங்களில் நாட்டுப்புறங்களில் வசிக்கும் மக்கள் சமுதாயத்தில் 100-க்கு 80 பேர். அவர்களது பணி எவ்வளவு அடிப்படையானது என்ற உண்மை வரவர எடுப்பாகத் தெளிவுற்றது. பொருளாதார வள்ர்ச்சிக்கான அறிகுறிகள் கண்டறியக்கூடிய வகையில் தென்படாவிடில், அரசாங்கத்திற்கும் தமக்கும் ஒருமைப்பாடு இருப்பதாக விவசாயிகள் கருத மாட்டார்கள். இதை ராஜீயவாதிகள் உணர ஆரம்பித்துள்ளனர். ஒழுங்குடன்கூடிய ராஜீய அமைப்பு முறையானது, நாட்டுப்புறத்தில் என்ன நிகழ்கிறது என்பதையே பெரிதும் பொறுத்

திருக்கிறது. இதையும் அவர்கள் அறிந்து வருகின்றனர்.

உள்நாட்டில் உபயோகத்திற்கும், சாத்திய மானல் ஏற்றுமதிக்காகவும், உணவு உற்பத்தியின் அளவையும் தினுசுகளையும் அதிகரித்தாக வேண்டிய அவசியம் உண்டு என்பதைப் பொரு ளாதார நிபுணர்கள் அங்கீகரித்துள்ளனர். வளர்ச்சி கண்டுவரும் பெரும்பாலான நாடுகளில் இப்போது நடந்து வருகின்ற பிரதான தொழில் விவசாயம் ஒன்றுதான். எனவே நியாயமான வேகத்தில் முதலீடு திரள வேண்டுமாயின், சாத்தியமான அதிகபட்ச அளவுக்கு வளர்ச்சி யானது விரிவு காணவேண்டும். இத்தகைய நாடுகளில், மொத்தம் கிடைக்கின்ற தேசிய வருமானத்தில் பாதி விளைபொருட்களாகவே இருக்கிறது. எனவே, பொருளாதார மதிப் பீடுகளுக்கு அடிப்படையாகவுள்ள உற்பத்திக் குறியீட்டு எண்களை, விளைபொருட்களின் அள வானது திட்டவட்டமாகப் பாதிக்கின்றது.

ஒரே தொகை நகர்ப்பகுதியிலும், கிராமப் பகுதியிலும் விடுமுதலாகிறது என்று வைத்துக் கொண்டு பார்ப்போம். நகர்ப்புறங்களில் ஏற்படக் கூடியதைவிட அதிகமான வளர்ச்சி, அதிகமான பேருக்கு அனுகூலம், கிராமப்பகுதியில் அதே தொகையை விடுமுதல் செய்வதால் கிடைக் கின்றது. விற்பனைச் சரக்குகளைக் கொண்டு போவதற்கான ரோடு அமைப்பு, மின்சார விசை யின் விஸ்தரிப்பு, கிணறுகளை ஆழப்படுத்துவது

போன்ற முறைகள், அந்நியச் செலாவணி தேவைப்படாமலேயே, உடனடியாகப் பொருளாதார அனுகூலங்களை அளிக்கக்கூடியவை.

தொழில் வளர்ச்சி காணவேண்டுமாயின், நாட்டுப்புறம் விருத்தியடைவது அதற்கு அத்தியாவசியமான முன்னேடி என்பதை தூரதிருஷ்டி படைத்தவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் வசிக்கும் மக்கள் 80 சதவிகிதத்தினராகையால், ஆலைகள் உற்பத்தி செய்யும் பண்டங்களை வரவர அதிகமாக வாங்குவதற்கு வேண்டிய சக்தி அவர்களிடம் இல்லாதுபோனால், நகர்ப்பகுதிகளில் தோன்றுகின்ற தொழில்களின் வளர்ச்சியானது, வாடிக்கைக்காரர்கள் இல்லாமல் தடைப்பட்டுப் போகும். வளர்ச்சி கண்டுவரும் பல நாடுகளில் கிராமப்பகுதிகளின் பொருளாதார வாழ்வு ரொக்க அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. தவிர, நகர்ப்புற உழைப்பாளர் செய்கின்ற செலவில் பாதி உணவுக்காகவே போகிறது. எனவே உணவின் சப்ளையும் வினியோகமும் திறம்பட நடந்தேறினால்தான் நகர்ப்பகுதியினர் நலமுற வாழ்ந்து, பக்குவமான ராஜீய மனப்பான்மை உள்ளவர்களாகக் காணப்பெறுவர். இது நேரிடையான, பிரதான முக்கியத்துவம் உள்ளது.

தகுதியும் ஆர்வமும் உள்ள இளைஞர்கள் கிராமப்பகுதிகளிலிருந்து நகரங்களுக்கு வேகமாக போய்க்கொண்டிருக்கின்றனர். இந்தப் போக்கை மிதப்படுத்தக்கூடிய ஒரே ஜனநாயக சாதனம்

நாட்டுப்புறங்களின் அபிவிருத்திதான். இதை சமூகவியல் விஞ்ஞானிகள் வலியுறுத்தியுள்ளனர். நாட்டுப்புறத்து இளைஞர்கள் நகரங்களுக்கு நிறையச் செல்வதால், கிராமங்களின் ஜீவாதார மான ரத்த ஓட்டம் சுண்டிவிடுகிறது என்பது காந்திஜியின் கருத்து. வளர்ச்சி கண்டுவரும் தேசங்களில், பொருளாதார அபிவிருத்தியின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, கிராம மக்கள் நகரங்களுக்குச் செல்கின்ற போக்கும் தீவிர மாகிறது. கிராம வாழ்க்கை பலவகைகளில் குறை பாடுகள் உள்ளது. நகரங்களில் வேலைவாய்ப்புக் கள் அபரிமிதமாக இருக்கின்றன, நவீன மோஸ் தரில் அங்கு வாழ்க்கை நடத்த முடியும் என்ற வேகம் அவர்களை அந்தத் திசையில் உந்து கின்றது.

ஆனால் நடைமுறையில் நாட்டுப்புறத்தை விட்டு நகரங்களில் வந்து வாழ்கின்ற நிலவர மானது பெரும்பாலும் மகிழ்ச்சியுள்ளதாக இருப்ப தில்லை. கிராமங்களில் ஓரளவு கவலையின்றி வாழ்க்கை நடந்துகொண்டிருந்தது. தனக்குப் பழக்கப்பட்ட குடும்ப உறவுமுறைகள், நதிகள், வயல்கள் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது கிராம வாழ்க்கை. அதைவிட்டு நகர்ப்புறத்தில், ஜன நெருக்கம் மிகுதியான, சிரமம் நிறைந்த கழிசேரி வாழ்க்கையை அவர்கள் மேற்கொள்ளவேண்டி நேரிடுகிறது. இந்நிலையில், நினைத்தது கை கூடாமல், ஆசாபங்க உணர்வு மேலிடுகிறது. நிம்மதியும் நிச்சயமும் இல்லாமல் வாழவேண்டி

நேரிடுகிறது. அதன் விளைவாகக் கொந்தளிப்பான ராஜீய நிலைமை ஏற்பட்டே தீரும்.

நகரங்களில் வந்து குவிகின்ற இந்த வேகம் மிதப்பட வேண்டுமாயின் கிராமப்பகுதிகளிலேயே வரவர அதிகமான பொருளாதார வாய்ப்புக்களை அளித்தாகவேண்டும். அதில் பயனுள்ள வகையில் ஈடுபடுகின்ற பெருமை தனி நபருக்கு இருக்க வேண்டும். அதற்கான சூழ்நிலை இருந்துவருவது அவசியம். எல்லாவற்றிற்கும் மேலாக, தான் அங்கிருந்து உழைப்பது பொருள்படைத்தது என்ற உணர்வு அவனுக்கு ஏற்படவேண்டும்.

## I

வளர்ச்சி காண்கின்ற தேசத்தில், ராஜீய, பொருளாதார அபிவிருத்தியானது ஒழுங்காக ஏற்றம் காண்பதற்கு நாட்டுப்புறத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்வது அத்தியாவசியந்தான். ஆனால் வளர்ச்சி வகைகளில் இதுவே மிகமிகச் சிரமமானது. கிராம சமுதாயங்கள் பெரும்பாலும் சம்பிரதாயமான சிந்தனைகளில் ஊறிக்கிடப்பவை, செயலாற்றுபவை. இவற்றை மாற்றுவது சுலபமல்ல. எனவே உடனடியாக, கண்ணுக்கு மெய்யாக, பயன்களை அளிக்கக்கூடிய அதிரடித் திட்டங்களை அவற்றில் நடத்தி வைப்பதற்கான தோதுக்கள் கிடையாது.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் ஆயிரமாயிரக் கணக்கில் கிராமங்கள்

பரந்துகிடக்கின்றன. இவை விரிந்து காண்கின்ற நிலவரமே [கவர்ச்சிகரமான அபிவிருத்திக்கு மாபெரும் முட்டுக்கட்டையாகி விடுகின்றது. நீர் மின்சாரத் தொழிற்சாலை ஒன்று ஏற்பட்டு விடுமாயின், அதை அடுத்துப் பல்வகைத் தொழில்கள் வெகு துரிதமாகத் தோன்றிவிட முடியும். ஆனால் அடுத்தாற்போலுள்ள ஒரு கிராமத்தில் முதல் மின்சார பம்பு செட் அமைக்கப்படுவதற்கு நெடுநாளாகிவிடும். பாசன நீர் வசதி முழு அளவு திறம்பட பயன்படுவதற்கு இன்னும் அதிக காலமாகிவிடும்.

இதிலிருந்து மிக முக்கியமான மற்றொரு விஷயம் எழுகின்றது. அதை நான் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வற்புறுத்துகின்றவன். கிராம வளர்ச்சியில் அதிகச் சிரமம் நிறைந்த அம்சம், மக்களை மாற்றுகின்ற பணிதான். ஆனால் சிரமம் இருந்தபோதிலும், இதுவே அடிப்படையான பொருள்படைத்தது. அவர்கள் எண்ணிக்கையில் மிகுதியானவர்கள். சுதந்திரமான சிந்தனை படைத்தவர்கள். தனித்தனியாக உடலுழைப்பை அளிப்பவர்கள். ஒரு மத்திய ஆதிக்கத்திற்கு அவர்களை உட்படுத்துவது சுலபமல்ல. எனினும், நாட்டுப்புறப் பொருளாதாரம் வளர்ச்சி காண வேண்டுமாயின், அவர்கள் நிர்மாணப் பணிகளில் ஈடுபடும்படி செய்துதான் ஆகவேண்டும்.

பாமர மக்கள் பல நூற்றாண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள். எனவே, தெம்புமலர்ச்சி காணச்செய்து அவர்களது ஒத்துழைப்பைப்

பெற்ருகவேண்டும். இல்லாவிடில், அபிவிருத்தி அசாத்தியம் என்றே சொல்லிவிடலாம். நிதரிசன மான நன்மைகள், நியாயமான அடிப்படையில், துரிதமாகக் கிடைக்கின்றன என்ற நிலைமை ஏற் படவேண்டும். தவிர, தாமே சொந்தமுறையில் அதற்கான முயற்சிகளில் பங்கு பற்றும் பெருமை-உணர்வு மக்களுக்கு ஏற்படவேண்டும். இதைத் தோற்றுவிப்பது அவசியமென்று முதல் அத்தியா யத்தில், வளர்ச்சிக்கான ஐந்து அடிப்படைகளைப் பற்றிய விளக்கத்தில், கூறியிருக்கின்றேன்.

மொத்தம் தேசத்தில் செல்வம் எந்த அளவு உற்பத்தியாகிறது? எந்த விசை, எவ்வாறு இயங்குகின்றது என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்துவரும் பொருளாதாரவாதிகள் இந்த அம்சத்தை அலட்சியம் செய்துவிடக்கூடும். ஆனல் இது அடிப்படையான முக்கியத்துவம் உள்ளது. எதிர்காலத்தை உருவாக்குகின்ற பணிகளில் கோடிக்கணக்கான கிராம மக்களை ஈடு படுத்தாதுபோனல், எவ்வளவுதான் கவர்ச்சி கரமாக தொழில்கள் வளர்ந்துவந்த போதிலும், அடிப்படையான பொருளாதார, சமூக மாறுதல் கள் தோன்றமாட்டா. அத்தகைய மாறுதல்கள் தாம் தேசிய வளர்ச்சியின் சரியான இலக்குகள் என்று மதிக்கப்பெறும். எனவே, கிராமங்களிலும் நகரங்களிலும் இருக்கின்ற பெரும்பாலான நாட்டுப்புற மக்களின் சக்திகள், கிராம வளர்ச்சிப் பணிகளில் பயன்படக்கூடியவாறு உழைத்தாக வேண்டிய அவசியம் முதன்மையானது.

இந்த அறைகூவல் அச்சுறுத்துவதாகவே இருக்கின்றது. இதை மூடிமறைப்பதில் பயனில்லை. எவ்வாறு, எதைச் சமாளிப்பது என்பதற்கு நம் மிடம் முற்றிலும் திருப்திகரமான பதில்கள் கிடையாது. ஆபிரிக்காவில் தனித்தனி இனப் பிரிவுகள் தமது வகையினரிடம் மட்டுமே விசு வாசம் காட்டுகின்ற சிந்தனைகளால் ஏற்படும் சிக்கல்கள், ஆசியாவிலுள்ள ஜாதி வேறுபாடுகள், எல்லாவிடங்களிலும் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற வாழ்க்கைத் தத்துவ நியதிகள் ஆகியவை, நவீன உலகின் தேவைகளை வரிசைக் கிரமப்படுத்தி, திட்டமிட்டு உழைத்தாகவேண்டிய நிலவரத்திற்குச் சம்பந்தமில்லாமல் இருப்ப தாகவே அவர்களுக்குப் புலப்படுகின்றது. இவை யெல்லாமாக, மாறுதல் நிகழ்வதற்குப் பலவகை முட்டுக்கட்டைகளைச் சிருஷ்டிக்கக்கூடியவை. எனவே, இவற்றின் விளைவுகளை ஒருக்காலும் குறைத்து மதிப்பிடலாகாது.

எனினும், உருப்படியான சில நடவடிக்கை களை எடுத்துக்கொள்ள முடியும் என்பது தெளிவு. உதாரணமாக, கல்வியின் மூலம் வசதிகளைப் பெருக்கிப் பயனடைய முடியும் என்பதை நடத்திக் காண்பித்தால், குடியானவன் இன்னும் திறம்படச் செயலாற்றி அதிகம் விளைவிப்பதற்கு முற்படுவான். அதற்கேற்ற வகையில் சமுதாய தலைமையானது நல்லுணர்வுடன் செயலாற்றவேண்டும். குடி யானவன் பண்டங்களை வாங்கி உபயோகிக் கின்றவன். எனவே, புதுப்புது வகைப் பொருட்

களை அவன் பார்க்கச்செய்து, அவனது தேவை களைக் கூடுதலாக்கலாம். இறுதியாக வளர்ச் சிக்குத் துணைபுரிகின்ற நடைமுறைகளில் ஈடுபடச் செய்து, பிரஜை என்ற வகையில் தனக்குள்ள பொறுப்பு உணர்வு கூடுதலாகும்படியான நிலைமை யில் அவனை வைக்கலாம். அரசாங்கம் பொறுப் புடன், பயனுள்ள வகையில் செயலாற்ற வேண்டு மாயின், எல்லாப் பிரஜைகளும் அதில் பங்கு பெறுவதாக இருக்கவேண்டும். அதுதான் ஜன நாயகத்தின் முதல் கோட்பாடு. அம்மாதிரி பிரஜைகள் ஈடுபடுகையில்தான், அரசாங்க மானது விரும்பத்தக்க வழிகளில் தனது சக்தியைச் சரிவர செலவழிக்கக் கூடியதாக இயங்கும்.

இந்த வழிமுறைகள் எல்லாம், மெதுவாக ஆனால் நிச்சயமாக, அபிவிருத்திக்கான தகுதியைக் குடியானவனுக்கு அளிக்க வல்லவை. தனது திறன்களை இன்னும் அதிகப் பயனுள்ள வகையில் பிரயோகித்து, தானும், தனது குடும்பமும் நன்மை கள் பெற்று, சமுதாயமும் நலமுறச் செய்வதற்கு அவனால் பாடுபட முடியும்.

ஆனால் இத்தகைய புதிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்ற கருத்து மனதில் தெளிவுறப் புலப்படவேண்டும். இதை உணர்த்துவது மென்மையுடன் செய்தாகவேண்டிய பணி. எதேச்சாதிகாரப் போக்கில் கட்டுத்திட்டம் செய்ய முற்பட்டால் நிச்சயமாக தோல்விதான் கிட்டும். இது சீனர்கள் கண்டறிந்த படிப்பினை.

## II

கிராமப்புற வளர்ச்சியில் கம்யூனிஸ்டுகள் செய்த முயற்சிகள் சீனுவில் ஏன் தோற்றுவிட்டன, ரஷ்யாவில் ஏன் பின்தங்கிய நிலேயில் காணப்படுகின்றன என்பதை இங்கு சுருக்கமாகக்கவனிப்பது, இந்தச் சூழ்நிலேயில், பொருத்தமாக இருக்கும்.

மார்க்ஸ் முக்கியமாக அக்கறை காட்டியது நகர்ப்புறங்களிலுள்ள பாட்டாளி மக்கள் விஷயத்தில்தான். கிராமியப் பிரச்சினேகளுக்கு அவர் தமது நூலில் மிகக் குறைந்த இடத்தையே கொடுத்திருக்கிறுர். 1848-ல் அவர் வெளியிட்ட கம்யூனிஸ்ட் விக்ஞாபனத்தில் ஒரு சிபாரிசு காணப்படுகிறது. வறுமையில் ஆழ்ந்து, சுரண்டலுக்காளாகி யிருந்த கோடிக்கணக்கான ஐரோப்பிய விவசாயிகள் பற்றி, போகிறபோக்கில் அவர் கூறியதாவது: “உழைப்பாளர்களின் சைனியங்கள், முக்கியமாக விவசாயத் துறைக்கு, நிறுவப்பெற வேண்டும். விவசாயத்துடன் பண்டங்களே உற்பத்தி செய்கின்ற தொழில்களேயும் இணேக்க வேண்டும். படிப்படியாக, நகரத்திற்கும் நாட்டுப்புறத்துக்குமிடையேயுள்ள வேறுபாடுகளேப் போக்கவேண்டும். ஜனத்தொகையை இன்னும் சீரானவகையில் வினியோகிப்பதன் மூலம் இதற்கு வழி செய்யவேண்டும்.”

விவசாயி, மற்ருெரு ஆலேத் தொழிலாளியாகவே மார்க்ஸின் கண்களுக்குப் புலப்பட்டார். வளர்ச்சியின் தாழ்நிலேயில் இருக்கும் தொழிலாளி

என்றே விவசாயியை அவர் மதித்தார். மார்க்ஸ், பொருளாதார, சரித்திராசிரியர் என்ற வகையில் கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் கச்சிதமாகத் தெளிந்தறிந்தவர். ஆனால் விவசாயி உரிமையில்லாது, உள்ளே அத்துமீறி நுழைந்து விடுகிறவர், உபத்திரவத்தை விளைவிப்பவர் என்ற ரீதியில்தான் மார்க்ஸ் எண்ணமிட்டார்.

மார்க்ஸின் தத்துவத்தில் உள்ள இந்த பலவீனத்தை லெனினது மேதை சரிவரப் புரிந்து கொண்டது. போல்ஷிவிக் புரட்சி வெற்றிகரமாக வேண்டுமாயின், அதில் ரஷ்ய விவசாயியின் பங்கு திட்டவட்டமான முக்கியத்துவம் உள்ளதாக இருக்கவேண்டும் என்பதை அவர் கண்டு கொண்டார். 1917-ம் ஆண்டு நவம்பர் 7-ம் தேதியன்று, ரஷ்யாவிலுள்ள விளைநிலம் அனைத்தும் உழவருக்கே சொந்தம் என்று அவர் விடுத்த பிரகடனம் கூறியது. அதை வெளியிட்டபோது தான், புரட்சியானது அழித்துவிட இயலாத வகையில் உறுதிப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கை லெனினுக்கு ஏற்பட்டது. புதிதாகத் தமதாகிய நிலத்திற்காக, கடைசிவரை அவர்கள் போரிடுவர், பழைய நிலைமையை மீண்டும் தோற்றுவிப்பதற்கான எந்த முயற்சியையும் எதிர்த்து நிற்பர் என்ற நம்பிக்கை பிறந்தது.

1918 முதல் 1928 வரை ரஷ்ய விவசாயி கூடியவரை சுதந்திரனாகவே இருந்து வந்தான். பெரும்பாலோர் தாம் சாகுபடி செய்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகவே இருந்து வந்தனர்.

ஆனால் 1930-ம் ஆண்டிற்குள் தொழிலுக்கே பிரதானம் தருகின்ற புரட்சி முறைச் சித்தாந்த வழிக்கு, திடீரென ஸ்டாலின் திசை மாறிவிட்டார். ரஷ்ய விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை மூன்று கோடி. அவை பெரும்பான்மையும் தனித் தனி புலன்களை அனுபவித்து வந்தன. கம்யூனிஸ்ட். அரசாங்க அமைப்பின் சிருஷ்டிக்கு அவை மாபெரும் ராஜீய தடைமதிலாக இருந்து வந்தன. எனினும் நிர்ப்பந்தம் செய்து, பிரம்மாண்டமான கூட்டுப் பண்ணைகளில் அவற்றைச் சேர்க்கின்ற காட்டுமிராண்டித்தனமான பெரு முயற்சியில் அவர் இறங்கினர். வின்ஸ்டன் சர்ச்சிலிடம் ஸ்டாலின் தாமே கொடுத்த தகவலின்படி, இந்த நடைமுறையில் மாண்டுபோன விவசாயிகளின் எண்ணிக்கை ஒரு கோடி இருக்கும்.

ரஷ்யாவின் கிராம வாழ்க்கையை இவ்வளவு பெருமளவில் திருத்தியமைக்க ஸ்டாலின் முற்பட்டபோது, அதற்குப் பல அம்சங்களில் அப்போதைய ரஷ்ய நிலவரம் சாதகமாக இருந்து வந்தது. தனிநபர் வீதாசாரக் கணக்கில் உணவு உற்பத்தியின் அளவு உயர்நிலையிலேயே இருந்தது. ஜனநெருக்கம் குறைவாகவே காணப்பட்டது. முதல் உலக யுத்தத்திற்கு முன்னர், ஜார் காலத்திய ரஷ்யாவானது, ஒவ்வோர் ஆண்டும் ஒரு கோடி டன் தானியங்களை ஏற்றுமதி செய்து வந்தது. உணவு சப்ளை இவ்வாருக சுயமாகவே உபரியாக இருந்து வந்த நிலைமையானது, உற்பத்தி பின்தங்கிய காலங்களில் பஞ்சத்தைச்

சமாளிப்பதற்குப் போதுமானதாக இருந்துவந்தது. ஸ்டாலினது கூட்டுப்பண்ணைத் திட்டம் சோவியத் யூனியனை ராஜீய, பொருளாதாரப் பேராபத்தின் விளிம்புக்குக் கொணர்ந்துவிட்டது.

சீனவில் ஏறக்குறைய ரஷ்ய ரீதியிலேயே நிலைமை உருவாகி வந்துள்ளது. ஆனல் அங்கு ரஷ்யாவிலிருந்ததைவிட அனுகூல நிலை மிகமிகக் குறைவு. சீன—இந்தியா அனுபவங்களை ஒப்பு நோக்கி கடைசி அத்தியாயத்தில் விமரிசனம் செய்வோம். சீன இப்போது மாபெரும் தேசிய நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கிறது.

சோவியத் விவசாயமும் சீன கம்யூனிஸ்ட் விவசாயமும் வெவ்வேறு அளவுகளில் தோல்வி கண்டிருக்கின்றன. வெவ்வேறு வகைகளில் இத் தோல்விகள் வெளிப்போந்துள்ளன. எனினும் அடிப்படையான காரணங்கள் ஒரே மாதிரி யானவை. இரண்டு தேசங்களுமே பொருளாதார, சமூக நல வளர்ச்சி விஷயத்தில் நியாயமான ஒரு சம நிலை இருந்து வரவேண்டிய அவசியத்தை அலட்சியம் செய்துவிட்டன. அதிக உற்பத்திக்குப் பயனுள்ள ஊக்கங்களை அளிப்பதற்குப் பதிலாக, திசை தெரியாது பின்னிக் கிடக்கும் கண்ட்ரோல்களை அவை பெரிதும் நம்பியிருந்தன. விவசாயிகளின் தெம்பையெல்லாம் அவை குறைத்து விட்டன. எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலும், தமது நிலைமையை அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடும் என்ற உண்மையான நம்பிக்கை அவர்களுக்கு இல்லாது போயிற்று.

கம்போடியாவின் முதல்வராகிய இளவரர்க் சிகனூக் சில மாதங்களுக்கு முன்னர் விவசாயக் குடும்பங்களுக்கு ஊக்கம் அளிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை எனக்கு அறிவுறுத்திக் கூறினர். கம்போடியாவில் நிலம் வளம் மிகுந்தது. மழை நிறையப் பெய்கின்றது. இந் நிலைமையில் ஏன் அவர்கள் ஒவ்வொரு வருஷமும் ஒரே போகம் நெல் சாகுபடி செய்கின்றனர் என்று அவரைக் கேட்டேன். "நாங்கள் போதிய சைகிள்களைத் தயாரிக்காமல் இருப்பதால்தான்" என்று அவர் பதிலளித்தார்.

வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு பலதரப்பட்ட, மனதிற்குப் பிடித்தமான பண்டங்கள் இருக்கவில்லை. இந் நிலையில், கம்போடியக் குடியானவன், தனது உணவு சப்ளை போதுமானதாக இருக்கும்பொழுது இரண்டாவதுபோகம் விளைவிப்பதற்காக வேண்டி மேலும் மூன்று அல்லது நான்கு மாத காலம் ஏன் வயல்களில் மேலும் உழைத்தாக வேண்டும் என்று நினைக்கிருன்.

அமெரிக்காவில் எங்கள் ஜனத்தொகையில் 9 சதவிகிதத்தினர்தாம் விவசாயத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள். ஆனல் நாங்கள் எல்லோரும் எவ்வளவு தானியங்களை உபயோகிக்க முடியுமோ, அதைப்போல இரு மடங்கை அவர்கள் விளைவிக்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும் நாங்கள் இரண்டு கோடி டன் கோதுமையை அயல்நாடுகளுக்கு அனுப்புகிரேம். இதில் நான்கில் ஒரு பங்கு இந்தியாவுக்கு வருகின்றது.

விவசாயத் துறையில் இவ்வளவு அசாதாரண மான விளைச்சல் காணப்படுவதற்குக் காரணங்கள் பல உண்டு. தமது சாதனைகள் தொடர்ந்து திருந்த வேண்டுமென்பதற்காக, புதுப்புது உத்தி களைப் பரீட்சித்துப் பார்க்கும் முயற்சியில் சிரமப் பட்டு உழைப்பதற்கு அமெரிக்கர் எப்போதுமே தயாராக இருந்து வந்திருக்கிறார்கள். மேலும் விவசாயிகளுக்கு உதவி அளிப்பதில் அரசாங்கம் எப்போதுமே ஜீவாதாரமான பங்கு பற்றி வந்திருக் கிறது.

குறைந்த வட்டியில் கடன் தருகிறார்கள். அவற்றைக்கொண்டு திருந்திய கருவிகளையும், உரங்களையும் வாங்க முடிகின்றது. அவை தயக்க மின்றி கிடைக்கின்றன. விலைகள் வீழ்ச்சியுறா வண்ணம் பாதுகாப்புத் தருகின்றார்கள். மகசூல் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் இருந்து வருகிறது. இவை இரண்டுமாகச் சேர்ந்து நியாயமான விலை கொடுப்பதை உறுதி செய்கின்றன. வாழ்க் கையை வளப்படுத்துகின்ற பொருட்கள் கடை களில் நிறைய இருக்கின்றன. தபாலில் எழுதி வரவழைத்துக்கொள்ளக்கூடிய பண்டங்களைப் பற்றி விவரமான கேட்லாக்குகள் உண்டு. தனது விவசாய நடைமுறைகள் மேலும் மேலும் திருந்தி அதிக வருமானம் தருவதையும், அதன்மூலம் தனது குடும்பத்தின் வாழ்க்கை நிலைமை உயர்ந்து கொண்டே வருவதையும் கண்ணுக்கு மெய்யாக விவசாயி காண்கிறான். புது முயற்சிக்கு அவை ஊக்கமளிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக,

அமெரிக்கக் குடியானவர்களில் பெரும்பாலோர் சுயமாகவே துணிந்து புது முயற்சியில் ஈடுபடும் தன்மை படைத்தவர்கள். தாம் பாடுபடுவது சொந்த நிலத்தில் என்ற நம்பிக்கை காரணமாக இவ்வாறு அவர்களால் உழைக்க முடிகின்றது.

விளைபொருட்கள் அதிகமாக உற்பத்தியாவதற்குச் சாதகமான கட்டுக்கோப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டன. 1862-ம் ஆண்டில் பண்ணைச் சட்டம் நிறைவேறியது. ஒரு குடும்பம் சாகுபடி செய்வதற்குக் கட்டுபடியாகும் பண்ணையின் விஸ்தீர்ணம் 160 ஏக்கர் என்று அது நிர்ணயித்தது. தாமே சாகுபடி செய்வதற்குத் தயாராக இருந்த எந்த அமெரிக்கருக்கோ அல்லது அந்நியருக்கோ அந்த அளவு விளைநிலம் இனமாகத் தரப்படும் என்று அந்தச் சட்டம் கூறியது. அதே வருஷம் 'மாரில் சட்டம் நிறைவேறியது. ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கத்திற்கும் பெருமளவில் பொது நிலத்தை அச் சட்டம் வழங்கியது. அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களைக்கொண்டு விவசாய மானியக் காலேஜுகளை நிறுவினார்கள். விவசாய விஞ்ஞானப் பிரிவுகளில் ஆராய்ச்சி நடைபெறுவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் அவை பயன்பட்டன. 1887-ல் ஹாட்ச் சட்டம் நிறைவேறியது. ஆராய்ச்சிக்கும், புதுப்புது பரீட்சைகளை விவசாயத் துறையில் நடத்துவதற்கும், மத்திய அரசாங்க

நிதிகள் அதிகப்படியாக ராஜ்யங்களுக்குக் கிடைக்க அது வழிவகை செய்தது.

அரசாங்கத்தின் ஆதரவுடன் விரிவாக நடைபெற்ற இந்த ஆராய்ச்சியின் பலன்கள் கோடிக் கணக்கான விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வதற்கு ஒரு விரிவான ஏற்பாடு அமைந்திருந்தது. ஒவ்வொரு பண்ணைக்கும் வசதிகளை விஸ்தரிக்கின்ற சேவை திறம்பட உருவாகியது. ஆனால் மானிய உதவிபெற்ற சர்வகலாசாலைகள் மூலம் இந்த உதவி-விஸ்தரிப்புப் பணி நடைபெற்றது. இந்தச் சேவைத் திட்டம் இன்னுங்கூட தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக கஷ்டப்பட்டு உழைக்கின்ற சுதந்திர மனப்பான்மையுள்ள அமெரிக்கக் குடியானவன், இக்காலத்திலும் தனது தொழிலில் தெம்புடன் ஈடுபட்டிருக்கின்ருன், வளமையில் கொழிக்கின்ருன். திருந்திய சாகுபடி முறைகளை உருவாக்கிப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் அவனுக்கு அளித்து வந்திருக்கும் உதவிதான் பெரும்பாலும் இதற்குக் காரணம். தனது சொந்தப் பொருளாதார நிலைமை பந்தோபஸ்துடன் கூடியதாக இருக்கும் என்ற நிம்மதி அவனுக்கு இருந்து வருகிறது. அதே சமயத்தில், அவனது சுதந்திரத்தையும், வலுவில் முன்வந்து பாடுபடுவதற்கான ஆர்வத்தையும் மதித்து அரசாங்கம் செயல்பட்டு வந்திருக்கிறது.

அமெரிக்கர்களாகிய எங்களுக்குக் கிராமிய மரபு என்று ஒன்று உண்டு. எப்போதுமே அதை

நினைந்து பெருமைப்படும் சுபாவம் படைத்தவர்கள் நாங்கள். பெரிய உத்தியோகங்களுக்கு அபேட்சகர்களாகச் செல்கின்றவர்கள் தாங்கள் எந்த விவசாய மரபைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறுர்கள். ஒரு பண்ணையில் பிறந்த ராஜீயத் தலைவர், ஒவ்வொரு வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் இந்தத் தகவலை வோட்டர்களிடம் எடுத்துச் சொல்வதற்குத் தயங்குவதே இல்லை.

## III

அமெரிக்காவின் கிராமிய அனுபவம் பிறருக்கு ஓர் அறைகூவலாக அமைந்துள்ளது. மேலும் நல்ல படிப்பினையாகவும் அது உருப்பெற்றுள்ளது. ஆனுல் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் வளர்ச்சி கண்டு வருகின்ற தேசங்கள், ஜப்பானிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினைகள்தாம் மிக அதிகம். சம்பிரதாயமான விவசாய, பொருளாதார வழிமுறையில் கட்டுண்டிருந்தது ஜப்பான். ஜீவனத்துக்கே போதியதும் போதாததுமான வருவாய் பயிர்த்தொழிலில் கிடைத்து வந்தது. சமூகத்தில் உறவு முறைகள் பழைய ஜபர்தஸ்து அடிப்படைகளில் இருந்து வந்தன. இந்த நிலவரம் அனைத்தையும் மாற்றி, சக்திவாய்ந்த நவீன பொருளாதார கட்டுக்கோப்பை உருவாக்கியுள்ள முதல் ஆசிய நாடு ஜப்பான்தான்.

ஜப்பானின் இந்தச் சாதனை பல்லாண்டுக் கால முயற்சியின் விளைவு. 1868-ம் ஆண்டில் மெய்ஜீ சக்கரவர்த்திகள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தனர். உறக்கத்தில் ஆழ்ந்திருந்த ஜப்பானிய சமுதாயம் விழிப்புற்றெழுந்து மாபெரும் தேசிய முயற்சியில் ஈடுபடச் செய்வதற்கு அரசாங்கம் அரும்பாடு பட்டது. விளைபொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பது அதில் பிரதான அம்சமாக விளங்கியது.

தேசத்தின் பொருளாதார வாழ்க்கையை ஒரு முகப்படுத்தும்வகையில் உள்நாட்டுச் சுங்கங்களையெல்லாம் அகற்றிவிட்டனர். நிலப்பிரபுக்களின் உடைமைகள் மீது வரிகள் விதிக்கப்பட்டன. அதன்மூலம் கிடைத்த வருவாயிலிருந்து கல்வி, விவசாயிகளுக்கான உதவியின் விஸ்தரிப்பு, திருந்திய விதைத் திட்டம் ஆகிய மூன்றும் வளமடைந்தன. இவற்றின் காரணமாக கிராமப் பொருளாதாரம் நேரிடையாக நன்மை அடைந்தது. அப்போது குறைந்த வட்டி என்று கருதப்பட்ட விகிதத்தில் விவசாயிகளுக்கு உள்ளூர்ப் பாங்குகள் கடன் உதவி அளித்தன. கிடங்குகளைக் கட்டி விளைபொருட்களை அவற்றில் வைத்திருக்க வசதி செய்து கொடுத்தனர். உடனடியாக விற்பனையாகாதவற்றை அங்கே பந்தோபஸ்துசெய்து வைப்பது சுலபமாயிற்று. விளைபொருட்களின் விலைகள் ஏறக்குறைய ஒரு ஸ்திர நிலைக்கு வந்தன.

ஒவ்வோர் ஆண்டும் விளைபொருட்களின் அளவு சராசரி 2.3 சதவிகிதம் கூடுதலாவதற்கு

இந்த நடவடிக்கைகள் துணைபுரிந்தன. எனினும், சாகுபடியாளர்களாக மட்டும் இருந்து வந்த குடியானவர்களின் நிலைமை பின்தங்கியதாகவே இருந்து வந்தது. அவர்களது உரிமைகள் மிக மிகச் சுருங்கின. அனுகூலங்களில் பெரும் பகுதி பெரிய நிலச்சுவாந்தார்களுக்கே போய்விட்டது. சுதந்திரமாகச் சாகுபடி செய்துவந்த குடியானவர்களின் கடன் பளு அதிகமாகி வந்தது. சுரண்டல் நீடித்தது. அவர்களில் பெரும்பாலோர் பிறரது புலன்களில் சாகுபடியாளர்களாகத் தாழ்ந்து விட்டனர். 1930-ம் ஆண்டில் ஜப்பானில் மொத்த விளை நிலத்தில் பாதி சாகுபடியாளரிடம் இருந்து வந்தது. அவர்கள் கொடுத்த வாரம் விளைச்சலில் பாதிக்கு மேலாக இருந்து வந்தது.

மகசூல் மோசமாக இருந்த வருஷங்களில் சாகுபடியாளன் கடனாளியாகிவிட்டான். தான் பட்ட கடன்மீது அவன் அக்கிரமமான வட்டி கொடுக்க வேண்டியிருந்தது. நேரடியாக நிலச்சுவானுக்கோ அல்லது உள்ளூர் பாங்குக்கோ அவன் அந்த உயர்ந்த விகிதங்களில் வட்டி கொடுத்து வந்தான். அந்தப் பாங்குகள் பெரும்பாலும் நிலக்காரர்களின் ஆதிக்கத்தில் இயங்கி வந்தன. இதன் காரணமாக, தான் சாகுபடி செய்து வந்த நிலம் அவனை மேலும் மேலும் தன் பிடியில் இறுக்கிக்கொண்டே வந்தது. ஆனால் அந்த நிலம் அவனுக்குச் சொந்தமாக இருக்கவில்லை.

நிலக்காரன் செலுத்தியது எல்லாம் மிதமாக இருந்து வந்த நிலவரிதான். உரத்திற்கான

தொகையும், கட்டிடச் செலவு, உபகரணங்களுக்கு ஆகும் செலவு, விதை, பல்வேறு சந்தாக்கள் ஆகியவற்றைச் சாகுபடியாளன் கொடுக்க வேண்டியிருந்தது. விளைச்சல் நன்ருக இருந்த வருஷங்களில், இந்த பல்வேறு பொறுப்புக்களின் காரணமாக, மொத்த விளைச்சலில் 25 முதல் 30 சதவிகிதத்துக்கு மேல் நிகரமாக அவனுக்குக் கிடைக்காமல் இருந்து வந்தது. எனவே நிலமுடையவர்களாக இருந்த ஒருசில ஆயிரம் பேருக்கும் நிலமற்றவர்களாக இருந்த கோடிக்கணக்கான பேருக்கும் இடையே இருந்து வந்த வேறுபாடு அபாயகரமாகி வெடித்துவிடும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

மெய்ஜீ சகாப்தத்தின் ஆரம்ப காலத்தில் கிடைத்த உண்மையான அனுகூலங்கள் முற்றிலும் பயனற்றுப் போகவில்லை. 1930-40ல் நாட்டில் அப்போதிருந்து வந்த வாரச் சாகுபடி முறையின் கீழ், பலவகை அநீதிகளுக்கு சாகுபடியாளர் இரையாகி உருக்குலைந்து போயினர். கஷ்டப்பட்டு உழைப்பதற்கான ஊக்கம் தேய்ந்து வந்தது. உற்பத்தியின் வளர்ச்சி வேகம் குறைந்தது. விளைச்சல் மோசமாக இருந்த ஆண்டுகளில் நகர்ப் பகுதிகளில் உணவு பற்ருக்குறையாக இருந்து வந்தது. நல்ல விளைச்சல் இருந்த ஆண்டுகளில் கூட பொருளாதார அமைப்பில் விவசாயம் சற்று தாழ்நிலையிலேயே காணப்பட்டது. ஜப்பானின் தொழில் வளர்ச்சிக்குத் துணைபுரிகின்ற தகுதியை அது இழந்துவிட்டிருந்தது.

யுத்தத்திற்கு முன்னர் இந்தப் போக்கை தடுத்து நிறுத்திவிடுவதற்கு ஜப்பானியச் சக்கர வர்த்தியின் அரசாங்கம் முயன்று பார்த்தது. சட்டம் செய்தார்கள். மோசமாக நடந்து கொண்டவர்கள் தவிர, மற்றக் குடியானவர்கள் விஷயத்தில் சாகுபடிக் குத்தகைகளை புதுப்பித் தாக வேண்டுமென்று நிலச்சுவான்களை அச் சட்டம் நிர்ப்பந்தித்தது. ஒரு நிலத்தின் நியாய விலை, அதிலிருந்து கிடைக்கின்ற வருஷவாரி குத்தகையைப்போல 16 மடங்கு என்று நிர்ணயிப் பதற்கு ஒரு முயற்சியும் நடைபெற்றது. தாம் சாகு படி செய்துவந்த நிலங்களை குடியானவர்கள் வாங் கிக்கொள்வதற்குச் சுலபமான தவணைக்கடன் தரப் பட்டது. 25 வருஷத் தவணைகளைச் செலுத்தி அவர்கள் நிலத்திற்கு உடையவர்களாகி விடலாம்.

ஆனால் யுத்தத்திற்குப் பிறகுவரை ஜப்பானிய விவசாயத்தில் பயனுள்ள புரட்சி எதுவும் தலை தூக்கவில்லை. ஜெனரல் மக்-ஆர்தரின் நேச ராணுவ சர்க்காரது சிபாரிசின்பேரில், ஜப்பானிய, அரசாங்கம், உலகம் கண்டிராத மிகத் தீவிரமான நிலச் சீர்திருத்தத்தை மேற்கொண்டது. ஜப்பா னில் நிலத்தை உழுகின்றவர்கள் தமது உழைப் பின் பயனை அனுபவிப்பதற்கு இனி சமவாய்ப்பு உள்ளவர்கள் என்பதை உறுதி செய்வதுதான் அந்தச் சட்டத்தின் நோக்கம் என்பது தெளி வாக்கப்பட்டது.

நிலவுடைமைக்கு 7½ ஏக்கர் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. பெரிய பழத் தோட்டங்க

ளுக்கு மட்டும் விலக்குக் கிடைத்தது. அவை எண்ணிக்கையில் மிகக் குறைந்தவை. ஆனால் நிலத்திற்கு உடையவனே அதைக் கவனித்துக் கொள்வதாக இருந்தால் மட்டுமே அதற்கும் விலக்கு உண்டு. இந்த வரம்புக்கு மிகுதியாக வுள்ள நிலத்தை அரசாங்கம் கடன் பத்திரங்களைக் கொடுத்து விலைக்கு வாங்கியது. வாங்கிய பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குள் குடியானவர்களுக்கு அவற்றை அது வினியோகம் செய்தது. இந்த ஏற்பாடுகளின் விளைவாக, இப்போது ஜப்பானியக் குடியானவர்களில் 100-க்கு 94 பேர் சொந்த நிலத்தில் சாகுபடி செய்பவர்களாக மாறி விட்டனர். சராசரி ஒரு புலனின் விஸ்தீர்ணம் 3 ஏக்கர்.

கிராமப் பகுதிகளில் ஏற்பட்ட இந்தப் புரட்சியின் சமூக, பொருளாதார, ராஜீய விளைவுகள் விசேஷ பரபரப்பை ஊட்டுபவையாக இருந்தன. தமது வாழ்க்கையில் முதல் தடவையாக, ஏன், தன் தந்தை, பாட்டன் வாழ்ந்த காலத்தில்கூட கண்டிராதவாறு, குடியானவன் உண்மையில் மதிப்புக்கு உரியவன் என்பதை, இன்றைய ஜப்பானிய விவசாயி தனது புதிய விடுபட்ட நிலையில், கண்டறிந்தான். அவனுக்கென்று சில உரிமைகள் இறுதியாகக் கிடைத்துவிட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவன் நிலத்திற்குச் சொந்தக்காரனாகி விட்டான். இதன் பயனாக, முதல் தடவையாக அவனிடம் தன்மதிப்பும் நம்பிக்கையும் தோன்றின. தன் குடும்பத்தையும் தன்னை

யும், சமுதாயத்தையும் உயர்நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்ற ஆர்வ மிகுதி ஏற்பட்டது.

அரசாங்கம் அளித்த உதவியைக் கொண்டு, காலதாமதம் செய்யாமல் கடன் தருவதற்கான கூட்டுறவுச் சங்கங்களை அவன் அமைத்தான். குறைந்த வட்டியில் சுலபமாக, தயக்கமின்றி அவை கடன் அளித்தன. விற்பனைக்கான கூட்டுறவுச் சங்கங்களையும் அவன் தோற்றுவித்தான். தனது பொருளின் விற்பனை விலைக்கும், நகரத்து மார்க்கெட்டுகளில் கிடைக்கின்ற சில்லறை விற்பனை விலைக்குமிடையே உள்ள வித்தியாசத்தில் சராசரி 6 சதவீதம் அவனுக்கு அதிகப்படியாகக் கிடைக்கும் என்ற நிலைமை உறுதி செய்யப்பட்டுள்ளது. விவசாய வசதிகளை விஸ்தரிக்கின்ற சேவா முறை மிகவும் திருந்தியுள்ளது. நவ நவமான உத்திகள் இப்போது அவனுக்கு நன்ருகப் பழக்கமாகிவிட்டன.

இவ்வாறு பலவகைகளில் முயன்று வளர்ச்சி கண்டதன் விளைவாக, ஓர் ஏக்கரில் விளைகின்ற அரிசி, கோதுமை சராசரி மிகமிகக் கூடுதலாகி விட்டது. உலகிலேயே மிக உயர்ந்த சாதனைகளிடையே ஜப்பானிய சாதனையும் இடம் பெற்றுள்ளது. யுத்தத்திற்கு முன்னர் இருந்த உற்பத்தியளவுக்கு இது அரை மடங்கு மேம்பட்டது. சாகுபடியாளன் இப்போது நிலக்காரனுக்கென்று முன்போலத் தனியாக குத்தகை கொடுப்பதில்லை. தவிர, வாங்கி உபயோகிப்போர் கொடுக்கின்ற விலையில் ஓர் அதிகப்படி விதாச்சாரம் இப்போது

அவனுக்குக் கிடைக்கின்றது. எனவே தன் உழைப்பின் மூலம் விவசாயிக்குக் கிடைக்கின்ற ஆதாயமானது, முன்பிருந்ததைவிட இப்போது கணிசமாக அதிகரித்துள்ளது.

இந்த மிக விரிவான அபிவிருத்தி முயற்சிகள் ஜப்பானில் கிராம வாழ்க்கையை வியக்கத்தக்க வகையில் வளப்படுத்தியுள்ளன. 20 ஆண்டுகளுக்கு முன்வரை ஓர் ஆயிர வருஷ காலம் மாறுதல் எதுவும் இல்லாமல் இருந்து வந்த கிராமங்கள் இப்போது மின்சார வசதியுடன் விளங்குகின்றன. ஜப்பானியக் குடியானவர்களின் மனைவிகள் இப்போது மின்சார இயந்திரங்களின் உதவியுடன் துணிகளை வெளுத்துக் கொள்கிறார்கள். கிராமங்களிலுள்ள வீடுகளில் பாதிக்குமேல் டெலிவிஷன் ஏரியல்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான குடியானவர்கள் மோட்டார் சைக்கிள்களில் தமது மனைவிகளுடன்கூட கடைகளுக்குச் சென்று சாமான்களை வாங்கி வருகின்றனர்.

## IV

ஜப்பானில் கிராமப் பகுதிகள் சுபிட்சமாக இருந்து வருவதற்கான காரணங்களில் ஒன்று நாட்டுப்புறத்தில் நெடுக சின்னஞ்சிறு தொழிற்சாலைகள் ஏராளமாகத் தோன்றி லாபகரமாக நடந்து வருவதுதான். இம்மாதிரி தொழிற்சாலைகள் தோன்றுவதும் சுபிட்சத்தின் வழித்தோன்றல் என்று கூறலாம். இந்தத் தொழிற்சாலைகள்

போதிய நவீன வசதிகள் கொண்டவை, இயந்திர வசதிகள் நிறைந்தவை. தொழில் உற்பத்தியைப் பிரதானமாகக் கொண்டு பொருளாதார அமைப்பில் போட்டியிடுவதற்கான முழுத் தகுதியுடன் அவை இயங்குகின்றன. பகுதிநேர உழைப்பாளருக்கு மிகவும் தோதுள்ள வகையில் இவை அமைந்திருக்கின்றன. கிராமப் பகுதிகளின் விசேஷ வர்த்தகத் தேவைகளுக்கேற்ப இவை உருவாக்கப்பட்டுள்ளன.

ஜப்பானியக் குடியானவர்களில் முக்கால் பங்கினர் தமது விவசாய வருமானத்துடன்கூட இந்தத் தொழிற்சாலைகளில் பகுதிநேர வேலைகளில் ஈடுபட்டு, கூடச் சம்பாதிக்கின்றனர். மீன் பதனிடு தொழிற்சாலைகள், பலவகைப் பொருட்களைப் பக்குவப்படுத்தி டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலைகள், விவசாயக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் போன்றவைகளிலும், பழுதுபார்க்கும் பலவகைப் பணிகளில் ஈடுபடுவதன் மூலமாகவும், அவர்கள் சம்பாதிக்கிறார்கள்.

யுத்தத்தை அடுத்தாற்போல் வந்த ஆண்டுகளில் ஜப்பானின் சிறிய புலன்கள் மிகத் திறமையுடன் சாகுபடியாயின. ஒவ்வொரு குடும்பத்தினரும் தாமே கைகளால் உழைத்து இதைச் சாத்தியமாக்கினர். ஒவ்வொரு பயிரையும், ஜாக்கிரதையாகக் கவனிக்கின்ற நடைமுறையைப் பார்த்தால், ‘விவசாயம்’ என்பதைவிட ‘தோட்டக்கலை’ என்பதே இங்கு நடைபெறுகின்ற

பணிக்கு பொருத்தமாக இருக்குமெனத் தோன்று கிறது. ஓர் ஏக்கரின் சராசரி விளைவு, அமெரிக் காவைவிட ஜப்பானில் அதிகமாக இருக் கின்றது.

பகுதிநேர வேலைகள் வரவர அதிகமாகக் கிடைத்து வருகின்றன. எல்லாவிடங்களிலும் சின்னஞ்சிறு தொழிற்சாலைகளும், சேவை ஸ்தாப னங்களும் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. எனவே இயந்திர சக்தியால் இயங்கும் சிறிய விவசாயக் கருவிகளைக் குடியானவர்கள் அதிகமாக வாங்கி உபயோகிக்கின்றார்கள். அப்படிச் செய் வதன் மூலம் தொழில்களில் உழைப்பதற்கு அதிக நேரம் அவர்களுக்குக் கிடைக்கின்றது. இயந்திர வசதிகளை விவசாயத்தில் ஈடுபடுத்துகின்ற சூழ் நிலையில், விளைபொருட்களின் உற்பத்தி சாதாரண மாகக் குறையக்கூடும். ஆனால் அப்படிக் குறையா வண்ணம் பார்த்துக்கொள்வதற்கு புதுப்புது சாகுபடி முறைகளை அங்கு கையாளுகின்றனர். உர வகைகளை அதிகமாக உபயோகிக்கின்றனர். புதிய தொழில்கள் கிராமங்களில் வேரூன்றி யிருக்கின்றன. எனவே கிராமங்களிலிருந்து குடிபெயர்ந்து கோடிக்கணக்கான விவசாயிகள் நகரங்களில் குவிவதால் சமுதாயத்திற்கு ஏற்படு கின்ற வேதனை தரும் கஷ்டநஷ்டங்கள் இல்லாது போகின்றன. தொழில்களின் விளைவுகளைப்பற்றி காந்திஜிக்குப் பெரிதும் கவலை விளைவித்த ஒரு பிரச்சினை இவ்வாறு ஜப்பானில் தவிர்க்கப்பட் டுள்ளது.

ஜப்பானிய நாட்டுப்புறத்தில் ஏற்பட்டுள்ள புரட்சி பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடியது, அதுமிகக் கவர்ச்சிகரமாக இருக்கின்றது என்பது உண்மையே. ஆனால் வேறு நாடுகளில் அதை அப்படியே பின்பற்ற முடியும் என்று கருதுவது தவறு. ஜப்பானியக் குடியானவர்கள் ஏற்கெனவே முற்போக்கான சாகுபடி உத்திகளைக் கையாண்டு வந்தவர்கள். உரத்தையும் பாசன வசதியையும் பயன்படுத்துவது, பல்லாயிரக்கணக் கான குடியானவர்களுக்குப் பழகிப்போன விஷயம். அதிகமாக விடுமுதல் செய்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய முதன்மையான ஊக் கத்தை அவர்களுக்கு அளித்தது, சாகுபடி நிலம் அவர்களுக்குச் சொந்தமாக இருந்ததுதான்.

மேலும் ஜப்பானியக் குடியானவர்கள் எழுத் தறிவு உள்ளவர்கள். மெய்ஜீ சகாப்தம் அளித்த தனிப்பெரும் நல்வாய்ப்பு எழுத்தறிவுதான். 1946–ம் வருஷத்து பெரிய நிலச்சீர்திருத்த ஏற் பாடுகளின்கீழ் நிலவுரிமை பெற்றவர்களில் 90 சதவிகிதத்தினர், தமக்கு உரிமை அளித்த சட்டத்தைப் படிக்கக்கூடிய வாய்ப்பினராக இருந்த னர். சட்டப்பூர்வமாக தமக்குக் கிடைத்த உரிமை கள் யாவை என்பதை ஒவ்வொருவரும் அறிந் திருந்த காரணத்தால் துரிதமாக, முழு அளவில் சீர்திருத்தங்களை நடத்தி வைக்க முடிந்தது.

நிலச் சீர்திருத்தத்தைப் பயனுள்ள வகையில் நடத்தி வைப்பதற்குத் தடையாக இருந்து வரும் ராஜீய முட்டுக்கட்டைகளைச் சுட்டிக்காட்டி,

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கத் தலைவர்களில் பலர் ஆயாசப்படுகின்றனர். ஜப்பானில் இந்தச் சீர்திருத்தம் நிறைவேறிய காலத்தில் அங்கு அமலானது, யு. எஸ். ராணுவ சர்க்காரின் அதிகாரம். இறுதியான ராஜீய அதிகாரம் அந்த அரசாங்கத்திடந்தான் அப்போது இருந்து வந்தது. அவர்கள் சுறுசுறுப்பாக அளித்த ஆதரவுதான் இந்தச் சீர்திருத்தத்தை ஜப்பானில் சாத்தியமாக்கியது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். நமது காலத்தில் இரண்டு ஜனநாயக நாடுகள் மட்டுமே பார்லிமெண்டுகளின் ஜனநாயக ஒட்டுரிமைகளின் மூலம் சாகுபடியாளருக்குப் பரவலாக நிலத்தை வினியோகித்தன என்பதை அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். 1926-ல் செக்கோஸ்லோவேகியாவும் 1959 வாக்கில் மெக்ஸிகோவும் இம்மாதிரி சாதனைகளைப் புரிந்தன.

விவசாயமே பிரதானமாக இருக்கின்ற நாடுகளில், வழிவழியாக வந்துள்ள கிராமிய சமுதாய அமைப்பும், நிலச்சுவான்களின் எதிர்ப்புமாகச் சேர்ந்து, ராஜீய வகையில் செல்வாக்குள்ளவையாக விளங்குகின்றன என்பதற்கு ஆதாரம் இருக்கின்றது. ஆனாலும், தமது மக்களின் க்ஷேம நலத்திற்காக என்று உண்மையிலேயே தம்மைப் பணித்துக்கொண்டுள்ள, தகுதிவாய்ந்த ஜனநாயக அரசாங்கங்கள், அத்தியாவசியமான சீர்திருத்தங்களுக்கு வேண்டிய ராஜீய ஆதரவைப் பெறச் சக்தியற்றவை என்று சொல்ல முடியாது. அது இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

## V

எனக்கு ஆழ்ந்த நம்பிக்கையுள்ள ஒரு கோட்பாட்டை எடுத்துரைத்து இந்த அத்தியாயத்தை துவக்கினேன். மக்களிடம் உறைந்து கிடக்கின்ற சக்திகளை விடுவித்துப் பயன்படுத்துவதன் மூலமாக மட்டுமே கிராமப் பகுதிகளில் வெற்றிகரமான வளர்ச்சி சாத்தியமாகும் என்பதுதான் அந்தக் கோட்பாடு. ஜப்பானிய அனுபவத்தைக் கருத்தில் வைத்துக்கொண்டு, இந்தக் கோட்பாட்டை இந்தியா விஷயத்தில் எவ்வாறு செயலாக்க முடியும் என்பதைப் பார்ப்போம்.

இந்தியாவின் வளர்ச்சிப் பிரச்சினையை குறிப்பாக எடுத்துக்கொண்டு கவனிக்க முற்படுகையில் சிறிது சிரமம் எழத்தான் செய்கிறது. இப்பிரச்சினை சிக்கல்கள் நிறைந்தது. பலவகைப்பட்ட விளக்கங்களுக்கு இடம் தரக்கூடியது. நான் ஒரு அயல்நாட்டினன். எனவே சிறிது தயக்கத்துடன் தான் பேசியாகவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ஆசியாவில், ஆபிரிக்காவில், லத்தீன் அமெரிக்காவில் பல வருஷ காலமாக நாட்டுப்புற வளர்ச்சியை ஊன்றிக் கவனிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. இந்தியப் பொருளாதாரத்தை விசேஷமாக ஆராய்ந்து இருக்கிறேன். எனவே எனது கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான தெம்பு அதன் விளைவாக ஏற்பட்டுள்ளது.

இந்திய கிராமப் பகுதிகளின் பிரச்சினைகள் இன்னும் திடுக்கிட வைப்பனவாகவே இருந்து

வருகின்றன. எனினும் அவற்றைச் சமாளிக்கும் வகையில் கணிசமான ஆரம்ப முயற்சி தொடங்கியிருப்பதாகவே கூற வேண்டும். சமுதாய வளர்ச்சித்திட்டம் மிதமான அளவில் 1952-ல் உருவாக்கப்பட்டது. தம்மிடம் உறைகின்ற சக்திகளை எவ்வாறு வெளிப்படுத்திப் பயனடைய முடியும் என்பதை கிராம மக்கள் தாமே கண்டுகொண்டு செயலாற்றுவதற்குத் துணைபுரிவதுதான் அத்திட்டத்தின் நோக்கம். தமது சொந்த அபிவிருத்தியில் அவர்கள் சுறுசுறுப்புடன் ஈடுபடச் செய்வதுதான் அப் பணி. அவர்களது எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு அக்கறை உண்டு என்பதை இதன்மூலம் உணரச் செய்தார்கள்.

ஸ்தல ஒத்துழைப்பையும் சுய உதவியையும் அடிப்படையாகக்கொண்ட வளர்ச்சித் திட்டம் சமீபத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறையின் மூலம் பெருமளவில் ஊக்கம் பெற்றுள்ளது. பொறுப்பைப் பகிர்ந்து கொண்டு, நல்ல முறையில் உழைத்து, கூடவே வளர்ச்சியும் காண்பதற்கான வாய்ப்பை பஞ்சாயத்து ஆட்சி முறை, கோடிக் கணக்கான நமது மக்களுக்கு அளிக்கின்றது என்று பிரதம மந்திரி அண்மையில் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்.

இத்தகைய பொறுப்புணர்வைத் தோற்றுவிப்பதைவிட, வளர்ச்சி காண்கின்ற ஒரு நாட்டில், வேறு முக்கியமான பணி எதுவும் இருக்க முடியாது. பஞ்சாயத்து ஆட்சி நல்ல முறையில் உருவாகி, சுறுசுறுப்பான ஆதரவும் அதற்குக்

கிடைக்குமானால், பொருள்படைத்த அளவில், இந்தியாவின் கிராம வளர்ச்சிக்குத் துணைபுரிய அதனால் முடியும்.

முதலில் உருவாகிய சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று, இணக்கமான அபிவிருத்தியை ஊக்குவிப்பது தான். கல்வி, ஆரோக்கிய, சுகாதார வசதிகள் திருந்தும்படிச் செய்வது, ரோடுகளையும் செய்திப் போக்குவரத்து வசதிகளையும் அமைத்துத்தருவது ஆகியவற்றுடன் கூடவே, விளைபொருட்களின் உற்பத்தி அதிகரிப்பதிலும் விசேஷ கவனம் இதன் மூலம் செலுத்தப்பட்டது.

ஒன்றையொன்று நம்பியிருக்கின்ற இத் தகைய இணக்கமான வேலைத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நபரும் தனது சொந்த மதிப்பை நன்குணர்ந்து, தனது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் திருத்தமாக அமைவதற்கு உழைத்தாக வேண்டிய ஊக்கம் அளிக்கப் படுகிறது. சிறந்த நியதிகளும் ஏற்றம் காண் கின்றன. இந்தப் புதிய நியதிகள், நிலச் சீர் திருத்தத்தின் துணையுடன்கூட, நல்ல வித்துக் களையும் திருந்திய நடைமுறைகளையும் பயன் படுத்திக்கொள்வதன் மூலம் விவசாய விளை பொருட்களின் உற்பத்தியை அதிகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் இத் திட்டத்தை உருவாக்கியவர்கள் மிதமிஞ்சிய நம்பிக்கையுடன் கூட பிரமாத சாத னைகளைப் புரிய முடியுமென நினைத்தனர். ஆனால்

தேவைப்பட்ட அளவுக்கு வசதி கிடைக்காது போனதால், வளர்ச்சி குறைவாகவே இருந்து வருகிறது. இதற்குக் காரணங்கள் பல உண்டு. போதிய அரசாங்க நிதி உதவி கிடைக்கக்கூடாத குறைநிலே, இந்த முறை புதியதாக இருப்பது, பழைய நிலேமை மாருமல் இருந்து வருவதில் அக்கறையுள்ளவர்கள் மாறுதல் ஏற்படாவண்ணம் முட்டுக்கட்டை போடுவது ஆகியவையும் இதற் கான காரணங்களில் சில. தவிர ஐந்து லட்சம் கிராமங்களில், இத்தகைய சிக்கல்கள் நிறைந்த முயற்சியைப் பெருமளவில் ஊக்குவிப்பதற்கு வேண்டிய பணி, நிர்வாகத் துறையின் சக்தியை மீறியதாக இருந்த நிலவரமும் மற்ருெரு காரணம்.

இந்தச் சந்தர்ப்பங்களின்கீழ் ஒரு சர்ச்சை நிகழ்வது தவிர்க்க முடியாததாகிறது. சமுதாய நல வளர்ச்சிக்காரார்கள் என்று கருதப்படுபவர் கள், நாட்டுப்புற சமுதாயம், மொத்தமாக, சம நிலே வாய்ப்புடன் அபிவிருத்தியடைய வேண்டு மென்று விரும்புகிறவர்கள். ஆனல் விளே பொருட்களின் உற்பத்தி பெருகுவதுதான் பிரதானம் என்று கருதுவோரும் உண்டு. இவர் களுக்கிடையே ஒரு சர்ச்சை நிகழலாயிற்று.

இணக்கமான வளர்ச்சிக்கு ஆதரவாக இருப்பவர்கள் தாம் இந்த வாதத்தில் வெல்லக் கூடியவர்கள் என்பது என் அபிப்பிராயம். சமூக, ராஜீய உணர்வு சூன்யமாக இருந்துவரும் நில வரத்தில், விளேபொருட்கள் உற்பத்தி தொடர்ந்து

அதிகமாகிக்கொண்டே போவது, வளர்ச்சி காண்கின்ற நாட்டில் சாத்தியமல்லவென்பதை அனுபவ பூர்வமாகக் கண்டறிந்திருக்கிறோம். குடியானவனது வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கு எவை காரணமோ, அவையே மேம்பாட்டின் விளைவாக விளைபொருட்களின் உற்பத்தி பெருகுகின்ற சாதனைக்கும் வழியாக அமைந்தாக வேண்டும்.

எல்லாவற்றையும்விட மிகப் பெரிதாக இருக்கின்ற பிரச்சினை நிலச்சீர்திருத்தம். இதைத் தெளிவாகக் கவனிப்பது அவசியம். ஒவ்வொரு விவசாயியும் தனது நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருப்பது அவசியம் என்பது சமுதாயநல வளர்ச்சிக்கு அடிப்படையான முக்கியத்துவம் உள்ளது-என்ற பிரக்ஞை எப்போதுமே காங்கிரஸ் கட்சிக்கு இருந்து வந்திருக்கிறது. 1935-ம் ஆண்டு அலஹாபாதில் காங்கிரஸ் கட்சி கூடி, இவ்விஷயமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதில் கூறப்பட்ட விஷயம் மிகச் சரியானது. "கிராம வாழ்க்கை சீர்திருந்துவதற்கான அடிப்படை முறை ஒன்றே ஒன்றுதான். குடியானவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற முறை ஏற்பட்டாக வேண்டும். அதன்கீழ் சாகுபடியாளனே நிலத்திற்கு உடையவனாகவும் இருக்க வேண்டும். ஜமீந்தார் அல்லது தாலூக்தாரின் குறுக்கீடில்லாமல் அரசாங்கத்திற்கு நேரடியாக அவன் நில வரியைச் செலுத்துபவனாக இருக்கவேண்டும்" என்று அத்தீர்மானம் கூறியது.

சுதந்திரத்தை அடுத்த ஆண்டுகளில், இந்த லட்சியத்தைக் கருத்திற்கொண்ட முயற்சிகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்த ஜமீந்தார்கள் அகற்றப்பட்டனர். பல ராஜ்யங்களில் நிலவுடைமைகள் மீது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. நிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய குத்தகைக்கும் உச்ச வரம்பு ஏற்பாடாயிற்று. வாரம் அல்லது குத்தகைச் சாகுபடியாளரின் சாகுபடி உரிமை பாதுகாப்புப் பெறலாயிற்று.

எனினும் இப்பணியில் மிகவும் சிரமமான பகுதி இனிமேல்தான் நடந்தாக வேண்டும். ஜமீந்தார்கள் எண்ணிக்கையில் மிகமிகக் குறைந்தவர்கள். அவர்கள் காலனி ஆட்சிக் காலத்தில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். எனவே, சலுகையுடன்கூடிய அவர்களுடைய அந்தஸ்தை அகற்றிவிடுவது, சுலபமான ராஜீயப் பணியாக அமைந்துவிட்டது. அவர்களை அகற்றிவிட்ட பிறகும், பெரிய நிலவுடைமைகளுக்கு அதிகப்படி தடைகள் ஏற்பட்டான பிறகும், 10 சதவிகிதத்தினரிடம் 50 சதவிகித நிலம் இருந்து வருகிறது. ஒரு சதவிகிதத்தினர் ஐந்தில் ஒரு பங்கு நிலத்திற்கு உடையவர்களாக இருந்து வருகின்றனர்.

இந்தியாவின் நாட்டுப்புற வளர்ச்சியைப் பற்றிய சர்ச்சை இந்தக் கட்டத்தில் புதியதொரு தன்மையை அடைகின்றது. இப்போது இருக்கின்ற நிலவுடைமை நிலவரம் கூடியவரை திருப்தி

கரமானதுதான் என்று சில விவசாயத் துறை நிபுணர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். நிலத்தை வினியோகம் செய்கின்ற நடைமுறையானது, சாகுபடி கட்டுப்படியாகாதபடி மிதமிஞ்சிநடந்து விட்டதென்று அவர்கள் வாதிக்கின்றனர். 50 முதல் 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பண்ணை களை வைத்துக்கொண்டு பாடுபடுகிறவர்கள்தாம், விவசாயத் திறன்களும், சொந்தமாகப் பெரு முயற்சி செய்வதில் ஆர்வமும் உள்ளவர்களாக இருக்கின்றனர்; சற்றுப் பெரிய நிலக்காரர்கள் தாம் புதிய விவசாய நடைமுறைகளைப் புரிந்து கொண்டு அவற்றைப் பயன்படுத்தி விளைச்சலைத் துரிதமாக அதிகப்படுத்துகின்ற தகுதியுள்ள வர்களாக இருந்து வருகிறார்கள் என்று நிபுணர் கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் அவசியமான தகுதிகள் உள்ள ஒரு தனி விவசாயியைப் பொறுக்கியெடுத்து, நவீன சாகுபடி நடைமுறை களில் அவருக்குப் பயிற்சி தருவதுதான் பிரதான கடமையென்று இந்தக் கருத்தினர் கூறுகின்றனர். அப்படிச் செய்தோமானால், தமது புதிய நடை முறை ஞானத்தை அடுத்தாற்போலுள்ள விவ சாயிகளுடன் அவர் துரிதமாக பகிர்ந்துகொள் வார் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். சமுதாயம் எங்கும், விளை பொருள்கள் உற்பத்தி இன்னும் பெரிய அளவில் கூடுதலாவதற்கான வழியை இந்த நடைமுறையானது திறந்துவிடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

நாட்டுப்புறத்தைச் சீர்திருத்தும் நடைமுறை இவ்வாறு மேலிருந்து கீழ்வரை படிப்படியாக இறங்கி செயல்படுவது உண்மையில் பயனளிக்க வல்லது என்ற கருத்து, மேலெழுந்தவாறு பார்த்தால், உகப்பானதாகவே இருக்கும். ஆனால் கிராம வளர்ச்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை இது முற்றிலும் அலட்சியம் செய்கின்றது என்பதுவே என் அபிப்பிராயம். நான் இவ்விஷயத்தில் சந்தேகப்படுவதற்குக் காரணங்கள் உண்டு. ஒரு தென்னிந்திய கிராமத்தில் இம்மாதிரி "வழி திறந்து விடுகின்ற" ஒரு குடியானவனுடன் உரையாடியபோது இவை எனக்குப் புலப்பட்டன.

கிராம வளர்ச்சி ஊழியர் வற்புறுத்திச் சொன்ன புதிய நடைமுறைகளின் துணையுடன் கூட, ஏக்கர் சராசரியில் அதிகமான விளைச்சல் தமக்குக் கிடைத்துள்ளது என்று இந்த விவசாயி மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். தொடர்ந்து அவருடன் பேசினேன். ஆனால் அவரது வெற்றியானது கிராமத்தில் உள்ள பிறர் விஷயத்தில் அதிகப் பயனுள்ளதாக இருக்க முடியாது என்பது தெளிவாயிற்று.

அவருக்கு எவ்வளவு நிலம் சொந்தம், அவற்றை அவர் எவ்வாறு பயிரிடுகின்றார் என்று கேட்டேன். தமது சாகுபடியில் 150 ஏக்கர் இருப்பதாகவும், அவற்றைச் சாகுபடியாளர் மூலமாக இல்லாமல் வேலையாட்களைக்கொண்டு பயிரிடுவதாகவும் அவர் கூறினார். அந்தக் கிராமத்தில் மொத்தம் வசிக்கும் குடும்பங்கள் 37. எனவே

அவர்களில் எத்தனைபேர் அவரிடம் வேலையாட்க ளாக உழைக்கக்கூடுமென்று தெரிந்து கொள்ள விரும்பினேன். எவ்வளவு பேர் சொந்த நிலம் உள்ளவர்களாக இருக்கக்கூடுமென்றும் நினைத் தேன். அவரது நிலங்களில் அதிக விளைச்சல் கிடைத்தது, எந்த அளவில் கிராமத்திலுள்ள பிற மக்களுக்குப் பயன்பட்டது என்ற ஆச்சரியமும் எனக்கு ஏற்பட்டது. அவர்கள் எவ்வளவு பண்டங்களை அதிகமாக வாங்கினுர்கள், பொரு ளாதார வளர்ச்சிக்கு எந்த அளவு துணை புரிந் தார்கள் என்று அறிய விரும்பினேன். வழக் கத்தைவிட அதிகமான நேரம் உழைத்தால்தான் அவர்களால் தமது விளைச்சலைப் பெருக்க முடியும். அப்படி உழைப்பதற்கு அவர்களுக்கு எந்த அள வில் ஊக்கம் அளிக்கப்பட்டது என்ற பிரச்சினை எழுந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது தலைமை யின்கீழ் கிராம மக்கள், எந்த அளவில் கண்ணியத் துடன் வளர்ச்சி காணக்கூடியவர்கள் என்றும் பொதுப்படையாக எண்ணமிட்டேன். அருகில் நின்றுகொண்டிருந்தவர்கள் அடக்க ஒடுக்கத் துடன், தம்முடைய நிலைமையைப்பற்றி நிம்மதியும் நிச்சயமும் இல்லாத மனப்பான்மையினராகவே காணப்பட்டனர். எனவே இவ்வகையில் குறிப் பிடத்தக்கதாக எதுவும் நிகழ்ந்திருக்க முடியா தென்பது தெரிந்தது.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் அதிகம் விளைவிக்கின்ற பெரிய

நிலவுடைமையாளர் தலைவர்களாக இருந்து. பிறரைப் புது முறைகளுக்கு அறிமுகப்படுத்துகின்ற பணிகளை நிச்சயமாகச் செய்யவேண்டியவர்கள்தாம். ஆனால் அவர்களது தலைமையின் கீழ் புரியக்கூடிய சாதனைகளுக்கு ஒரு வரம்பு உண்டு என்று நான் நம்புகிறேன். உலகமெங்கும் கிராம மக்கள் தமக்கென சொந்தமாக நிலம் வேண்டும் என்கிறார்கள். உரம், திருந்திய விதைகள், கடன் வசதி ஆகியவை பயனுள்ள சாகுபடிக்குத் தேவை என்று கூறுகிறார்கள். நாட்டுப்புறத்தில் ஜனநாயகம் செழித்தோங்குவதற்கு குறுக்கு வழி எதுவுமில்லை. வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கண்டங்களில் ராஜீய முன்னேற்றம் ஒழுங்காக நடைபெற வேண்டுமாயின், நாட்டுப்புறத்தில் ஜனநாயகம் மலர்ச்சி காண வேண்டும்.

## VI

ஒவ்வொரு விவசாயியும் சொந்த நிலம் உள்ளவராக இருப்பது முக்கியமானதென்று நான் நம்புகின்றேன். ஆனால் இப்பிரச்சினையைப்பற்றிய பல அம்சங்களில் இது ஒன்றே ஒன்று. ஜப்பானில் நாட்டுப்புறம் செழித்துக் கொழிப்பதற்கு அத்தியாவசியமான ஊக்கம் இதன்மூலம் கிடைத்தது உண்மையே. அங்கு இந்த ஏற்பாடு விசேஷ சக்தி வாய்ந்ததாகக் காணப்பட்டதற்குக் காரணம், கல்வி, நவீன நடைமுறைகள், உரம், கடன் உதவி, விற்பனை வசதி ஆகியவை எங்கும் சுலபமாகக்

கிடைத்து வந்ததுதான். எனவே, குடியானவர்கள் முயன்று பாடுபட்டால் நிச்சயமாகப் பயன் கிடைப்பதை அது சாத்தியமாக்கியது. மெக்ஸிகோவில் இந்த அதிகப்படிச் சாதன வசதிகள் இருக்கவில்லை. அங்கு 1930-ம் ஆண்டை அடுத்து தீவிரமான நிலச்சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்தன. பல ஆண்டு நிகழ்ந்த ரத்தக்களறிக்குப் பிறகு அவை உருவாயின. இந்தச் சீர்திருத்தங்களின் காரணமாக விளைச்சலின் அளவு குறைந்தது. விவசாயிகளின் ஆசாபங்கம் கூடுதலாயிற்று.

சென்ற சில ஆண்டுகளில் உரம், திருந்திய விதை, கால்நடைகளின் தர உயர்வு, பயிர்களுக்கான நோய்களின் கட்டுப்பாடு போன்ற நடைமுறைகளைக் கையாண்டு, கவர்ச்சியான அபிவிருத்தியை இந்தியா அடைந்திருக்கிறது. இந்தியாவில் கிராம அபிவிருத்திச் சாதனங்களைக் கண்ணுற்று, விவசாய விஞ்ஞானிகளுடன் பேசும்போதெல்லாம், இந்தியாவில் ஏற்கெனவே விவசாயத் துறை ஆராய்ச்சி நல்லபடி உருவாகி, சக்திவாய்ந்த அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது.

ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்ற சேதிகள் கிராமப்பணி ஊழியர் மூலம் குடியானவனுக்கு பெருமளவில் கிடைக்கச் செய்யலாம். இத் தகவல்களை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு அச்சடித்து வழங்கலாம். பிலிம்கள் மூலம் அறிந்துகொள்ளச் செய்யலாம். ரேடியோ, பொம்மலாட்ட வகைகள் முதலியவையும் இதற்காகப் பயன்பட முடியும்.

அரசாங்கத் துறையிலும் தனியார்த் துறையிலும் இருந்து வரும் உர உற்பத்தி ஸ்தாபனங்களும், திருந்திய விதையை விற்கின்ற ஸ்தாபனங்களும், புதிய தகவல்கள் கிராமவாசிகளுக்குக் கிடைக்கக்கூடியபடி திட்டமிட்டு உழைக்கலாம். அவர்கள் கண்டறியக்கூடிய வகையில் செய்து காட்டலாம். திருந்திய நடைமுறைகளை விவசாயிகளுக்கு அறிவிப்பதற்கு அமெரிக்காவில் இவை மிகமிகச் சிறந்த சாதனங்களாகப் பயன்பட்டு வந்திருக்கின்றன.

நவீன உற்பத்தி முறைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய கடன் வசதிகள் இந்திய விவசாயத்தில் கிடைத்தாக வேண்டும். தான் விற்கின்ற பொருள்களுக்கு நியாயவிலை கிடைப்பதற்காக, இப்போது இருப்பவைகளைவிடச் சிறந்த விற்பனை ஏற்பாடுகள் அவனுக்குத் தேவைப்படுகின்றன. ஜப்பானில்போல விற்பனைக் கூட்டுறவுகளை ஏற்படுத்தலாமெனத் தோன்றுகிறது. கிராமப் பகுதிகளிலேயே, விவசாயிகள் சுலபமாக வந்து போகக்கூடிய இடங்களில், இந்த விற்பனைக் கேந்திரங்கள் அமையலாம். இறுதியாக அத்தியாவசியமான விளைபொருட்களுக்கு உத்தரவாதமான விலையை, பிரத்தியட்ச உணர்வுடன் உறுதி செய்ய வேண்டும். இது கவனித்தாகவேண்டிய பிரச்சினை. அந்த விலையானது இரண்டு அல்லது மூன்று வருஷகாலம் நிச்சயமாக அமலில் இருந்து வருமென்ற உறுதி ஏற்பட வேண்டும். அப்போதுதான் நியாயமான வருமானம்கிடைக்குமென்றதிட

நம்பிக்கையுடன் விவசாயிகள் உற்பத்திப்பெருக்கில் திட்டமிட்டு உழைப்பது சாத்தியமாகும்.

இந்திய நகரங்களில் இருக்கும் உழைப்பாளரது செலவில் பாதி உணவு வகைகளுக்காகவே போய்விடுகிறது. ஆனால் உணவுத் தானியங்களுக்கு மார்க்கெட்டில் இருந்துவரும் விற்பனை விலையில் விவசாயிக்குக் கிடைக்கின்ற பங்கு ஒரு நியாயமற்ற வீதாச்சாரந்தான். ஏராளமான நடுவாந்திரப் பேர்வழிகளும் ஹேஷ்யபேரங்களில் ஈடுபடுவோருமாகச் சேர்ந்து, வளர்ச்சி கண்டுவரும் பெரும்பாலான நாடுகளைப் போலவே இந்தியாவிலும், இந்த விலை வித்தியாசத்தில் பெரும் பங்கை விழுங்கி விடுகின்றனர். நல்ல முறையில் ஏற்பாடாகி, போதிய பணவசதியுடன் இயங்குகின்ற விற்பனைக் கூட்டுறவுகள் மூலம், இந்த நிலைமையைப் படிப்படியாக மாற்றிவிட முடியும். குடியானவர்களுடைய வருமானத்தைக் கூடுதலாக்கி, பண்டங்களை வாங்கி உபயோகிப்போர் தரும் சில்லறை விலையையும் குறைத்து, இந்தச் சாதனையைப் புரிய முடியும் என்பது அனுபவபூர்வமாகத் தெரிந்துள்ள உண்மை.

கிராம மக்கள் தமது வழக்கமான வருவாயுடன் கூட, உபதொழில்களில் ஈடுபட்டு அதிகம் சம்பாதிக்கக்கூடியபடி, ஆங்காங்கு தொழில்களை நிறுவலாம். ஜப்பான் அடைந்துள்ள வெற்றி இந்தியாவுக்கு இவ்வகையில் பொருள்படைத்தது. உபரியாகவுள்ள விவசாயத் தொழிலாளர், இந்தத் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புப் பெறலாம்.

விளைபொருட்களை இந்தத் தொழில்கள் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள முடியும். சிறிய தொழில் களைக் கிராமப் பகுதிகளில் தோற்றுவிக்கக்கூடிய அவசியத்தை காந்திஜி முன்கூட்டியே கண்டறிந் தவர். சுதேசியின் பிரதானச் சின்னமாக கதர் அமைந்துள்ளது. ஆனால் கிராமப்பகுதிகளின் தேவைகளுக்கு அந்தத் தொழில் ஒன்றே போது மானது என்று கருத இயலாது, நாட்டுப்புறங்கள். தன்னிறைவு அடிப்படையில் ஏற்றங்காண வேண்டுமென்று அவர் கூறியிருக்கிறார்.

நவீனத் தொழில் திறன்களையும் சாதனங் களையும் உபயோகித்து, ஒரிஸ்ஸாவில் உற்சாகத் துடன் சிறிய அளவில் தொழில்களை பஞ்சா யத்துக்கள் நடத்துகின்றன என்ற செய்தியை அண்மையில் நான் படித்தேன். இந்தத் தொழில் கள் அரசாங்கத்திடமிருந்து பண உதவி பெறு கின்றவை. ஆனால் ஸ்தல பஞ்சாயத்துக்கள் தாம் அவற்றை நடத்துகின்றன. இந்தக் குறிப்பிட்ட வகைத் தொழில்களின் அதிகாரபூர்வமான நோக் கங்கள் ஆறு. ஜப்பானில் கிராமத் தொழில்களின் அடிப்படைகளும் ஏறக்குறைய இவைதாம். எனவே, இவற்றை இங்கு எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும். ஜப்பானில் இத்தகைய தொழில்கள் பெருமளவில் உற்பத்திப் பெருக் கிற்குத் துணைபுரிந்திருக்கின்றன. இந்த ஆறு நோக்கங்கள் பின்வருமாறு :—

(1) உள்ளூர் மக்களின் தொழில் திறனை வளர்ப்பது. புதிய திறன்களைப் புகுத்துவது.

(2) ஒரே தொழிலில் எல்லோரும் ஈடுபடாமல், பலவகைப்பட்ட தொழில்களைக் கையாளக்கூடிய வாறு தொழில்கள் நடைபெறுவதற்குத் துணை புரிவது. இதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். போதிய வேலையில்லாதாருக்கு வேலை கிடைக்கும்.

(3) தமது ஜாகை வசதியைத் திருத்திக் கொள்வதற்கு வேண்டிய கட்டிடச் சாதனங்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்வது.

(4) பஞ்சாயத்து வட்டாரத்தில் உபயோகிக்கின்ற விவசாய இயந்திரங்களையும் பிற சாதனங்களையும் பழுதுபார்ப்பதற்கும், நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும் வேண்டிய சேவா வசதிகள் இருக்கச் செய்வது.

(5) விளைபொருட்களை மக்களின் உபயோகத்திற்குப் பக்குவப்படுத்தினால்தான் அதிகமான ரொக்கம் நிச்சயமாகக் கிடைக்கும். எனவே பக்குவப்படுத்தும் தொழில்களை நிறுவுவது.

(6) மக்களின் வரிச்சுமையை அதிகப்படுத்தாமல், பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரவர அதிகமான வருவாய் கிடைப்பதற்கான சாதனங்களாக இத் தொழில்களைப் பயன்படுத்துவது.

ஒரிஸ்ஸாவில் இம்மாதிரி நடந்துவரும் சிறிய தொழில்களில் ஓடுகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், மரத்தை அறுக்கும் மில்கள், குளிர்ப்பதன கிடங்கு வசதி முதலியவை உள்ளன. இவை ஒவ்வொன்றும் நேரடியாக கிராம மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்

டிருக்கின்றவை, இப்போது இருந்து வருகின்ற தொழில் திறன்களைக் கருத்திற்கொண்டு அமைந் திருப்பவை. எனவே சுதேசி லட்சியத்தைப்பற்றி காந்திஜி என்ன எண்ணங்கள் கொண்டிருந் தாரோ அவை நவீன வகைகளில் இங்கு செயல் படுவதைக் காண்கிறோம்.

இந்தத் தொழில்கள் விஷயத்தில் ஒரிஸ்ஸா கிராமப் பஞ்சாயத்துக்கள் காண்பிக்கும் உற்சாகம் ஜப்பானில் இருந்து வருவதைப் போன்றது. இந்தியாவெங்கும் நாட்டுப்புறத்தின் அபிவிருத் திக்கு இத்தகைய பஞ்சாயத்துத் தொழில்கள் பெரிய அளவில் துணைபுரியக்கூடியவை.

அமெரிக்காவில் விற்பனை வசதிகள் பெருகுவ தற்குக் காரணமாக இருந்த நடைமுறைகளை லத்தீன் அமெரிக்காவில் கையாண்டு பார்த்தார் கள். கிராமப்பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலும் தயாராகின்ற ஆலைப்பண்டங்களைக் கிராமப் பிரதே சங்களில் விற்பனை செய்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் இருக்கின்றனவென்பது இவற் றின் மூலம் தெளிவாயிற்று. சிகாகோவைச் சேர்ந்த சியர்ஸ் ரோபக் பல நாடுகளுக்குச் சென்று, ஸ்தல தேவைகளை ஆராய்ந்தறிந்து, அங்கு கிடைக்கக்கூடிய தொழில்களைப்பற்றிய தகவல்களைச் சேகரித்து, அங்கு உற்பத்தி பெருகச் செய்வதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் மதிப்பிட்டு, பெரிய பண்டகசாலைகளை ஆங்காங்கு நிறுவினர். அந்தந்தப் பகுதியில் தயாராகின்ற பொருட்களைத் திரட்டி அங்கேயே விற்பனை செய்ய

முன்வந்தார். பெரிய அளவில் பண்டங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய தீவிர தொழில்துறைப் பயிற்சி அந்தப் பிரதேசத்துத் தொழிலாளருக்கு அளிக்கப்பட்டது. அவசியமான பிற வசதிகளும் விசையும் அவர்களுக்குக் கிடைக்க அவர் வழி செய்தார். புதிய சாதனங்களை வாங்குவதற்குக் கடனுதவி அளித்தார்.

இந்த முயற்சிகளின் பயனாக ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கணக்கில் மக்கள் பண்டங்களைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர். பண்டங்களின் உற்பத்தி துரிதமாக அபிவிருத்தியடைந்தது. கண்ணுக்குக் கவர்ச்சியாகவும் விலை மிதமாகவும் உள்ள அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருட்கள் இப்போது கிராமங்களில் வான்கள் மூலம் தெருத் தெருவாக விற்கப்படுகின்றன. ஏன் இதேமாதிரி "உற்பத்தியாளர்-மார்க்கெட்-வாங்கி உபயோகிப்போர்" என்ற சங்கிலித் தொடர்-முறை இந்தியாவின் நாட்டுப் புறங்களில் ஏற்படலாகாது? கூட்டுறவுத் துறையிலும் தனியார்த் துறையிலும் இந்தியாவெங்கும் இதற்கு வழி செய்யமுடியும்.

விசேஷ சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையை நான் இப்போது எடுத்துக் கொள்ளுகிறேன். போதிய அளவில் ஸ்தல தொழில்கள் ஆங்காங்கு ஏற்பட்டு. கிராமத்திலுள்ள உழைப்பாளருக்கு அதிக வேலைவாய்ப்பு அளித்தாக வேண்டும். அதற்கு வழி செய்யாத வரை, பெரும்பாலான பகுதிகளில் விவசாயத்தை இயந்திர மயமாக்குவது

கட்டுபடியாகாமல் போய்விடும். இயந்திரங்களை உபயோகிப்பதன் பிரதான நோக்கம் உடலுழைப்பை மிச்சப்படுத்துவதுதான். "நல்ல ஒரு ஜோடி காளை மாட்டுக்கு அவ்வப்போது தனி உறுப்புகள் எதுவும் தேவைப்படுவதில்லை. அதற்குப் பெட்ரோல் வேண்டியதில்லை. அது உழைக்காமல் நின்று விடுவது வெகு அபூர்வம். தவிர ஏராளமான எருவை அது தருகின்றது" என்பதை ஒரு விவசாயி எனக்கு நினைவூட்டினர்.

இந்த விஷயம் சர்ச்சைக்குரியது. ஆனால் இந்த அத்தியாயத்தில் விவரித்துள்ள கிராமத் தொழில் வளர்ச்சியின் மையமான கருத்தைப்பற்றி வேறுபாடு இருக்க முடியாது. மண் வீடுகள் நிறைந்த நமது கிராமங்களில், கிராமங்களைப் போலவே இருந்து வருகின்ற நகரங்களில், என்ன நிகழ்கின்றன என்பதைப் பொருளாதார நிபுணர்களும், வளர்ச்சியில் ஈடுபடுகின்ற தொழில் துறை நிபுணர்களும் ஆராயாமல் தாண்டிச் சென்று விடுகின்றனர். ஆனால் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் பொருளாதார, ராஜீய வரலாறு எவ்வாறு உருப்பெறப் போகிறது என்பதை இவைதாம் பெரிதும் நிர்ணயிக்கப் போகின்றன.

# III

## சமூக நீதியுடன் கூடிய தொழில் அபிவிருத்தி

திட்டமிட்டு தொழில் வளர்ச்சிக்கு உழைக்குங் காலையில், வளர்ச்சி காண்கின்ற நாடுகள், கூடவே இருவகைப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கின்றன. அதன் இரு அம்சங்களுமே திகைப்பூட்டுபவை.

உடனடியாகக் கிடைக்கக்கூடிய மூலதனம், கச்சாப் பொருட்கள், உற்பத்தித் திறன்கள் ஆகியவற்றை அதிகபட்சத் திறமையுடன் பயன்படுத்திக் கொள்வதற்கு எவ்வாறு ஊக்கம் அளிப்பது என்பது பிரச்சினையின் ஒரு பகுதி. இதன் தேவைகள் என்ன? நிர்ணயித்தாக வேண்டிய வரிசைக் கிரமங்கள் யாவை? சிமிட்டியைவிட உருக்கு அதிக முக்கியமானதா? ரோடுகளைவிட ரயில் பாதைகள் அதிக முக்கியமானவையா? டிரக்குகளை விட வாகன்கள் அதிக முக்கியமானவையா? தொழில் அபிவிருத்தியானது எந்த வேகத்தில்

நடைபெற வேண்டும்? பொருளாதாரத்தின் பிற பகுதிகளுடன்கூட அதை சமநிலைப்படுத்தி உழைப்பது எப்படி?

மக்களையும் ஸ்தாபனங்களையும் தொழில் வளர்ச்சியானது எவ்வாறு பாதிக்கின்றது என்பது, திடுக்கிடவைக்கும் இரண்டாவது அம்சம். கூடிய வரை வேகமாகத் தொழில்களை ஊக்குவிக்க வேண்டியதுதான். ஆனால் அகற்றுகின்ற தீமை களைவிட அதிகமான தீமைகளை அவை தோற்று விக்காமல் இருக்கும்படி ஒழுங்கு செய்யவேண்டும். "விஞ்ஞான உண்மைகளும், கண்டுபிடிப்புக்களும் பேராசையை வளர்க்கின்ற சாதனங்களாகப் பயன் படும் நிலைமை முடிவுற வேண்டும். பிரதான மதிப்புத் தர வேண்டியது மனிதனுக்குத்தான்" என்று காந்திஜி கூறியிருக்கிறார்.

19-வது நூற்றாண்டின் நடுப்பகுதியில், தொழில்கள் தோன்றி வளர்ந்த ஆரம்பகாலத்தில், நடைமுறையானது கஷ்டமும் கொடுமையும் நிறைந்ததாகவே காணப்பட்டது. அதைப்பார்த்த கார்ல் மார்க்ஸ், பொருளாதார வளர்ச்சிக்கும் புரட்சிகரமான மாறுதலுக்கும் உதவக்கூடிய கோட்பாட்டைத் தயாரித்தார். அது கோடிக் கணக்கான மக்களை ஈர்த்து அவர்களுடைய கருத் துக்களை உருவாக்கும் விஷயத்தில் தீவிர செல் வாக்குள்ளதாக ஆயிற்று.

தன்னைச் சுற்றியிருந்த வாழ்க்கையின் நில வரத்தைத் திறமையுடன் கண்டறிந்த அனுபவத் தின் அடிப்படையில், தமது சிந்தனையை மார்க்ஸ்

உருவாக்கினர். ஆகையால்தான் அது அவ்வளவு சக்திவாய்ந்ததாக விளங்கலாயிற்று. காலம், இடம், மனச்சார்பு ஆகியவை அனுமதித்த அளவு மட்டுமே அவரால் உண்மை நிலைகளைக் கண்டு கொள்ள முடிந்தது. எனவே, அவரது சிந்தனை ஒரு வரம்புக்குட்பட்டதாகத்தான் அமைந்தது.

தொழில் புரட்சி கரடுமுரடாக ஏற்றம் கண்ட காலத்தில், அன்றாட வாழ்க்கையின் கடுமையான பிரத்தியட்ச நிலைகளை மார்க்ஸ் கண்டார். லண்டன் கழிசேரிகளில் மக்கள் படுமோசமான குடில்களில் நெருக்கமாக வசிப்பதைப் பார்த்தார். பொருளாதாரம் இடையறாது வளர்ச்சி கண்டு வந்தது. அதற்கு வேண்டிய ஆள்பலத் தேவையானது, உழைப்பாளரின் துயரங்களைப் பொருட்படுத்தாமல் வளர்ந்து வந்த காலம் அது. அந்நிலையில் தொழிலாளர் உழைத்து உழைத்து களைத்துப் போயினர். தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்கள் மிகச் சக்திவாய்ந்தவர்களாக விளங்கினர். அரசாங்கம் அவர்களுடைய ஆதிக்கத்தில்தான் இருந்து வந்தது. எனவே ஆலை முதலாளிகளது சக்தியின் முன்னர், தனி நபர்கள் என்ற முறையில் அவர்கள் ஆதரவற்று இருந்து வந்த நிலைமையை கார்ல் மார்க்ஸ் கண்டார்.

தொழிற் புரட்சியின் ஆரம்பத்தில் மலிந்து காணப்பட்ட சமுதாயச் சீர்கேடுகளையும், மனிதனுக்கு மனிதன் இழைத்து வந்த அநீதியையும் மார்க்ஸ் மிகைப்படுத்திக் கூறவில்லை. ஒரேயொரு அம்சத்தை மட்டுமே அவர் தீவிரமாகக் குறைத்து

மதிப்பிட்டார். இத்தகைய மோசமான நிலைமைகளை மாற்றி, பொறுப்புள்ள சமுதாயக் கட்டுக்கோப்பு ஒன்றை நிறுவி, துரிதமாக வளர்ச்சி காணக்கூடியதாக அதை உருவாக்குவதற்கு வேண்டிய தகுதியும், தவறுகளைத் திருத்திக்கொள்கின்ற சுபாவமும், ஜனநாயக சமுதாயங்களுக்கு உண்டு என்பதைத்தான் அவர் குறைத்து மதிப்பிட்டார்.

ஒருபுறம் பொருளாதார நீதியும் சமூக நீதியும், மற்றொருபுறம் துரிதமான வளர்ச்சி இந்த இரண்டு அம்சங்களுக்குமிடையே ஒரு சமநிலையைத் தோற்றுவித்து நிலைநிறுத்துவதற்கு, எங்கள் நாட்டில் குடியரசு தோன்றிய ஆரம்ப காலத்திலிருந்தே நாங்கள் பாடுபட்டு வந்திருக்கிறோம். இந்த முயற்சியினூடே ஒரு போராட்டம் தொடர்ந்து நிகழ்வது தவிர்க்க முடியாததாயிற்று. செல்வத்தை ஈட்டுவதே தனிப்பெரும் லட்சியம் என்று ஒரு சாரார் கருதினர். பொருளாதார வளர்ச்சியை தனிநபரின் அபிவிருத்திக்கான சாதனமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மற்றொரு சாரார் கருதினர். அதன்மூலம் தனிநபர் போதிய வாய்ப்பும், கண்ணியமும், நீதியும் நிறைந்த ஒரு சூழ்நிலையில் பணியாற்றக்கூடிய சுதந்திரத்துடன் விளங்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். இந்த இரண்டு கருத்தினருக்குமிடையேதான் போராட்டம் நிகழ்ந்து வந்தது.

“ நன்றி கெட்ட பெரும் பணக்காரர்கள் ”

என்று செல்வர்களைச் சுட்டிக்காட்டி வருணித்து, அவர்களுக்கு எதிரிடையாக மக்களின் நலன்களை நிலைநிறுத்துவதற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பயனுள்ள வகையில் முற்பட்டார். அவரைப் போலவே உழைத்த அமெரிக்க ஜனாதிபதிகள் தாம் விசேஷமாகக் கௌரவிக்கப்பட்டனர். இந்த ஜாபிதாவில் ஜெபர்ஸன், ஜாக்ஸன், லிங்கன், கிளீவ்லண்ட், தியடோர் ரூஸ்வெல்ட், வில்ஸன், பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், ட்ரூமன், ஜான் எஃப் கென்னடி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

"சுரண்டுகிறவர்களுக்கும் பாமர மக்களுக்கு மிடையே" நிர்த்தாட்சண்யமான வர்க்கப் போராட்டம் நடந்தே தீரும் என்ற அடிப்படையான கருத்துடையவர் மார்க்ஸ். அது தவறான மதிப்பீடு என்பதை அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், ஸ்வீடன், ஜெர்மனி, பொருளாதார வகையில் ஏற்றம் கண்டுள்ள பிற ஜனநாயக நாடுகள் ஆகியவை நிரூபித்துள்ளன. தாம் படைக்கின்ற யந்திரங்களை அடக்கியாள்கின்ற எஜமானர்களாக மக்களால் செயலாற்ற முடியும் என்பது அனுபவத்தில் தெளிவான விஷயம். சுதந்திரமாக உழைத்து, வாழ்க்கையை வளப்படுத்தும் பொருட்களையும் அடைந்து, சுபிட்சத்தைச் சுவைக்க முடியும் என்பது ருசுவாயிற்று.

இத்தகைய ஒரு சமநிலையைத் தோற்றுவிப்பது அவசியம் என்பதை ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் வளர்ச்சி கண்டு வருகின்ற நாடுகளில் பரவலாக ஒப்புக்

கொண்டுள்ளனர். சமூகநீதி, தொழில் வளர்ச்சி ஆகியவற்றுடன், சாதனங்களையும் வழிமுறையையும் இணைக்கின்ற தத்துவ அடிப்படைகள் விஷயத்தில்தான் சிரமங்கள் எழுகின்றன.

உடனடியாகக் கவனித்தாக வேண்டிய பிரச்சினைக்கு முற்றிலும் சம்பந்தமில்லாத வழியில், பயனற்ற சர்ச்சைகள் நிகழ்கின்றன. பொருளாதார, ராஜீய கோஷங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. எனது காரியகாரண விளக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்கு சற்று விரிவாகவே இங்கு நான் முயன்று பார்த்திருப்பது இதன் காரணமாகத்தான்.

துரிதமான தொழில் வளர்ச்சி அத்தியாவசியமானதுதான். ஆனால் பொதுநலனுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் அது உருப்பெறுமாறு அனுமதிக்க இயலாது என்ற கோட்பாட்டை ஒப்புக்கொண்டு விட்டோம். இந்த தார்மிகக் கட்டுக்கோப்புக்குள் தொழில் துறை உற்பத்தியை விரிவாக்கி, துரிதமாகப் பயனளிக்கச் செய்வதற்கான வழிமுறைகள் யாவை என்பதை, நீக்குப்போக்குடன், பிரத்தியட்ச உணர்வுடன்கூட இப்போது நாம் கவனித்தாகவேண்டும்.

வளர்ச்சி என்பதன் பொருள் மக்களின் நிலைமை திருந்த வேண்டுமென்பதுதான். புள்ளி விவரங்களைச் சிருஷ்டிப்பது அதன் நோக்கமல்ல. தொழில்கள் எவற்றையெல்லாம் தரக்கூடுமோ, அவை அனைத்துமே நமக்குத் தேவை. சமுதாய நிர்மாணம் என்பது விரிவான பொருள் படைத்தது.

சுதந்திரமும், நியாய உணர்வும் கூடிய ஒரு சமுதாயத்தை வெற்றிகரமாக எவ்வாறு அடைவது என்பதைக் கண்டறிவதுதான் நமது பணி.

மிகத் தெளிவான ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு பரிசீலிக்கத் தொடங்குவோம். வளர்ச்சி காண்கின்ற எந்தத் தேசத்திலும், பிரதான மத்திய பீடத்திலிருந்துகொண்டு, மிக முக்கியமான பொறுப்புக்களை அரசாங்கமானது வகித்தாக வேண்டும். அரசாங்கமே திட்டமிடுவது, முதலீடு செய்வது, மேல்பார்ப்பது ஆகியவற்றின் மூலமாக மட்டுமே வளர்ச்சி காண்பதற்கு வேண்டிய பல அடிப்படைச் சாதனங்கள் கிடைக்க முடியும். சரியான திசையில் வளர்ச்சி காண்பதைச் சாத்திய மாக்குவதும் அவைதாம். ரோடுகள், ரயில் போக்குவரத்து, பள்ளிக்கூடங்கள், விசை, செய்திப் போக்குவரத்துத் தொடர்புகள் முதலியவை பெரு மளவில் அரசாங்கத்தின் பொறுப்பாகவே மதிக்கப் பெறும். இவற்றைத்தான் பொருளாதார நிபுணர் கள் 'உள்ளுறைக் கட்டுக்கோப்பு' என்று கூறுவர்.

இத்தகைய மத்தியப் பணிகளை அமெரிக்கா வில் தனியார்த் துறை மேற்கொண்டு நடத்தி வைத்திருக்கிறது. ஆனால் அங்கேயும் இப்போது பொறுப்பில் பெரும் பகுதியை அரசாங்கமே வகித் தாக வேண்டிய நிர்ப்பந்த நிலைமை இருந்து வந்திருக்கிறது.

18-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெ ரிக்கக் குடியரசு தோன்றிய பிறகு, வர்த்தகக் கப்பல்களைக் கட்டி, சர்வீசுகளை நடத்துவதற்கு

மத்திய அரசாங்கம் தனியார்த் துறைக்கு மானிய உதவியை அளித்தது. அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்கும், வேகமாக வளர்ச்சி கண்டுவந்த மேலைப் பகுதிக்குமிடையே, பயனுள்ள போக்கு வரத்துத் தொடர்பாக அமைந்தது ஈரி கால்வாய். 1830-க்குப் பிறகு அது நிர்மாணிக்கப்பட்டது. பெரும்பாலும் இங்கிலாந்திலிருந்து கடனாகக் கிடைத்த பொது நிதியின் உதவியுடன் அது அமைக்கப்பட்டது.

தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருந்து அவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்த ரயில் கம்பெனிகளுக்கு, 30 ஆண்டுகளுக்குப் பின்னர், மிகப் பெரிய அளவில் நிலங்களை மானியமாக பெடரல் சர்க்கார் அளித்தனர். அதற்கு முன் எங்கும் கண்டிராத பெரிய அளவில் ரயில் பாதைகளை அமெரிக்கக் கண்டமெங்கும் போட்டாக வேண்டிய பெரும் பணிக்கான ரொக்க வசதி கிடைப்பதற்காகவே இந்த மானியங்கள் தரப் பட்டன.

இரண்டாவது உலக யுத்தம் தொடங்கியவுடன், அவசரகால ஏற்பாடாக, பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட்டு நடத்தி வைக்கும் பொறுப்பில் பெரும் பகுதியை யு. எஸ். அரசாங்கம் தானே மேற்கொண்டது. சமாதான காலத்திலும் ரயில், கப்பல், விமானக் கம்பெனிகளுக்கு, ஜாகை வசதி ஸ்தாபனங்களுக்கு, எல்லா அந்தஸ்துக் களிலும் கல்விக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்கு, விளை பொருட்களின் உற்பத்தியில் பெரும் பகுதிக்கு,

மின்சார விசை உற்பத்தி நிறுவனங்களில் பல வற்றிற்கு, இன்னும் பல பெரு முயற்சிகளுக்கு அரசாங்கம் தொடர்ந்து மானியம் அளித்து வருகிறது.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில், சுதந்திரம் அடைந்துள்ள புது நாடுகள், நீடித்த அவசர கால நிலைமையின் துவக்கத்தில் இருந்து வருவதாகவே தோன்று கிறது. வறுமையின் நிர்ப்பந்தமும், புதிய தொழில் துறைச் சாதனங்கள் வாக்களிக்கின்ற நல்வாழ்வி லுள்ள ஆர்வமும் மக்களிடையே விழிப்பைத் தோற்றுவித்துள்ளன. ஏற்றங் கண்டுள்ள தேசங் களின் நிலைமையை தாமும் அவசர அவசரமாக எட்டிப் பிடிக்க வேண்டுமென்று அவர்கள் துடிக் கின்றனர். இந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலையில், அரசாங்கம் திட்டமிடுவதும், விடுமுதல் செய்வதும், நிர்வாகப் பெறுப்பை மேற்கொள்வதும் அமெரிக் காவைவிட இந்நாடுகளில் மிகப் பெரிய அளவில் இருந்தாக வேண்டி நேரிடுவது தவிர்க்க முடியா தது. மக்கள் அவசர உணர்வு இல்லாமல் நிதான மாக உழைப்பதற்கு இசைவாக இருந்த சூழ் நிலையில்தான் அமெரிக்காவில் வளர்ச்சிக்கான அஸ்திவாரங்கள் அமைந்தன.

ஆனால் அரசாங்கம் திறம்பட வகிக்கக்கூடிய தொழில்துறைப் பளுவானது ஒரு வரம்புக்கு உட்பட்டதாகத்தான் இருக்க முடியும். நடை முறையின் தேவைகள், இவ்வாறு வரம்பு கட்டியாக வேண்டிய நிலைமையை, வளர்ச்சி காண்கின்ற

நாடுகள் விஷயத்திலும் தோற்றுவிக்கின்றன என்பதை சென்ற 15 வருஷ அனுபவம் ருசுப்பித்துள்ளது.

உதாரணமாக, ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் வளர்ச்சி கண்டு வரும் நாடுகளில், அனுபவமுள்ள நிர்வாகஸ்தர்கள் போதிய அளவு கிடைக்கவில்லை. கல்வி, மின்சார விசை, போக்குவரத்து போன்ற அடிப்படைத் தேவைகளைக் கவனித்துக்கொள்வதற்கு வேண்டிய அளவுகூட அவர்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. வாழ்க்கைவசதிகள் கணிசமாக இல்லாத பெரும்பாலான மக்களிடமிருந்து வரிகள் மூலமும் கடனாகவும் அரசாங்கம் எழுப்பக்கூடிய மூலதனம் மிகமிகக் குறைவாகத்தான் இருக்க முடியும். செல்வந்தர்களாகிய சிறுபான்மையோரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. பல நாடுகளில் பழைய காலனி ஆதிக்கக் கல்விச் சம்பிரதாயங்கள் இன்னும் கொஞ்சநஞ்சம் இருந்து வருகின்றன. செழிப்புடன் வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புக்களை மக்களுக்குச் சிருஷ்டித்துக் கொடுப்பதைவிட, அவர்களது போக்கை ஒழுங்கு படுத்துவதே விசேஷ முக்கியத்துவம் உள்ளது என்று பழங்காலத்து சிவில் சர்விஸ் ஊழியர்கள் கருதுகின்றனர்.

அரசாங்கத் துறைத் தொழில்களை நேரடியாக நிர்வகிக்கும் விஷயத்தில், ஜனநாயகப் பாங்குள்ள அரசாங்கங்கள் அதிகப்படியாக மற்றொரு முட்டுக்கட்டையை சமாளிக்க வேண்டி நேரிடுகிறது. ஒவ்வொரு தொழிலின் வளர்ச்சியும், அன்றாடம்

சிறிதும் பெரிதுமாகச் செய்யப்படும் ஆயிரக் கணக்கான முடிவுகளைப் பொறுத்தது. செய்து பார்த்து, போகிற போக்கில் பிழைகளைத் திருத்திக் கொள்கின்ற அடிப்படையில்தான் அவற்றில் பல செயலாற்ற வேண்டியிருக்கிறது. தவறுகள் நிகழ்ந்தால் பரவாயில்லையென்ற எண்ணத்துடன் உழைக்கத் தயாராயில்லாத தொழில் நிர்வாகி, நிச்சயமாக, திறமையுள்ளதும், விரிவுகாணக் கூடியதுமான ஓர் அமைப்பைச் சிருஷ்டிக்க முடியாதவனாகத்தான் காணப்படுவான்.

இங்குதான் ஒரு முரண்பாடு தலைதூக்குகின்றது. அடக்கியாள்கின்ற கடமையே எடுப்பாக உள்ள போலீஸ்-ஆதிக்க அரசாங்கத்தில்,—எதிர்ப்பாளர் தாக்குவரே என்ற பிரச்சினையே இல்லை. பிழைகள் நிகழ்ந்தால் பரவாயில்லையென்ற துணிவுடன் அவசியமான பொறுப்புக்களை அங்கு அரசாங்கம் மேற்கொள்வது சுலபமாக இருக்கின்றது. ஜனநாயக சமுதாயத்தில், தனியார்த் துறை நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கும் ராஜீய வகையில் நிர்பந்தங்கள் கிடையாது. ஆட்சேபிக்கக்கூடிய எதிர்ப்பாளரைப் பற்றிய கவலையில்லாமல், தமது புரட்சிகளை அவர்களால் தொடர்ந்து நடத்த முடிகின்றது. தவறுகள் நிகழத்தான் செய்யும். வேறு இடங்களில் லாபகரமாக நடைபெறுகின்ற தொழில்களைச் சுட்டிக் காட்டி அவற்றைச் சரிக்கட்டி விடுகிறார்கள்.

ஒரு ஜனநாயக சமுதாயத்தில் அரசாங்கத் துறைத் தொழிற்சாலைகளில் தவறுகள் இழைக்கப்

படும்போது, அரசியல் எதிர்க் கட்சியாளர், பதவியிலுள்ளவர்களை கடுமையாகச் சாடுவர் என்றுதான் எதிர்பார்க்க வேண்டும். திறமையின்மை, ஊழல், இவற்றைவிட இன்னும் மோசமான புகார்கள் அவர்கள்மீது அள்ளி வீசப்படும். மேற்கொண்டு வளர்ச்சி காண்பதற்கு வேண்டிய நிர்வாக நடைமுறைகளுக்கு இந்தத் தவறுகள் குழிபறிக்கக் கூடியவை. உண்மையில் நிகழ்கின்ற தவறுகளுக்கும், அப்படி உண்மையில் நிகழாத தவறுகளுக்குங் கூட, ராஜீயவாதிகள் தமக்குச் சாட்டையடி கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக வேண்டி, அரசாங்க ஊழியர்கள் நீக்குப்போக்கில்லாத விறைப்புக் காட்டுவது உண்டு. அதிகார வர்க்கம் ஏற்கெனவே மந்தகதியில் சென்றுதான் முடிவு காண்கின்றது. குறைகாண்கின்ற நிலவரம் இந்த வேகத்தை மேலும் தணித்து விடுகிறது. சுறுசுறுப்புடன் பரீட்சை செய்து பார்க்கும் நடைமுறைகள், தொழில்துறை வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை. அவற்றைக் கையாள்வதற்கான உற்சாகம் மேலோங்காதபடி அது அடக்கி விடுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் ஃபோர்டு மோட்டார் கம்பெனியார் எட்செல் என்ற ஒரு புது காரை உருவாக்கும் முயற்சியில் 30 கோடி டாலரை விடுமுதல் செய்தனர். ஆனல் அந்தக் காருக்கு கிராக்கி மிகமிகக் குறைவாகவே காணப்பட்டது. எட்செல் கார் தயாரிப்பில் பெருநஷ்டம் விளைந்தது. ஆனல் லாபகரமான பிற துறைகளில் செய்திருந்த விடுமுதல் காரணமாக கம்பெனி

அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடிந்தது. அது தான் அந்தக் கதையின் முடிவு.

'டெமொக்ராடிக்' அல்லது 'ரிபப்ளிக்கன்' அரசாங்கத்தின்கீழ் ஒரு சர்க்கார்த் துறை ஸ்தாபனம் அதிர்ஷ்டக்குறைவான காரை தயாரிக்க முற்பட்டிருந்தால் அப்போது எவ்வளவு பிரமாதமான ராஜீயக் கூச்சல் கிளம்பியிருக்கும் என்பதை நினைக்கவே பயமாயிருக்கிறது. அப்பொழுது பதவியிலிருந்த கட்சி, அடுத்த தேர்தலில் தோல்வியுற்றிருக்கக்கூடும்.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் வளர்ச்சி காண்கின்ற நாடுகளிடையே நிலைமைகளில் விரிவான வேறுபாடுகள் இருந்து வருகின்றன. எனவே அரசாங்கத் துறை எந்த அளவில், எவற்றில் எல்லாம் ஆதிக்கம் செலுத்தலாம் என்பதற்குத் திட்டவட்டமான சூத்திரம் ஒன்றை வரையறுத்துக் கொள்வது சாத்தியமல்ல. ஆனால் அவற்றின் அரசாங்கங்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் பயங்கரமானவை. எனவே, வேறு வழிகளில் நிதி வசதி பெற்று நடத்தி வைக்க முடியாத, அத்தியாவசியமான தொழில்களை மட்டுமே அரசாங்கத் துறையினர் வர வர அதிகமாக தமது பொறுப்பில் நடத்தி வருகின்றனர்.

## II

தனது அரசாங்கத் துறை எந்த ரீதியில், எந்த அளவுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்பதை

வளர்ச்சி காண்கின்ற தேசமானது பொதுப்படையாக வரையறுத்துக்கொண்டவுடன், மற்றொரு முடிவையும் அது செய்தாக வேண்டியிருக்கிறது. பொது நிதிகளைக் கொண்டு நடத்தி வைக்கின்ற இந்த ஸ்தாபனங்களை, திறம்பட நிர்வகிப்பது எப்படி என்பதே அந்தப் பிரச்சினை. அரசாங்கத் துறைத் தொழில்களின் நிர்வாகப் பொறுப்பை, நேரடியாகச் சம்பந்தப்பட்ட இலாகாக்களிடம் ஒப்படைப்பதுதான் வழக்கத்தில் பின்பற்றுகின்ற முதல் நடவடிக்கை. எனவே உருக்காலைகளை கனரகத் தொழில் மந்திராலயத்தின் கீழ் வைக்கின்றனர். விசை உற்பத்தி ஸ்தாபனங்கள் விசை மந்திராலயத்தின் பொறுப்பாகின்றன. இதன் விளைவு என்னவென்று பார்ப்போம். மந்திராலயங்கள் ஏற்கெனவே தமது சக்தியை மீறிய பொறுப்பு வகிக்கின்றவை. போதிய சிப்பந்திகள் கிடையாது. அந்த நிலையில் இருப்பவை, பெரிய அளவில் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருப்பவையும் சிக்கல் நிறைந்தவையுமான பொறுப்புக்களை, புதுத் துறைகளில் மேற்கொள்ளும்படி கோரப்படுகின்றன. இந்நிலையில் அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் தாக்குதலுக்கு உள்ளாகின்றது. கண்டனங்கள் பெரும்பாலும் போதிய தகவலை அடிப்படையாகக் கொள்ளாமல் பொறுப்பற்ற ரீதியில்தான் இருக்கும்.

அரசாங்கத் துறைத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்திற்கான பொறுப்பானது, மந்திரிகள், சிவில்

சர்விஸ் அதிகாரிகள் ஆகியோரின் நேரடிப் பொறுப்பாக உருப்பெறுகின்ற நிலவரத்தில், ராஜீய, பொருளாதாரக் குறைபாடுகள் வெளிப் படையாக மேலுக்கு வருகின்றன. இதுதான் இரண்டாவது கட்டத்துப் பிரச்சினை. துரிதமான முடிவு காண்பது எப்படி? புரட்சிகளை ஊக்குவிப் பது எப்படி? திறமையை உறுதி செய்து அதிகப் படுத்தும் வழிமுறைகள் யாவை? என்று கண்டறி வதற்கான ஆலோசனைகள் தொடருகின்றன.

கம்யூனிஸ்ட் நாடுகளில், ராஜீய எதிர்ப்பும் பத்திரிகைகள் குறைகூறுவதும் அவ்வளவு முக்கிய மாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் அல்ல. ஆனால் அங்கேயும்கூட, நிர்வாகிகளுக்கு அதிக மான பொறுப்பை அளித்து, தாமாகவே வலுவில் முன்வந்து புது முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை உண்டுபண்ணி வருகின்றனர். இது கவனிக்கத்தக்க அம்சம்.

தொழில் உற்பத்தியைத் துரிதப்படுத்துவதற் காக வேண்டி சோவியத் யூனியனில் ஒன்றோ டொன்று நன்றாக இணைக்கப்பட்டுள்ள பொருளா தார ஜில்லாக்களை அமைத்திருக்கின்றார்கள். மாஸ்கோவிலுள்ள மத்திய அரசாங்கம் இந்த ஜில்லாக்களுக்குக் கணிசமான அதிகாரத்தை வழங்கியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட ஜில்லாவி லுள்ள ஒவ்வொரு தொழிற்சாலையும் அந்த ஜில்லாவிலுள்ள வேறு எந்த ஸ்தாபனத்திலிருந் தும் நேரடியாகத் தனது தேவைகளை வாங்கிக் கொள்ளலாம் அல்லது அவற்றிற்கு நேரடியாகத்

தனது தயாரிப்புகளை விற்கலாம். தமது தொழிற் சாலையை இயக்குவதில் மானேஜருக்குப் பெருமள வில் சுதந்திரமான அதிகாரம் இருந்து வருகிறது. அங்கு உழைக்கின்றவர்கள் மீது கணிசமான ஆதிக்க அதிகாரம் அவருக்கு இருந்து வருகிறது.

சோவியத் நிர்வாகிகள், சிப்பந்திகள் ஆகி யோரின் பணி ஒரேயொரு அடிப்படையில்தான் மதிக்கப் பெறுகின்றது. அவர்கள் மூலம் என்ன பயன் கிடைக்கிறது என்பதுதான் முக்கியமாகக் கருதப்படுகிறது. தவறுகள் இழைக்கப்படலாம், ஆனால் அவற்றை அவ்வளவாகப் பொருட்படுத்து வதில்லை. தவிர உற்பத்தியின் அளவையும் தன் மையையும் பொறுத்துத்தான் அவர்களுக்கு ஊதி யம் தரப்படுகிறது. இது விசேஷ முக்கியத்துவம் படைத்தது. வரிகளைக் கழித்த பிறகு மிகப் பெரிய வருமானங்களுக்கும் மிகக் குறைந்த வருமானங் களுக்குமிடையே இருக்கின்ற இடைவெளியை ஒப்பிட்டுப் பார்த்தால், அமெரிக்காவைவிட சோவி யத் யூனியனில் அது மிக அதிகமாகக் காணப்படு கிறதென்று சில பொருளாதார நிபுணர்கள் நம்பு கின்றனர்.

யூகோஸ்லாவியாவில் இன்னும் ஒரு படி மேலே சென்றுள்ளனர். அரசாங்கத்துறைத் தொழிற்சாலைகளை நடத்துகின்ற பொறுப்பை தொழில்துறை நிபுணர்களான மானேஜர்களிடமே அங்கு ஒப்படைத்துள்ளனர். பெல்கிரேடில் மத் திய அரசாங்கத்திலுள்ள மந்திராலயங்கள் இப் போது பெரும்பாலும் பொருளாதார அமைப்பைத்

திட்டமிட்டு ஒழுங்குமுறை செய்கின்ற ஸ்தாபனங்களாக மட்டுமே பணியாற்றுகின்றன. தொழிற்சாலைகளின் அன்றாட நிர்வாகப் பிரச்சினைகளும், ஒரு வருஷம் கழிந்தபின் மற்றொரு வருஷத்திற்கான பணியை நிர்ணயித்து நடத்துவதும், தொழிற்சாலை நிர்வாகம், தொழிலாளரின் கவுன்சில்கள் ஆகியவற்றின் கூட்டுப் பொறுப்பாக்கப் பட்டுள்ளன.

அடிப்படையில் முதலாளித்துவ ரீதியில் பொருளாதாரம் இருந்து வருகின்ற மேற்கு ஐரோப்பாவில்தான், அரசாங்கத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் அதிகபட்ச பயனுள்ள உபாயங்கள் உருவாக்கப்பட்டு அமலாகின்றன. இது ஆச்சரியமான ஒரு நிலை.

பிரான்ஸில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் யாவை என்பதற்கு ஒரு புது விளக்கம் தந்தார்கள். நிதி விஷயங்களில் சுதந்திர அதிகாரமும், தனிப்பட்ட பிரஜைக்குரிய சிவிலியன் அந்தஸ்தும் படைத்தவை "தொழில் துறை, வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள்" என்று அந்த விளக்கம் கூறுகின்றது. அதாவது அரசாங்கத் தொழில்கள் சட்ட ரீதியான கார்ப்பொரேஷனுக்குரிய அந்தஸ்தைப் பெற்றுள்ளன. அவற்றில் அரசாங்கம் மட்டுமே ஏகபோக பங்குதாரராக இருந்து வருகிறது.

நடைமுறை நிர்வாகத்தைப்பற்றிய முடிவுகளைத் தொழில்துறை நிபுணர்களான மானேஜர்

கள் செய்கின்றனர். ஒவ்வொரு தொழிற்சாலையும் சரிவர இயங்குவதற்கு அவர்கள்தாம் முற்றிலும் பொறுப்பாளர்கள். தனியார்த்துறையில் தம்மைப் போல பணியாற்றுகின்றவர்கள் பெறுகின்ற ஊதியங்களுடன் ஒப்பிடக்கூடிய சம்பளங்களும், போனஸ்களும் அவர்களுக்கு இப்போது கிடைக்கின்றன. வெளிப்படையாக கொள்கையை நிர்ணயிப்பதுமட்டுமே மத்திய அரசாங்க மந்திராலயங்களின் பொறுப்பாக இருந்து வருகிறது.

ஜெர்மனியிலும் பல பெரிய தொழில் நிறுவனங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கின்றன. பிரான்ஸில் போலவே இங்கும் இவற்றின் நிர்வாகப் பொறுப்பு பிறரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியர்கள் பிரத்தியட்ச உணர்வுடன் நீக்குப்போக்குடன் செயலாற்றும் தன்மையுள்ளவர்கள். எனவே அவர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்றனர். அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு தொழில் ஸ்தாபனத்தை இன்னும் திறம்பட நிர்வகிக்கும் தகுதியுள்ள தனியார்த் துறையினர் இருப்பது தெரிந்தால், பொதுநலனை முன்னிட்டு விசேஷ விலைக்கு அவற்றை அவர்களுக்கு அரசாங்கம் விற்று விடுகிறது. மிக வெற்றிகரமாக நடந்து வந்ததும், அரசாங்கத்திற்குச் சொந்தமானதுமான போக்ஸ் வாகன் கம்பெனி (மலிவுக் கார் தயாரிப்பு ஸ்தாபனம்) 1961-ம் ஆண்டில் தனியார்க் கம்பெனிகளுக்கு விற்கப்பட்டது. இதன்மூலம் வரி செலுத்துவோருக்குக் கணிசமான லாபம் கிடைத்தது.

அமெரிக்காவில் டென்னஸி நிர்வாகம் அரசாங்கத்துறையில் இயங்கும் கார்ப்பொரேஷன். பிரான்ஸில் அரசாங்கத்துறைத் தொழில்கள் எவ்வாறு நடைபெறுகின்றனவோ, ஏறக்குறைய அதே ரீதியில், இதுவும் செயல்படுகின்றது. ஆனல் இது இன்னும் மிகப் பெரிய அளவில் பணியாற்றுகிறது. இதற்கு மூன்று பேரைக் கொண்ட நிர்வாக போர்டு இருக்கின்றது. இந்தப் போர்டை ஜனதிபதி நியமிக்கிருர். வெள்ளக் கட்டுப்பாடு, மின்சார உற்பத்தி, உரத் தயாரிப்பு உட்பட விரிவான பலவகைப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு இந்த நிர்வாக போர்டுக்கு உண்டு. அண்மையில் விசை உற்பத்தி, வினியோகம் ஆகிய பணிகள் விரிவு காண வேண்டியிருந்தன. அதற்குப் போதிய ரொக்க வசதி கிடைப்பதற்காக வேண்டி, கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கான அதிகாரம் இந்த டி. வி. ஏ. ஸ்தாபனத்திற்குத் தரப்பட்டது.

இந்தியாவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான துர்காபூர் உருக்காலை, சிந்திரி உரத் தயாரிப்பு ஆலை ஆகியவற்றின் நிர்வாகம் சுதந்திரமாக நடைபெறக் கூடியவாறு குறிப்பிடத்தக்க ஓர் பரீட்சையை சமீபத்தில் கனரகத் தொழில் மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் துவக்கி வைத்தார்.

ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்வீடன், பிற ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றைப் போலவே இந்த இரண்டு அரசாங்கத்துறைத் தொழிற்சாலைகளும் தனியார்த் துறைக் கார்ப்

பொரேஷனைப்போல சில அம்சங்களில் பொறுப் பேற்றுப் பணியாற்ற இருக்கின்றன. அரசாங்க ஸ்தாபனங்களிடம் வாலாயமாகக் காணப்படுகின்ற சில தன்மைகளை அவை கைவிட வேண்டியிருக் கும். எனவே இனிமேல் இந்தத் தொழிற்சாலை களின் நிர்வாகங்கள் தமக்கு வேண்டிய ஊழியர் களை அமர்த்தவும் தேவைக்கேற்ப நீக்கவும் அதி காரம் உள்ளவையாக இருக்கும். அன்றாட நிர்வாக விஷயமான முடிவுகள் அனைத்தையும் காண்பதற்கான சுதந்திரம் அவற்றிற்கு இருந்து வரும். வழக்கப்படி பொதுத் தணிக்கையாளர் அவற்றின் கணக்கு வகைகளைப் பரிசோதிப்பார்.

தைரியம் நிறைந்த இந்தப் புது ஏற்பாட்டை அறிவிக்கையில் ஸ்ரீ சுப்பிரமணியம் கூறினார்: "தவறு இழைக்க முடியாதபடி தணிக்கைகளும், மேல் தணிக்கைகளும், இருக்கும்படி அரசாங்கத் துறை நிர்வாகங்கள் விஷயத்தில் ஏற்பாடு செய்ய இயலும் என்ற கருத்துத் தவறானது. திறம்பட நிர்வாகம் நடைபெறுகின்ற காலையில் இடையில் எப்போதுமே சில தவறுகள் நிகழத்தான் செய்யும். ஏற்றம் காண்பதற்கு நாம் தருகின்ற விலைதான் தவறுகள். இறுதியில் என்ன பயன் கிடைக் கிறதென்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்."

இந்த ஏற்பாடு வழக்கமாக இருந்து வந்த நடைமுறைக்கு மாறுபட்டதாயினும், உலகம் எங் கும் கண்டறிந்த அனுபவத்தின் அடிப்படையில் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

## III

வளர்ச்சி காண்கின்ற தேசத்தில் அரசாங்கத்திற்கு உரிய பிரதான பணியை ஒருவாறு விளக்கினோம். தேசிய பொருளாதார, சமூக லட்சியங்கள் யாவை என்பதை முடிவு செய்வது, அந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவேண்டி, பிரத்தியட்ச உணர்வுடன் திட்டங்களை உருவாக்கி, பணிகளைப் பற்றிய வரிசைக்கிரமங்களை நிர்ணயிப்பது, அடிப்படையான கட்டுக்கோப்பானது சரிவர உருவாகி இயங்குவதற்கு வேண்டிய மூலதனத்தை தந்து வழிமுறைகளை வகுத்துத் தருவது, தனியார்த் துறைக்கு போதிய மூலதன வசதி கிடைக்க இயலாத, ஆனால் இன்றியமையாத பொருள்களின் உற்பத்தி சரிவர நடந்தேறுவதற்கான வசதிகளையெல்லாம் அளிப்பது, ஆகியவைதாம் அரசாங்கத்தின் பிரதான பணிகள்.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில், இத்தகைய ஏற்பாடுகளைச் செய்த பிறகும், தெளிவாக வரையறுக்கப்பட்ட தேசிய லட்சியங்களைக் கருத்திற்கொண்டு, சமூக பொருளாதார நீதி உணர்வுடன்கூட, தனியார்த் துறையானது சுறுசுறுப்புடன் உழைக்கக்கூடிய வாய்ப்பு மிக விரிவானதாகவே இருந்து வரும். லாபம் அடைவதில் உள்ள ஆர்வம் ஒருபுறம், பொது நலனை மதித்துச் செயல்பட வேண்டுமென்ற உணர்வு இன்னொருபுறம் இவை இரண்டையும், பக்குவமாக சமநிலைப்படுத்திக்கொண்டு போக

முடியும் என்பது அனுபவபூர்வமாகத் தெரிந்த விஷயம். தனியார்த் துறைக்குச் சொந்தமாக இருந்து, அவர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்ற இத்தகைய பெரிய, சிறிய தொழில்கள் தேசிய வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் திட்டவட்டமாக உதவி அளிக்க முடியும். அரசாங்கத்தால் புரிய முடியாத சாதனைகளை இவை செய்து காட்ட வல்லவை என்பது ருசுவாகியுள்ளது.

பொருளாதார வாழ்வின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் எட்டிப் பிடிக்க தனியார்த் துறையால் இயலும். ஆங்காங்கு சிறிது சிறிதாகத் தேங்கியிருக்கக்கூடிய உள்நாட்டு மூலதனத்தையும், வேறுவகையில் உறக்கமுற்றுச் சும்மாயிருக்கக் கூடிய நிர்வாகத் திறன்களையும் வெளிக் கொணர்ந்து பயன்படுத்திக்கொள்ள அதனல் முடியும். போட்டியை ஊக்குவித்து, வலுவில் முன்வந்து பணியாற்றுவதற்கான ஆர்வம், ஆராய்ச்சிக்கான வசதி ஆகியவற்றைப் பெருக்கி, புதிய பொருட்களையும் முறைகளையும் உருவாக்கி, பொருளாதாரம் அனைத்தையும் சுறுசுறுப்பு உள்ளதாக்குவதற்கு அவற்ருல் துணைபுரிய முடியும். மதிநுட்பமும் சக்தியும் உள்ள இளைஞர்கள் நிர்வாகப் பொறுப்புகளுக்கு வேண்டிய தகுதிகளைப் பெற்று ஏற்றம் காண்பதற்கான வாய்ப்புக்களை அது நல்ல முறையில் அளிக்கவல்லது.

பெரிய நகர்ப் பிரதேசங்களில் மட்டுமின்றி நாட்டுப்புறத்தில் இருக்கின்ற சிறு நகரங்களிலும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புக்களை அவை

குறிப்பிடத்தக்கவாறு அதிகரிக்கக் கூடியவை. ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் பல தேசங்கள் அனுபவபூர்வமாக இதை நிருபித்துள்ளன. கிராம மக்கள் வாங்கி பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்ற பொருட்களும். தேவைகளும் உற்பத்தியாகி கிடைக்கச் செய்வதற்கு, சிந்தனை வளமும், தலைமைக் குணமும், தொழில் பயிற்சிக்கான வசதியும், குறைந்த வட்டியுடன் கூடிய மூலதனக் கடன்களும் பெருமளவில் துணைபுரியவல்லவை.

இந்தியாவைச் சேர்ந்த பஞ்சாபில் சமீபத்தில் பொருளாதார நடவடிக்கைகள் அலைஅலையாக எழுந்து வளர்ச்சி கண்ட அனுபவம் இந்தச் சாத்தியக்கூறுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு. நூற்றுக்கணக்கில் சிறிய பட்டறைகள், தொழிற்சாலைகள், சேவா ஸ்தலங்கள் ஏற்பட்டு வருகின்றன. பண்டங்களை வாங்கி உபயோகிப்போரின் தேவைக்கேற்ப இவை உருப்பெறுகின்றன. தொழில் நுட்பப் பயிற்சி ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பேருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. தொழில் நுட்பத் திறன் தேவைப்படாத வேலைகளும் இன்னும் பல்லாயிரம் பேருக்குக் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் பெருகி வருகின்றன.

வளர்ச்சி கண்டு வரும் பெரும்பாலான நாடுகள் அந்நியச் செலாவணியை ஓரளவு சம்பாதிக்கின்றன, அந்நிய அரசாங்கங்களிடமிருந்து கடனாகவும் பெறுகின்றன. ஆனால் அவற்றுடன்கூட

அயல்நாடுகளைச் சேர்ந்த தனியார்த் துறையினர் பெரிய அளவில் விடுமுதல் செய்வதும் மிகமிக அவசியமாகிறது. ராஜீய அமைப்பு ஸ்திரமானது என்ற நம்பிக்கை பிறந்தால்தான் அவை கிடைக்கும். சிக்கல் நிறைந்த தொழில்களில் நிர்வாகப் பொறுப்பை அந்நியர் ஏற்றுக்கொண்டு துணை புரிவதும் தேவையே. அப்போதுதான் அடக்க விலை குறைந்து தரம் உயரும். வினியோகச் செலவுகளை மிகமிகக் குறைத்து, ஏற்றுமதி மார்க்கெட்டுகளை விரிவாக்குவதற்கான நவீன விற்பனை உத்திகளைக் கையாள்வதும் அதன் மூலமாகத்தான் சாத்தியமாகும்.

தனியார்த் துறைக்குள்ள ஒரு தனிச் சிறப்பு தன்னைத்தானே ஒழுங்குமுறை செய்து கொண்டு வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புக்கள் அதில் இருப்பதுதான். இதன் அவசியத்தை வளர்ச்சி காண்கின்ற நாடுகள் இப்போதுதான் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கின்றன. தேசியத் திட்டத்தின் கட்டுக்கோப்புக்குள் தனியார்த் துறைக்குச் சொந்தமாக இருந்து அதனுல் நிர்வகிக்கப் பெறும் தொழிற்சாலைகள் தாம் மக்களுக்கு மிகப் பிடித்தமான பொருட்கள் சிரமமின்றி சுயமாக உற்பத்தியாவதற்குச் சரிவர துணைபுரியக் கூடியவை.

சைக்கிள் வேண்டுவோர் நிறைய இருந்து, அதற்கான விலையைத் தருவதற்கும் அவர்கள் இணங்கும் நிலவரமானது, அதன் உற்பத்திக்கு மிகப் பெரிய அளவில் ஊக்கம் அளிக்கும். அதற்கு நேர்மாருக, ஒரு குறிப்பிட்ட ரகம் பொதுமக்களுக்

குப் பிடித்தமாக இல்லையென்றால், தொடர்ந்து அதே ரகத்தை உற்பத்தி செய்ய முடியாதபடி, அது சுயமாகவே தடை செய்து விடுகிறது. அந்த விலையில், அந்த குறிப்பிட்ட ரகச் சைக்கிளை அவர்கள் தொடர்ந்து தயாரிக்காமலாவது இருப்பார்கள்.

வாங்கி உபயோகிக்கும் மக்களின் விருப்பு வெறுப்புகள் இடத்திற்கு இடம், காலத்திற்கு காலம் மாறிக்கொண்டுதான் வரும். எனவே, அவற்றிற்கேற்ப சரிக்கட்டிக்கொண்டு போவதற்கான நீக்குப்போக்கு, பயனுள்ளவாறு எந்த அரசாங்கத்திடமும் காணப்பெற மாட்டாது. ஆனால் தன்னைத்தானே ஒழுங்குமுறை செய்து கொண்டு ஏற்றம் காண்கின்ற விற்பனை முறையானது வேறு வகையில் செயல்படுகிறது. எந்தப் பண்டங்கள் எவ்வாறு கிடைக்கச் செய்தால் அதிகபட்ச பயன் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு, மக்களுக்குப் பிடித்தமான ரகங்களைத் தரமான வகையில் தயாரிப்பதற்கு மூலதனமும் தொழில் திறன்களும் துணைபுரியக் கூடியவை. பரீட்சை செய்து பார்த்து தவற்றை உணர்ந்து திருந்துவது, நஷ்டம் மிகுதியான நடைமுறை என்று, மேலெழுந்தவாறு பார்ப்போருக்குத் தோன்றலாம். ஆனால் அவ்வாறு பொதுமக்களின் தேவைகளை, சிறிய தொழில்களை துணிவுடன் நடத்துவோர் கண்டறிந்து செயலாற்றுவது வெற்றிக்கு மிகவும் அவசியம்.

"மார்க்கெட்டை அனுசரித்த கண்ட்ரோல்" என்ற இந்த ஏற்பாடு சகஜமாக மேற்றிசை

ஜனநாயக நாடுகளில்தான் நல்லபடி காணப் பெறுகிறது. ஆனால் பிற பொருளாதார நிலவரங்களைப் போலவே இத்தகைய உபாயங்களைக் கம்யூனிஸ்ட் நாடுகளும் கையாள வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டிருப்பது ருசிகரமான விஷயம்.

பண்டங்களை வாங்கி உபயோகிக்கின்ற மக்களின் தேவைக்கு மதிப்புத் தருகின்ற ஒரு பொருளாதார அமைப்பு நோக்கி, சோவியத் யூனியன் வர வர அதிகமான வேகத்தில் விரைந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், அதன் அரசாங்கம் ஒரு சங்கடமான நிலைமையையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. சர்வாதிகாரப் பொருளாதார அமைப்பு மேலே இருந்து ஆதிக்கம் வகிக்கும் தன்மையுடையது. அந்த ஏற்பாட்டின் கீழ், பண்டங்களை வாங்கி உபயோகிக்கின்ற மக்களுக்கு பிடித்தமான வர்ணம், மோஸ்தர், ரகம், வகை, விலை ஆகியவற்றைக் கண்டறிவது எப்படி என்ற பிரச்சினை எழுகிறது. பொதுமக்கள் மேலும் மேலும் பெருமுயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஊக்கங்களை அளிப்பதற்கு இவையெல்லாம் மிக மிகத் தேவை. மேலை நாடுகளில் இருப்பது ஏறக்குறைய நிர்ப்பந்தமற்ற மார்க்கெட் நடைமுறை. இதற்குப் பதிலாக சோவியத் அரசாங்கம் எத்தகைய ஏற்பாட்டை உருவாக்க முடியும்?

இதற்குப் பயனுள்ள மாற்று ஏற்பாடு எதுவும் கிடையாது என்பது அனுபவபூர்வமாக நிரூபணமாயுள்ள விஷயம் என்று நான் கருதுகிறேன். இது

தான் உண்மை நிலை என்றால், கம்யூனிஸ்ட் நாடுகளின் நடைமுறைகள் மீண்டும் மாறுதல் அடையத்தான் வேண்டியிருக்கும். தொழிலாளரும் நிர்வாகிகளும் அதிகமாக உற்பத்தி செய்வதில் அக்கறை காட்டுவதற்காக, அதிக ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்புக்களை பிற நாடுகளில் அளிக்கின்றார்கள் அல்லவா? அதைப்போலவே, சித்தாந்த நிலைகளைக் கைவிட்டு, வாங்கி உபயோகிக்கின்ற மக்களின் தேவையை மட்டுமே கருத்திற்கொண்டு, அவர்கள் கோரும் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்கின்ற நடைமுறையை ஏற்றாக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கும் ஏற்படும். தமது கல்லறையில் உறங்குகின்ற ஸ்டாலினுக்கு நிச்சயமாக இது உகப்பாயிருக்காது. ஆனால் ரஷ்யாவில் இத்தகைய மாறுதலைச் செய்வது இதுதான் முதல் தடவை என்று கருதுவது தவறு.

வளர்ச்சி காண்கின்ற தேசத்தில், தனியார்த் துறை ஸ்தாபனங்கள் பெரிய அளவில் பணியாற்றுவதற்கான தீரம் படைத்தவை என்று நான் விவரித்தேன். ஆனால் அதே சமயத்தில் வரையறுக்கப்பட்ட தேசிய லட்சியங்களுக்கும், பொருளாதார சமூக நீதிக்கும் இசைவாகவே செயலாற்ற வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறினேன். ஆனால் எண்ணற்ற கண்ட்ரோல்களை ஏற்படுத்தாமல் அத்தகைய கட்டுக்கோப்பை எவ்வாறு உருவாக்குவது? அப்படி கண்ட்ரோல்கள் அதிகப்படும் நிலவரம், உற்பத்தியில் தேக்க நிலை ஏற்படு

வதில்தான் கொண்டுபோய்விடும். நாம் உழைப்பது எல்லாம் அத்தகைய நிலை ஏற்படாமல் தவிர்ப்பதற்காகத்தான்.

மார்க்கெட்டை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி. விற்பனை செய்கின்ற நடைமுறையிலும் குறைபாடுகள் உண்டு. தனியார்த் துறையானது, தனது சொந்த நலனுக்கோ அல்லது பொது நலனுக்கோ இசைவாக எப்போதுமே செயலாற்றும் என்ற உத்தரவாதம் கிடையாது. விலைகளை நிர்ணயிக்கின்ற ஏகபோக உரிமையாளர் பொது மக்களைச் சுரண்டுவது சாத்தியமே. நாணயமற்ற நடைமுறைகளின் காரணமாக கள்ள மார்க்கெட்டுகள் ஏற்பட்டு, வரி ஏய்ப்பும் சகஜமாகி விடும். தொழிலாளரும் சுரண்டப்படலாம்.

தனியார்த் துறை முயற்சிகள் இம்மாதிரி சில விரும்பத்தகாத தீவிர விளைவுகளைக் கொண்டதாக இருக்கக்கூடுமென்ற காரணத்தால், நிர்மாண ரீதியில் அதற்கு இருந்துவரும் சில தகுதிகளை, வளர்ச்சி காண்கின்ற நாடுகளால் புறக்கணித்து விட முடியாது. இந்த விபரீத நிலைகள் தலை தூக்காமல் இருப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்து, அதே சமயத்தில் பொறுப்புள்ள வகையில் சொந்த முயற்சிகள் விரிவு காண்பதற்கான ஊக்கம் குறையாவண்ணம் செயலாற்றுவது தான் பிரதானம்.

லாபம் அடைவதற்காக போதிய ஊக்கம் அளிக்கப்பட வேண்டியதே. அதே சமயத்தில், தனியார்த் துறையின் சக்தி எவ்வாறு பயன்பட

வேண்டுமென்பதற்கு, பிரத்தியட்ச உணர்வுடன் கூடிய வழிமுறைகளை அரசாங்கம் நிர்ணயித்து நடத்திவைக்க வேண்டும். ஹேஷ்யபேரங்களில் ஈடுபடாமல் நிர்மாண ரீதியில் பொருள் உற்பத்தி பெருகுவதற்கு அந்தச் சக்தி பிரதானமாகப் பயன் பட வேண்டும். அரிதாகவுள்ள வசதிகள் சிறு பிள்ளைத்தனமான காரியங்களுக்கோ அல்லது வீணான துறைகளுக்கோ பயன்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். விரிவான பொதுநலனே எப்போதும், எதிலும் முதலிடம் பெறுகின்றது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அமெரிக்காவில் தனியார்த் துறையிலுள்ள ஒவ்வொரு பிரிவின் நடவடிக்கைகளையும் மேல் பார்ப்பதற்கான ஒழுங்குமுறைச் சட்டங்களையும் ஸ்தாபனங்களையும் கொண்ட ஓர் ஏற்பாடு படிப் படியாக உருவாகியுள்ளது. ஜனநாயக முறையில் சர்ச்சை செய்தும், சட்டம் இயற்றியும், விட்டுக் கொடுத்து உடன்பாடு கண்டும் இதற்கு வழி செய்திருக்கிறோம். தொழில்களில் ஈடுபடுவோரின் சுயமுயற்சிகளை அடக்கி ஒடுக்காமல் அவற்றை ஒழுங்குமுறை செய்யும் மேன்மையான வழியை ஒருவாறு பெரும்பாலும் வெற்றிகரமாகச் செய் திருக்கிறோமென எங்களால் கூற முடியும்.

பொதுமக்களுக்கு எது நல்லதோ, அதுவே நாளடைவில் தமக்கும் நல்லது என்பதை பெரும் பாலான அமெரிக்க வர்த்தக-தொழில் துறையினர் அறிந்து கொண்டுள்ளனர். இதைப் பலவகை களில் செய்து காட்டியிருக்கிறோம். பொருளாதார.

சமூக நலன்களுக்கான அடிப்படை விதிகளை வரையறுத்து நிர்ணயித்துள்ளோம். பெடரல் சர்க்காரும் ராஜ்யங்களின் அரசாங்கங்களும் இந்த விதிமுறைகளை அமலாக்குகின்றன. அமெரிக்க முதலாளித்துவம் பொறுப்புக்கு ஏற்ப பக்குவப்படுவதற்கு இவை பயன்பட்டுள்ளன. தேசிய வளர்ச்சிக்கும் தனிநபருக்குமுள்ள வாய்ப்பு அதிகரிக்கத் துணைபுரிவதுடன், சமூகத்தின்பால் தனக்குள்ள கடமையை அறிந்து உழைக்கின்ற ஒரு சக்தியாக அமெரிக்க முதலாளித்துவத்தை இதன் மூலம் மாற்றியிருக்கிறோம்.

இங்கு சில உதாரணங்களைத் தருவோம். 1890-ம் ஆண்டில் பெரிய கம்பெனிகளின் கூட்டு நடவடிக்கைகளுக்கு எதிரிடையான ஷெர்மன் சட்டம் நிறைவேறியது. 1914-ல் இதே விஷயமாக கிளேட்டன் சட்டம் நிறைவேறியது. போட்டா போட்டி ரீதியில் தரமும் விலையும் இருந்து வரும்படியான நிலைமையை உறுதி செய்வதுதான் இவற்றின் நோக்கம். அத்தகைய சூழ்நிலையில்தான் மக்களுக்குத் தேவைப்படும் பொருட்கள் ஒழுங்காகக் கிடைத்து வருவதற்கும், பொதுநலனை முக்கியமாகக் கருதி உழைப்பதற்கும் துணைபுரிய மார்க்கெட்டினால் முடியும். ஏகபோக ரீதியில் கூடியும் இணைந்தும் வர்த்தகத்தை நிர்ப்பந்தப்படுத்தி, விலைகளை நிர்ணயிப்பதற்கு முற்படுவோருக்கு எதிரிடையாக பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் இரண்டுதான் மேலே குறிப்பிட்ட சட்டங்கள். ரோடு, ரயில்

போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து, விசை உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிற் சாலைகள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதை கவனித்து ஒழுங்கு செய்வதற்கான அரசாங்க அமைப்புகள் இருந்து வருகின்றன. 1906-ம் ஆண்டில் தூய உணவுச் சட்டம் நிறைவேறியது. 1938-ல் உணவு, மருந்து, அலங்காரபொருட்களைப் பற்றிய சட்டம் நிறைவேறியது. தவருன லேபிள்களை ஒட்டக் கூடாது. ஏமாற்றுத் தன்மையுள்ள ரீதியில் ஆடம்பரமான அலங்காரப் பெட்டிகளில் போட்டு விற்கக் கூடாது. கலப் படம் கூடாது. தீமை விளைவிக்கக் கூடிய பொருள் எதையும் விற்கலாகாது என்று அவை தடை செய்தன. ஒவ்வொரு உணவுப் பொட்ட லத்திலும், ஒவ்வொரு மருந்துப் பெட்டியிலும், சமையலறையில் உபயோகிக்கின்ற ஒவ்வொரு டின் எண்ணெயிலும் என்னென்ன உள்ளடக்க மாக இருக்கின்றன என்று தெளிவாகத் தெரிவித் தாகவேண்டும். இந்தச் சட்டங்களை மிகக் கண்டிப்பாக அமல் நடத்துகிருர்கள்.

தொழில்துறை நடைமுறைகள், பழக்கவழக் கங்கள் ஆகியவைமீது இத்தகைய கண்ட்ரோல்கள் இருப்பதுடன்கூட வேறு சட்டங்களும் உருவாகி அமலாகின்றன. குறைந்தபட்ச ஊதியத்தை அளிக்கும் சட்டம், தொழிற் சங்கங்களுக்கும், யூனியன்களுக்கு உள்ளேயே தனிப்பட்ட தொழி லாளருக்கும் உரிமைகளை உத்தரவாதம் செய் கின்ற சட்டங்கள் இருக்கின்றன. சமூகநல

பாதுகாப்புக்கான வரிச் சட்டங்கள் இருக்கின்றன. வேலையில் ஈடுபட்டிருக்கும்போது உடலுக்கு ஊறு ஏற்பட்டால் தொழிலாளருக்கு நஷ்ட ஈடு தருவதற்கான சட்டங்கள் இருக்கின்றன. அமெரிக்காவிலுள்ள தனியார்த் துறையினர் பொது நலனைப் பிரதானமாகக் கருதி பொறுப்புடன் செயலாற்றுவதற்கான இன்னும் பல சட்டங்கள் இருந்து வருகின்றன. மிகப் பெரும்பாலான தொழில் துறையினரும் வர்த்தகர்களும் தாமே முன்வந்து இந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்கின்றனர். சில இவற்றையும் மிஞ்சி அதிக வசதிகளை அளிக்கின்றன.

அரசாங்கம் செய்கின்ற பணிகளுக்குத் தேவைப்படும் வரி வருமானம் கிடைப்பதற்கும், வர்த்தகமும் தொழிலும் விரிவு காண்பதற்கான மார்க்கெட். பெருமளவில் உருப்பெறுவதற்கும் ஏற்றவாறு, எங்கள் வரி விதிப்பு முறை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு பெரிய கம்பெனியும் தனது மொத்த லாபத்தில் பாதியை பெடரல் சர்க்காருக்கு வரியாகச் செலுத்துகிறது. பள்ளிக்கூடங்கள், ரோடுகள், ஆஸ்பத்திரிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், பொதுநல சேவைகள் ஆகியவற்றிற்காக இந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது. இந்தப் பலவகைப் பணிகளுக்கு வழி செய்வதன் காரணமாக நல்ல ஊதியத்துடன் கூடிய அதிகப்படி வேலைகள் பத்து லட்சக்கணக்கில் சிருஷ்டிக்கப்படுகின்றன.

ஆனல் எங்கள் வரிவிதிப்புத் திட்டத்தில் ஒரு குறைபாடு இருப்பதாகவே எனக்குத் தோன்று கிறது. ஹேஷ்யபேரங்கள் மூலம் அல்லது வர்த்த கத்தின் மூலம் ஈட்டுகின்ற லாபங்கள் ஒருவகைப் பட்டவை. அவற்றின்மூலம் புதிதாக அதிகப்படி செல்வம் எதுவும் சிருஷ்டிக்கப்படுவதில்லை. ஆலைப்பண்டங்களின் தயாரிப்பு, விளைபொருட் களின் தயாரிப்பு, மக்களுக்கு அளிக்கப்படும் பல் வேறு சேவைகள் ஆகியவை அதிகப்படி செல் வத்தை சிருஷ்டிக்கின்றன. இவற்றின்மூலம் கிடைக்கும் லாபத்திற்கும், முந்திய வகையைச் சேர்ந்த லாபத்திற்குமிடையே, எங்கள் வரிவிதிப்பு முறையானது பாகுபாடு செய்யாதது ஒரு குறை தான்.

சமுதாய நலனுக்கு அதிகபட்சம் பயன்படக் கூடிய வகையில் ஆர்வத்தை உண்டுபண்ணி தனியாரின் மூலதனத்தைத் திரட்டுவதில் எந்தத் தேசமும் வெற்றி கண்டதாகச் சொல்வதற்கில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளும் சரி, வளர்ச்சி கண்டு வரும் நாடுகளும் சரி, இவ்வகையில் ஒரே மாதிரி யாகத்தான் இருந்து வருகின்றன. மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களும் பலவகைச் சேவை களும் வரவர அதிகமாகக் கிடைக்கக்கூடியவாறு செயலாற்றுவோருக்கு அதிகப்படி லாபம் கொடுப் பதற்கு வசதி அளிக்கின்ற வரி முறை தேவை. நிலத்தையும் பிற பொருட்களையும் வாங்கிவைத்து, ஹேஷ்யபேர ரீதியில் அடைகின்ற லாபங்கள் குறையக்கூடிய வகையில், அத்தகைய முயற்சிகள்

பெருகாமல் இருப்பதற்கான ரீதியில், வரி ஏற்பாடு கள் அமையவேண்டுமெனக் கருதுகிறேன். ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய வற்றில் வளர்ச்சி கண்டு வருகின்ற நாடுகள் இந்தத் துறையில் தாமே வலிய வந்து, சிந்தித்துப் பார்த்து, தக்க வழிமுறைகளை வகுப்பதற்கான விசேஷ வாய்ப்பு இருக்கின்றது.

சமூக நீதி என்ற கட்டுக்கோப்புக்குள், தொழில்கள் விரிவு காண்பதற்கு முக்கியமாக துணைபுரியக்கூடிய மற்றொரு பிரிவினர் கட்டுப் பாடாக இயங்கும் தொழிலாளர். தொழிற்சங்கங் கள் பொறுப்புடன் இயங்க வேண்டும். தொழி லாளருக்குச் சாதகமான வேலை நிலைமைகள் இருந்து வர வேண்டுமென அவை வற்புறுத்த லாம். லாபத்தில் நியாயமான பகுதி தொழிலாள ருக்குக் கிடைக்க வேண்டுமெனக் கோரலாம். அதே சமயத்தில், நியாயமான லாபத்திற்கும், நிர்வாக விஷயத்தில் மேல் அதிகாரத்திற்கும் நிர்வாகத்தினர் உரியவர்கள் என்பதை தொழிற் சங்கத் தலைவர்கள் மதித்து நடந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் இரண்டாவது உலக யுத்தத் தின்போது விலை, ரேஷன், வாடகைக் கண்ட்ரோல் ஆகியவற்றின் நிர்வாகியாகப் பணியாற்றி நான் அனுபவம் அடைந்தவன். எனவே கூடவே ஓர் எச்சரிக்கையையும் நான் செய்தாக வேண்டும்.

வளர்ச்சி காண்கின்ற பெரும்பாலான நாடு களில் நேரடியான அரசாங்க நடவடிக்கை மூலம்

விலைகளையும் பொருள் உற்பத்தியின் போக்கையும் கட்டுதிட்டம் செய்வதற்கான ஆவல் எடுப்பாகக் காணப்படுகிறது. சில நிலைமைகளில் அத்தகைய கண்ட்ரோல்கள் அவசியமாகலாம். ஆனால் அவற்றைச் சரிவர நிர்வகிப்பது சிரமம் நிறைந்தது, சிக்கல் மிகுதியானது. அவை விஷயத்தில் விசேஷ முன்ஜாக்கிரதை தேவைப்படும்.

பற்றாக்குறையாக இருந்து வருகின்ற அத்யாவசியப் பொருட்கள் விஷயத்தில், பிரத்தியட்ச நிலைமையை கருத்திற்கொள்ளாமல், உச்ச விலை வரம்புகளை மிகக் குறைவாக நிர்ணயிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படிச் செய்தால் அந்தப் பண்டங்கள் மேலும் அரிதாகிவிடும். மூலதனமும் தொழில் திறன்களும் இவற்றைவிட இன்னும் அதிக லாபகரமான பண்டங்களின் தயாரிப்புக்குத் திருப்பிவிடப்படும். அத்தகைய பண்டங்கள், அவ்வளவு அத்தியாவசியமானவையாக இருக்கமாட்டா. விலை கண்ட்ரோல் இல்லையென்ற காரணத்தால் அவற்றின் உற்பத்தியில் நாட்டம் அதிகமாகி விடும்.

பற்றாக்குறைக்கு பயனுள்ள ஒரே பரிகாரம் அதிக உற்பத்திதான். அத்தகைய உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் விலை நிர்ணய முறை அமைந்தாக வேண்டும். இதற்கான வாய்ப்பை அளிக்காத விலைவாசிக் கண்ட்ரோல்கள், நிச்சயமாக உற்பத்தி குறைவதற்குத்தான் காரணமாகி விடும். குறிப்பாக பொளாதார அமைப்பில் மிக முக்கியமான பகுதிகளில் உற்பத்

திச் சுணக்கம் ஏற்பட்டால் கள்ள மார்க்கெட் மலிந்துவிடும். தேசிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அவசியமான பொருளாதாரச் சுறுசுறுப்பும், லட்சியங்களின் கவர்ச்சியும் மங்கி வலுவிழந்துவிடும்.

இந்த விவாதத்திலிருந்து சில கோட்பாடுகள் நிர்ணயமாகின்றன. அரசாங்கத் துறைத் தொழில்களைவிட தனியார்த் துறைத் தொழில்களுக்கு அதிக சலுகை தருவது, அல்லது தராமல் இருப்பது தார்மிக வகையில் முக்கியமானதல்ல. போதிய ஊக்கமளித்து பொறுப்புடன்கூட ஒழுங்கு முறை செய்து வந்தால், நல்ல தேசியத் திட்டத்தின்கீழ், தனியார்த் துறையானது சிறப்பாகப் பணியாற்ற வல்லது. சமூக நீதி உணர்வுடன் கூடிய கட்டுக்கோப்புக்கு உட்பட்டு, தேச வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பெரு முயற்சிகளில் பிரதான பங்கை தனியார்த் துறை வகிக்க முடியும் என்று ஏற்படுகிறது.

வளர்ச்சி காண்கின்ற நாடுகளில் அரசாங்கம் ஏற்கெனவே மிதமிஞ்சிய சுமையை தன்மீது போட்டுக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் மட்டுமே நிறைவேற்றி வைக்கக்கூடிய பிரதான பணிகள் இருக்கின்றன. அவற்றைச் சரிவரசெய்து முடிப்பதற்கான வாய்ப்பு அதற்குத்தேவை. எந்த வரிசைக் கிரமங்களில் பணிகள் நிறைவேறவேண்டுமென்று நிர்ணயிப்பது, அந்தப் பணிகள் சரிவர நடந்தேறுவதற்கான திட்டங்களை உருவாக்கித் தருவது, எல்லாவற்றையும்விட வளர்ச்சிக்கு முக்

கியமான அடிப்படை வசதிகளைச் செய்து தருவது ஆகியவைதாம் அரசாங்கத்தின் பிரதான ஜோலிகள். கல்வியின் விஸ்தரிப்பு, பெருமளவில் போக்கு வரத்துக்கு வசதி செய்து தருவது ஆகியவைதாம் மேலே குறிப்பிட்ட முக்கியமான அடிப்படைகள். மேலும், போதிய விடுமுதல் செய்து நிர்வாகத்தை நடத்துவதற்குத் தனியார்த் துறை முன்வர இயலாத நிலையில் சில அடிப்படைத் தொழில்கள் இருக்கும். அவற்றை அரசாங்கமே நடத்தியாக வேண்டும். மானிய உதவி கொடுத்து அவற்றைத் தனியார்த் துறை நடத்தச் செய்யலாம் என்பது அனுபவ சாத்தியமற்றது.

இவ்வாருக, பொறுப்பைச் சமநிலையில் பகிர்ந்துகொண்டால், தேசத்தின் பொருளாதாரப் பணிகளை அன்ருடம் கவனித்துக் கொள்வதைப் பற்றிய ராஜீயப் பொறுப்புக்களை வரையறுத்துக் கொண்டு, சரிவர செயலாற்ற புது அரசாங்கங்களால் முடியும். ஏதாவது ராஜீயப் பிரச்சினைகள் தமக்குக் கிடைக்க மாட்டாவா என்று தேடியலைகின்ற எதிர்க்கட்சியினரின் தொந்தரவுகளினின்றும் பெருமளவு விடுபடுவதற்கு இது துணைபுரியும்.

எது முக்கியம், எந்த அளவு எதைச் செய்யலாம் என்பது தேசத்துக்குத் தேசம் மாறுபட்டதாக இருக்கத்தான் செய்யும். முயன்று பார்த்து, தவறுகளை இழைத்து, திருத்திக்கொள்வது தவிர வேறு வழியில்லை. வெளிப்படையாக நிகழ்கின்ற, விஷயத் தெளிவுள்ள சர்ச்சையும் இதற்குத் துணைபுரியக் கூடியது.

சமுதாயத்தின் க்ஷேமநலனை முக்கியமாக மதிக்கின்ற நவீன பொருளாதார அமைப்பில், அரசாங்கத் துறை எந்த அளவில், தனியார்த் துறை எந்த அளவில் பொறுப்பு வகிக்க வேண்டுமென்று முடிவு கட்டுவதைப்பற்றி ஆழ்ந்த கருத்து-வேறுபாடுகள் வளர்ச்சி காண்கின்ற நாடுகளில் இருக்கவே செய்கின்றன. தொழில்களுக்கான ரொக்க வசதி விஷயமாக, நான் இங்கு வந்த பிறகு, விசேஷ சர்ச்சை நிகழ்ந்து வருவதைக் காண்கிறேன். ஆனல் நெடுங்காலம் காலனி ஆதிக்க முறையின்கீழ், ஆசாபங்க மிகுதியுடன் இருந்து வந்ததால், பல எதிர்மறைக் கருத்துக்கள் இங்கு எடுப்பாகக் காணப்பெற்று வந்தன. அவற்றில் சிலவற்றிலிருந்து படிப்படியாக இந்தியா தன்னை விடுவித்துக்கொண்டு வருகிறது.

தொழில் வளர்ச்சியையும், காலனி ஆதிக்கத்தையும் காந்தியப் புரட்சியானது இணைத்துப் பேசியதில் நியாயமிருக்கிறது. காலனி ஆதிக்கத்திற்கு எதிரிடையான போரை தலைமை வகித்து நடத்துகையில், தொழில் வளர்ச்சியை காந்திஜி எதிர்த்ததிலும் ஒரு நியாயம் உண்டு. சில பெரிய தொழில்கள் ஏற்படத்தான் வேண்டும். அவை அத்தியாவசியமான தீமைகள் என்பதை அவர் ஒப்புக்கொண்டார். ஆனல் அதே சமயத்தில், சமுதாயத்தின் தார்மிக உணர்வு கூடியவரை சிதைந்து போகாமல் இருக்க வேண்டுமென்ற விருப்பம் காரணமாக, அவற்றையெல்லாம்

அரசாங்கம் தோற்றுவித்து நடத்த வேண்டு மென்று அவர் விரும்பினர்.

காலனி ஆதிக்கமும் முதலாளித்துவமும் இணைபிரியாதவை என்ற பழைய கருத்தைச் சென்ற பத்தாண்டுகளின் நிகழ்ச்சிகள் பெரும் பாலும் பொருளற்றவையாக்கி விட்டன. ஆபிரிக் காவிலும், ஆசியாவிலும், சுதந்திரப் பேரார்வ வளர்ச்சியானது காலனி ஆதிக்க முறையை ஆழ்த்திவிட்டது. புதிய நிர்வாக ஏற்பாடுகளும் சட்ட வழிமுறைகளும் ஏற்பாடாகி வருகின்றன. காந்திஜி அஞ்சிய தவறுகள் திருந்துவதற்கு அவை துணைபுரிகின்றன. காந்திஜியிடமிருந்து தாம் பரம்பரை நிதியமாகப் பெற்ற தார்மிக நியதி களைப் புறக்கணிக்காமலேயே, சுறுசுறுப்புடன் தொழில் அபிவிருத்தி காண்பதற்கு இப்போது இந்தியாவால் முடிகின்றது.

எப்போதுமே இந்தியாவானது நீக்குப்போக் குடன் செயலாற்றும் மரபு கொண்டது. எனினும் அரசாங்கத்துறையும் தனியார்த் துறையும் ஒரு சேர, பிரத்தியட்ச உணர்வுடன், சமநிலைப் பொறுப் பில் வளர்ச்சி காண்கின்ற வகையில், இந்தியா வால் செயலாற்ற முடியும் என்று நம்புகிறேன். அரசாங்கம் திட்டமிடுவது, அத்தியாவசியமான பணிகளிலும், தொழில்களிலும் அரசாங்கமே விடுமுதல் செய்வது ஆகியவை அரசாங்கத் துறைப் பணிகள். தனியார்த் துறையானது வேகமாக வளர்ச்சி கண்டு வருகையிலேயே, சமூகத்தின்பால் தனக்குள்ள பொறுப்பைச் சரிவர

உணர்ந்து செயல்படுகின்றது. இரண்டுக்குமிடையே மேலே கூறியவாறு சமநிலை உறவு உருப்பெறும் என்றே நம்புகிறேன்.

இந்தச் சமநிலை உறவு கைகூடிச் செயல்படுவதற்கான பல வசதிகள் இந்தியாவுக்கு உண்டு. கடமை உணர்ச்சியுடன் பணியாற்றுகின்ற தலைவர்கள், திறமையுள்ள சிவில் சர்விஸ், அனுபவமும் தொழில் திறன்களும் துரிதமாக வளர்ச்சி கண்டு வருகின்ற நிலைமை—இவைதாம் அந்த வசதிகள். இவற்றைத் தவிர, வளர்ச்சி காண்கின்ற பிற தேசங்களைப் போல் அல்லாமல் இந்தியாவில் உள்நாட்டிலேயே கணிசமான தொகையைச் சேமிக்கின்றார்கள். அந்தத் தொகை இப்போது பயன்படாது உறக்கமுற்றிருக்கிறது. பல கிராமங்களில்கூட இந்தச் சேமிப்பு இருந்து வருகிறது. பஞ்சாபில் சேமிப்பை நிலத்தில் அல்லது பொன்னில் போடுவது வழக்கம். அதற்கு மாறாக, இளம் தலைமுறையினர் இரும்பில் போடுகிறார்களே (இயந்திரங்களில்) என்று பஞ்சாபில் ஒரு மூதாட்டி கவலையுடன் என்னிடம் தெரிவித்தாள். ஆனால் பேரப்பிள்ளைகளிடம் புதிதாகக் காணப்படுகின்ற இந்த உற்சாகம் வரவர அதிகமாக வளர்ச்சி காணும் என்று நம்புவோமாக.

நிலங்களையும், வீடுவாயில்களையும் விற்று வாங்குகின்ற ஹேஷ்ய லாபப் பணிகளில் ஈடுபடுகின்ற பணம் சேமிப்பில் பெரும்பகுதியே. இதை ஈர்த்து பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதிக லாபம் கிடைப்பதற்

கான வாய்ப்பையும், கவர்ச்சிகரமான வரிமுறைகளையும் இணைத்து, இதற்கு வழி செய்யலாம். நான் முன்னரே எடுத்துக்காட்டியபடி, உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணைபுரிகின்ற தொழில்களிலிருந்து கிடைக்கும் லாபத்தின்மீது ஒருவிதமான வரிவிதிக்கலாம். அத்தகைய பயனளிக்காத, அதிக உற்பத்திக்கு துணைபுரியாத தொழில்களின் மீது வேறு அடிப்படையில் வரிவிதிப்பு தேவை.

புதிய தொழில்களைத் தோற்றுவிக்கவும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருட்கள் கிடைக்கச் செய்யவும் அவசியமாக இருப்பது நல்ல லாபம் கிடைக்கும் என்ற எண்ணந்தான். அதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல், மக்களது திறமைகளும் சக்தியும் சேமிப்பும் இப்போது வீணாகிக் கொண்டிருக்கின்றன. சிறிய பட்டறைகளையும், பலவகைச் சேவைகளைப் புரிகின்ற ஸ்தாபனங்களையும் நிறுவுவதற்கு இருக்கும் விசேஷ வாய்ப்பைத்தான் நான் சுட்டிச் சொல்கிறேன். இவற்றில் உழைப்போரின் எண்ணிக்கை அரை டஜன் முதல் சில நூறு வரை இருக்கலாம். இந்தியாவுக்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற பொருட்களையும், வேலைவாய்ப்புக்களையும் அளிப்பதற்கு இவை பெரிதும் துணை புரிய வல்லவை. இவற்றிற்கு இன்னும் கொஞ்சம் அதிக ஊக்கம் அளித்தால் இந்தியாவின் தேசிய வளர்ச்சிக்கு வேண்டிய பேராற்றல் வாய்ந்த சக்தி வளர்ந்தோங்குவது சாத்தியமாகும்.

பிரிட்டன், ஸ்வீடன் போன்ற நாடுகள் சக்தி வாய்ந்த ஜனநாயக, சோஷலிஸ மரபு உள்ளவை. இவற்றில் அரசாங்கத் துறைக்கும், தனியார்த் துறைக்குமிடையே, பிரத்தியட்ச உணர்வுடன் கூடிய சமநிலை உறவை, நெடுநாளைக்கு முன்னரே ஏற்படுத்திவிட்டனர். தனியார்த் துறை விஷயத்தில் சித்தாந்தக் கண்ணோட்டத்துடன் கூடிய கவலை அகன்றுவிட்டதன் காரணமாக, அதற்கு எவ்வாறெல்லாம் ஊக்கம் அளிக்கலாம் என்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்கின்றனர். அதற்கு நல்வாய்ப்பு அளித்து, தேசிய லட்சியங்கள் நிறைவேறக்கூடிய வகையில் எவ்வாறு அவற்றை உருவாக்கலாம் என்பதையும் அங்கு தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் உள்ள வளர்ச்சி காண்கின்ற நாடுகள், வேகமாக முன்னேறி, வாழ்க்கை வளமுற வேண்டுமென அவசரப்படுகின்றன. அதே சமயத்தில் நீதி நெறி அடிப்படையில் அமைகின்ற எந்தச் சமுதாயத்திலும், தனிநபரின் கண்ணியமும் முழுவாய்ப்பும் போதிய மதிப்புப் பெற வேண்டுமென அவை உறுதி பூண்டுள்ளன. பிரிட்டனிலும், ஸ்வீடனிலும் நிர்ணயமாகி, நடந்து வருகின்ற சமநிலை உறவுமுறைதான் இந்நாடுகள் பின்பற்ற வேண்டிய வழி என்று நிரூபணமாகியுள்ளது.

# IV

# சீனுவும் இந்தியாவும்

தேசிய வளர்ச்சியைப்பற்றிய எந்த சர்ச்சையிலும் இந்தியாவையும், கம்யூனிஸ்ட் சீனுவையும் ஒப்பிட்டுப் பார்ப்பது தவிர்க்க முடியாதது. இவை இரண்டும் ராஜீய வகையில் முக்கியத்துவம் படைத்தவை. இரண்டின் தேவைகளும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவை. தவிர வளர்ச்சி காண்பதற்கான வழிமுறைகள் விஷயத்தில் இவ்விரண்டுக்குமிடையே விரிவான வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

இந்த இரண்டு தேசங்களிலுமாக மனித வர்க்கத்தில் ஐந்தில் இரண்டு பங்கினர் வசிக்கின்ருர்கள். இவற்றின் நிலப்பரப்பு உலக விஸ்தீர்ணத்தில் ஐந்தில் ஒரு பங்கு. இரண்டுமே அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தவை. ஓர் இந்திய சரித்திராசிரியர் எடுத்துக்காட்டியதுபோல, இந்தியாவுக்கு ஒரேயொரு காலனி ஆதிக்க

எஜமானன்தான் இருந்து வந்தான். ஆனால் சீனவை அநேகமாக எல்லோருமே சுரண்டி வந்தனர். இரண்டும் சமீபத்தில் சில காலம் புரட்சியை அனுபவித்தவை. இந்தியாவின் புரட்சியில் சீனவின் புரட்சியைவிட பலாத்கார அம்சம் குறைவு. அதனல் ஏற்பட்ட சீரழிவும் குறைவு தான்.

ஒப்புநோக்கிப் பார்க்கக்கூடிய பொருளாதார அடிப்படைகளை வைத்துக்கொண்டுதான் இந்தியாவும் சீனவும் தமது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டன. தமது தேவை, தாம் செய்து முடிக்கக்கூடியவற்றின் சாத்தியக்கூறுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்த்தால், இரண்டுமே போதிய வளர்ச்சி காணுதவை என்பது புலப்படும். மக்களில் 80 சதவிகிதத்தினர் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பிப் பிழைப்பவர்கள். 1947-ல் தேசிய வருமானம், சராசரி தனிநபர் அடிப்படையில் சீனவில் 45 டாலராகவும், இந்தியாவில் 52 டாலராகவும் இருந்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்தது 1947-ல். அதன் முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951-ல் தொடங்கியது. கம்யூனிஸ்ட் சீனவின் அரசாங்கம் சீன மண்மீது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது 1949-ல். அதன் முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1953-ல் ஆரம்பமாயிற்று. இரண்டு தேசங்களும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பூர்த்தி செய்துவிட்டன. இப்போது மூன்ருவது திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்த ஒருமைப்பாட்டு அம்சங்கள் குறிப்பிடத் தக்கவைதாம். ஆனால் பொதுவாகவுள்ள பிரச்சினைகளை இரண்டு நாடுகளும் அணுகுகின்ற வழிமுறைகள் விசேஷ வேறுபாடு உள்ளவை. மார்க்ஸிய சித்தாந்த ரீதியில் சீனா தனது திட்டங்களை உருவாக்கியது. ஜனநாயக அடிப்படையுடன் கூடிய க்ஷேமநல அரசாங்கத்தை உருவாக்குகின்ற நோக்கத்துடன், நீக்குப்போக்குடன் கூடிய நடைமுறைகளை இந்தியா கையாண்டது. தனது முதல் திட்டத்தில் இந்தியா விவசாயத்திற்கு முக்கியத்துவத்தை அளித்தது. சீனா தனது முதல் திட்டத்தில் கனரகத் தொழில்களின் வளர்ச்சிக்கு முதலிடம் தந்தது. இயந்திரத் தயாரிப்பு போன்ற தொழில்களை சீனா பிரதானமாக மதித்தது. கனரகத் தொழில்களுக்கும், மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களையும் சேவைகளையும் அளிக்கக்கூடிய தொழில்களுக்குமிடையே ஒரு சமநிலை காண்பதற்கு இந்தியா முயன்றது. அதிகப்படி உற்பத்திக்கு வேண்டிய ஊக்கம் இந்தச் சமநிலை வாய்ப்பின் மூலமாகத்தான் கிடைக்கும் என்று இந்தியா கருதியது.

ஆனால் தீவிரமான வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுவது ராஜீயத் துறையிலும், மக்களிடையே இருந்து வருகின்ற உறவுமுறை விஷயங்களிலுந்தான். ஜனநாயக ரீதியில் சர்ச்சைகள் நடைபெற்று, அவற்றில் மக்கள் பங்குபற்றச் செய்வதற்கு இந்தியா ஊக்கம் அளித்தது. ஆனால் எல்லா அம்சங்களிலும், வெகு நுட்பமான

கட்டுத்திட்டங்களுடன் கூடிய ஒரு சர்வாதி காரத்தைத் தோற்றுவிப்பதுதான் சீனவின் நோக்கம். அதற்கு முதற்படியாக சீனக் கம்யூ னிஸ்டுகள் ஜனநாயகக் கருப்பொருள் கொண்ட ஸ்தாபனங்களைக் களைந்துவிட்டனர். அவை அப் போதுதான் அந்நாட்டில் வேரூன்றத் தொடங்கி யிருந்தன.

வளர்ச்சிக்கான நடைமுறையில் தனிநபரின் கண்ணியத்திற்கு ஏற்றம் அளிக்க இந்தியா முயன்றது. ஆனல் அரசாங்கத்தின் ஒரு கருவியே தனிநபர் என்று மதித்தது சீன. இப்போது வாழ்கின்ற தலைமுறையினருக்கு அனுகூலம் கிடைக்க வேண்டுமென்ற கருத்துடன் இந்தியா பாடுபட்டது. ஆனல் தமது பேரக் குழந்தை களின் நன்மைக்காக இப்போதுள்ள தலைமுறை யினர், எவ்வளவு தூரம் சாத்தியமோ, அந்த அளவுக்குக் கசக்கிப் பிழிய வேண்டியவர்களே என்று கருதுகிறது சீன.

கலாசாரத் துறைகளிலும் வேறுபாடுகள் எடுப்பாக இருந்து வருகின்றன. தனது தொன்மையான பண்பாட்டை வளப்படுத்தி, பழுதுருது அதைக் கட்டிக் காக்கின்ற பணியில் இந்தியா ஈடுபட்டிருக்கிறது. தனது மரபுக்கு இசைவாக சமுதாயம் நவீன பண்பாடுகளைப் பெற வேண்டுமென அது உழைத்துவருகிறது. ஆனல் கம்யூனிஸ்ட் சீனவோ சம்பிரதாயமான சீனப் பண்பாட்டையும் ஸ்தாபனங்களையும் அடியோடு விலக்கிவிட்டு, முற்றிலும் புதிதான அந்நிய சமு

தாய அமைப்பு முறையைத் தோற்றுவிக்க பாடு பட்டு வருகிறது. வளர்ச்சிக்காக உழைக்கின்ற காலையில் சமுதாயச் சீரழிவு மிகமிகக் குறை வாகவே இருக்கும்படி பார்த்துக்கொள்வதில் இந்தியா அக்கறை காட்டுகிறது. ஆனல் அந்தச் சீரழிவு அதிகபட்சமாக இருக்கும்படி செய்யவே சீனு முயல்கிறது.

ஆரம்பத்திலிருந்தே சர்வதேச ராஜீயத் துறையில் தீவிரமான, கெடுபிடித்தன்மையுள்ள ஒரு சக்தியாகவே செல்வாக்குப் பெற வேண்டு மென்று உறுதிபூண்டு சீனு உழைத்து வந்திருக் கிறது.

அபிவிருத்தியைப்பற்றிய வழிமுறைகள், வரிசைக்கிரமங்கள் ஆகியவற்றில் உள்ள வேறு பாடுகளைக் கவனிக்காமல் இந்த இரண்டு தேசங் களையும் ஒப்புநோக்கிப் பார்ப்பது தவருன முடிவு களையே தரும். அபிவிருத்திக்கான நடைமுறை களின் எல்லா அம்சங்களையும் நீண்டகாலக் கண் ணேட்டத்துடன்கூடப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாட்டையும் அதற்கே உருவான தரங்களைக் கொண்டு மதிப்பிட வேண்டும். நமது தரங்களையும் வைத்துக்கொண்டு மதிப்பிடலாம். உலக சமுதாயத்தில் தனக்கு உறுதியான இடம் ஒன்றை அமைத்துக்கொள்ள ஒவ்வொரு தேசமும் முயன்று வருகிறது. எனவே அதன் சாதனைகளுக்கும் அந்த உலக சமுதாயத் திற்குமுள்ள உறவு முறையை வைத்துக் கொண்டும் மதிப்பிட முற்படலாம்.

## I

பலக்குறைவானதும், வளர்ச்சி குன்றியதும், பெரும்பாலும் விவசாயத்தையே நம்பிப் பிழைக்கின்றதுமான ஒரு சமுதாயத்தை, கூடியவரை துரிதமாக, சக்திவாய்ந்ததாகவும், தொழில் வளத்தை அடிப்படையாகக் கொண்டதும் சர்வாதிகாரத் தன்மை படைத்ததுமான ஒரு அரசாங்கமாக மாற்றுவது என்று உறுதி பூண்டு, அந்த அடிப்படையில் சீனக் கம்யூனிஸ்டுகள் தமது திட்டத்தை அமைத்தனர். இதுவே அதன் அடிப்படையான தனித்தன்மை.

இந்தப் பணியை நிறைவேற்றியே தீருவது என்று அவர்கள் தம்மை நெடுநாட்களாகவே கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். பல பத்தாண்டுகள் தீவிரமான புரட்சி வேலைகளில் ஈடுபட்டும், தமது நெடுந்தூரப் புரட்சி யாத்திரையை மேற்கொண்டும், தேசத்தின்மீது ஆதிக்கத்தை அடைவதற்கான இறுதியான போராட்டத்தில் ரத்தம் சிந்தியும், மாவும் அவரது வழியினரும், இதற்கென்றே தம்மைப் பணித்துக் கொண்டுள்ளனர். மார்க்ஸ், லெனின் தத்துவங்கள் அடிப்படையில் ராஜீயத் தன்மை வாய்ந்தவை, அவை பொருளாதாரத் தன்மை படைத்தவை அல்ல. இந்தத் தத்துவங்கள்தாம் அவர்கள் பின்பற்ற வேண்டிய வழியைச் சுட்டிக்காட்டும் கோட்பாடுகளாக அமைந்தன.

இந்தக் கண்ணேட்டத்துடன் கூட தமது

பணியை சீனத் தலைவர்கள் மதிப்பிட்டுச் செயலாற்றினர். பொருளாதார ஒப்பனை மட்டுமின்றி மனிதவர்க்கத்தின் ஒப்பனையும் ஒருசேர நடத்தி வைத்தாக வேண்டிய பணி என்று அவர்கள் கருதினர். அவர்கள் விரும்பியது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. புதியதும், அடிப்படையில் தீவிரமான மாறுதல்களுடன் கூடியதுமான சமுதாயத்தைத் தோற்றுவிக்கவே அவர்கள் விரும்பினர்.

சியாங் கே-ஷேக்கின் சைனியங்கள் தோல்வியுற்றதை அடுத்து சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தமது ஆதிக்கத்தை ஈவிரக்கமின்றி ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். உடனடியாகத் தென்பட்ட எதிர்ப்பையும், வருங்காலத்தில் எதிர்ப்பாக உருப்பெறக்கூடியவற்றையும் அகற்றி விட்டனர். பழைய கருத்துக்களின்பால் விசுவாசத்துடன் இருந்து வந்த கேந்திரங்களை அழித்துவிட்டு, ஒரே ஒரு நோக்குடன் அரசாங்கத்திற்குச் சேவை புரிவது என்று தம்மைத் திடப்படுத்திக்கொண்டு உழைக்கின்ற புதிய கேந்திரங்களைத் தோற்றுவித்து. இந்த நோக்கம் கைகூடச் செய்யலாமென அவர்கள் நம்பினர்.

கிராமப்பகுதிகளில் நிலச்சுவான்கள் அதிகாரம் படைத்தவர்களாக இருந்து வந்தனர். பதினாயிரக் கணக்கில் அவர்களைத் தூக்கு மேடைக்கு அனுப்பி, அந்த அதிகாரத்தைத் தகர்த்து எறிந்தனர் கம்யூனிஸ்ட் தலைமையினர். குடும்ப விசுவாசம் என்ற உணர்வுக்குக் குழிபறிப்ப

தற்காக மாபெரும் திட்டமொன்று உருவாகி நடந்தேறியது. தொன்மையான மத நம்பிக்கைகளை அழித்துவிடுவது அதன் நோக்கங்களில் ஒன்று. சீனுவின் வழிவழியான பண்பாடுகள் மதிப்பிழக்கச் செய்வது அத் திட்டத்தின் ஒரு பகுதி.

அதே சமயத்தில் மாவும் அவரது சகாக்களும் புதிய ஸ்தாபனங்களைத் தோற்றுவித்து, மத்திய பீடத்தில் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு முற்பட்டனர். அவர்கள், பழைய பழக்க வழக்கங்களில் மக்கள் கொண்டிருந்த பற்றுதலை நீக்கிவிட்டு அதற்குப் பதில், புதிய ராஜீய, பொருளாதார, நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தப் புதிய ஸ்தாபனங்கள்பால் மக்கள் மனதைத் திருப்ப அரும்பாடுபட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி, அதன் இளைஞர் ஸ்தாபனங்கள், ராணுவத்தின் தொண்டர் படைப் பிரிவுகள், எண்ணற்ற வெகுஜன ஸ்தாபனங்கள் முதலியவை தோன்றின. செய்திப் போக்குவரத்துக்குப் பயன்படும் எல்லாவகைச் சாதனங்களையும் இவை தம் வசப்படுத்திக் கொண்டன. இவ்வாருக சீன மக்கள் மீது விரிவான, வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் வியாபித்து நின்ற ஓர் ஆதிக்க முறை சீனக் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் கைக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து அரசாங்கம் இரண்டாவது கட்டப் பணியை மேற்கொண்டது. புதிதாக, ஸ்தாபன ரீதியில் கட்டுப்பட்ட மக்களின் சக்தியானது, எல்லாவற்றையும்விட அதிக முக்கியமான

பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளில் முழுக் கவனம் செலுத்தும்படி உழைப்பதுதான் அந்தப் பணி.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியா செய்த விடுமுதல் அதன் தேசிய வருமானத்தில் எந்த வீதாச்சாரமாக இருந்ததோ, அதைப் போல மும்மடங்கு வீதாச்சார வருமானத்தைத் தனது முதல் திட்டத்தில் சீனு விடுமுதல் செய்தது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இதன் காரணமாக 1955 வாக்கில் சீனுவில் பொருளாதார வளர்ச்சியின் சராசரி வீதாச்சாரம் இந்தியாவில் இருந்ததைவிட மும்மடங்காகக் காணப் பட்டதென்று அவர்களால் சொல்லிக்கொள்ள முடிந்தது.

சீன கம்யூனிஸ்டுகள் தரும் புள்ளிவிவரங்கள் தவறுகள் நிறைந்தவை என்பது உலகப் பிரசித்தம். எனினும், மிகப் பெரிய அளவில் விடுமுதல் செய்தார்கள் என்பதைப்பற்றி சந்தேகமே இல்லை. சிறிது காலத்திற்கேனும், தமது வாழ்க்கையை வளப்படுத்துகின்ற பொருட்கள் எதையும் காணுமலேயே, தனிநபர்கள் மிகமிகக் கடுமையாக உழைக்கக்கூடிய வகையில், சர்வாதிகார ஆதிக்க இயந்திரம் நிர்ப்பந்தித்து வேலை வாங்க முடிந்தது.

பெருமளவில் தொழில்கள் வளர்ச்சி காணப் போகின்றன. அவற்றைச் சரிவர நடத்தி வைப்பதற்கு ஏராளமான தொழில் நுட்பம் அறிந்தவர்களும், விஞ்ஞானிகளும் தேவைப்படுவர். எனவே, அவர்களைத் தயாரிப்பதற்கான அதிரடிக் கல்வித்

திட்டம் ஒன்றை நிறைவேற்றி வைப்பதில் சீனர்கள், பெருமளவில் விடுமுதல் செய்தனர். பள்ளிக் கூடக் கட்டிடங்களும், ஆசிரியப் பயிற்சியும் மிகப் பெரிய அளவில் விரிவு கண்டன. தனிநபர்கள் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் மிகமிகத் திறமையுடன் செயலாற்றுவதற்கான விசேஷப் பயிற்சி முறைகள் ஏற்பாடாயின. சுயமாகச் சிந்திப்பதற்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன், வேரூன்றி உருப்பெற்று வந்த தாராளக் கல்வி முறை, தீரமிக்க ஆரம்பநிலேயில் இருந்து வந்தது. அது வீணனது, அபாயகரமானது என்று நினைத்து, அதைக் கம்யூனிஸ்ட் அரசாங்கம் புறக்கணித்து விட்டது. எது உண்மை என்பது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்குத் தெரிந்தால் போதும் அல்லவா ? மற்றவர்கள் சிந்தித்துப் பார்ப்பதற்கு ஏன் சொல்லித் தர வேண்டும் ?

சீனவில் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னமேயே தொழில்கள் ஓரளவு சிறப்புடன் நடந்து வந்தன. அவற்றின் தகுதியை மீண்டும் பழைய நிலேக்குக் கொணர்ந்து, துரிதமாக விஸ்தரிப்பதில் சீனக் கம்யூனிஸ்டுகள் கவனம் செலுத்தினர். சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இதற்குத் துணைபுரிந்தன. 1945-ம் ஆண்டில் மஞ்சூரியாவிடமிருந்த தொழில் நிறுவனங்களே சோவியத் சைனியங்கள் பிரித்துக் கொண்டுபோய் விட்டன. அவற்றை ரஷ்யா மீண்டும் சீனவுக்குக் கொடுத்தது ; அல்லது புதிதாகக் கட்டிக் கொடுத்தது என்று சொல்லலாம்.

அவற்றுடன் ஏராளமான, விரிவான தொழிற் சாலைகள் நிறுவப்பெற்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய 1951-ம் ஆண்டில் 730 கோடி K. W. H. ஆக இருந்த மின்விசை உற்பத்தியானது 1960-ல் 5,500 கோடி K. W. H. ஆக உயர்ந்துவிட்ட தென்று அரசாங்கத்தின் புள்ளிவிவரங்கள் கூறு கின்றன. ஆனால் இந்தப் புள்ளிகள் நம்பக்கூடா தவை என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளன. உருக்கு, நிலக்கரி, மற்ற அடிப்படைத் தொழில்கள் விஷயத் திலும் அதேமாதிரி மிதமிஞ்சிய சாதனைக் கணக்கு கள் பிரசுரமாயின. எனினும், யாங்ட்ஸி நதி மீது பாலங்களைக் கட்டிவிட்டனர் என்பது உண்மையே. இதற்கு முன்னர் அதன்மீது பாலங்கள் அமைந் ததே கிடையாது. தொலைதூரம் செல்லக்கூடிய வர்த்தகக் கப்பல்களையும், கடற்படைக் கப்பல்களை யும் சீனக் கப்பல் நிலையங்கள் கட்டலாயின. ரயில் பாதைகள் கணிசமாக அதிகரித்தன.

பல புள்ளிவிவரங்கள் மிகையானவையாக இருக்கலாம். ஆனால், ஈவிரக்கமின்றி மக்களையும் பொருளாதாரச் சாதனங்களையும் அதிகபட்சத் திறமையுடன் பயன்படுத்தியதன் காரணமாக, தொழில் வளர்ச்சி 1955-க்குள் நிச்சயமாகக் கை கூடியது என்பதைப்பற்றிச் சந்தேகமேயில்லை. அடிப்படைத் தொழில்களும், விசை உற்பத்தியுந் தான் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய ஆரம்ப வசதிகள். அவற்றைத் தோற்றுவிப்பதுதான் மிகக் கடினமான தொழில்-அபிவிருத்திச் சாதனை

யென்று சொல்லலாம். ஆனல், இந்தக் கட்டத்தைச் சீனர் சமாளித்து விட்டார்கள் என்றுதான் ஏற்படுகிறது.

இதற்கிடையே சீனவில் ஜனத்தொகை இரண்டு முதல் மூன்று சதவீதத்தில் ஒவ்வோர் ஆண்டும் வளர்ச்சி கண்டு வந்தது. சந்தர்ப்பச் சூழ்நிலைகள் எவ்வாறிருந்தபோதிலும், ஜனத்தொகை மிகுதியாக இருப்பது பொருளாதார வலிமைக்கு மூலபலம் என்று மார்க்ஸீயவாதிகளில் பெரும்பாலோர் கருதுகின்றனர். ஆனல் தடையற்ற ஜனத்தொகை வளர்ச்சியினல் ஏற்படக்கூடிய அபாயங்கள் 1955 வேனிற்காலத்திற்குள் வெளிப்படையாகப் புலப்படலாயின. எனவே அவசர அவசரமாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கி, ஒலி பெருக்கிகள் மூலம் பிரசாரம் செய்ய முற்பட்டனர்.

ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்குச் செய்த முயற்சி நீடித்து நடைபெறவில்லை. 1958-ல் வசந்த காலத்தில் திடீரென இதை நிறுத்திவிட்டனர். பிற அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, 'பெரிய முன்னேற்றப் பாய்ச்சல்' என்ற வேலைத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் முழுக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. இந்தத் திட்டத்தின் பகுதியாக மேற்கொண்ட மாபெரும் பணிகள் நிறைவேறுவதன் காரணமாக, விரைவில் ஜனத்தொகைக் கட்டுப்பாடு அனவசியமாகி விடும், வேலை செய்வதற்குப் போதிய தொழிலாளர் பற்றுக்குறை

யான நிலைமை வந்துவிடக் கூடுமென்று கருதப்பட்டது. தமது வீட்டுப் புழக்கடைகளில் ஊதுலைகளை அமைத்து உருக்குத் தயாரிக்கும் பணியில் ஆறு கோடி பேரை ஈடுபடுத்துவதென்று முடிவாயிற்று. நீர்ப்பாசன வேலைகளில் 10 கோடி பேரைப் பயன் படுத்துவது என்று திட்டமிட்டார்கள்.

இவ்வளவு விரிவான அடிப்படையில் திட்டமிட்டு, நடைமுறைப் பணிகளை உருவாக்கி, உழைக்கிறார்கள் என்று நடந்த பிரசாரம் ஆசியா வெங்கும் ராஜீய வகையில் எதிரொலித்தது. சீனர்களுக்கு இதன் விளைவாக விசேஷத் தெம்பு ஏற்பட்டு விட்டது. தமது அபிவிருத்தியை நேரில் கண்டறிந்து, தமது முறைகளைக் கையாளும்படி வற்புறுத்துவதற்காக, வளர்ச்சி கண்டு வருகின்ற பல நாடுகளின் பிரதிநிதிகளை சீனாவுக்கு அவர்கள் அழைத்தனர்.

கம்யூனிஸ்ட் சீனாவில் இவ்வளவு பரபரப்பான அபிவிருத்தி ஏற்பட்டு வந்த நிலவரம் மக்களைப் பெரிதும் ஈர்த்திருந்ததை இந்தியாவுக்கு 1955-ல் சென்றபோது நான் உணர்ந்து அறிந்தேன். சுதந்திர அடிப்படையில் சமுதாயம் வளர்ச்சி காண வேண்டு மென்பதில் தீவிரமான ஆர்வமும் நம்பிக்கையும் படைத்தவர்கள்கூட, "ஜனநாயக நடைமுறைகளின் மூலம் அத்தியாவசியமான பொருளாதார லட்சியங்களை அடைவதற்கு வளர்ச்சிகண்டு வருகின்ற நாடுகளால் முடியுமா? அதற்கான தகுதி அவற்றிற்கு உண்டா?" என்று கேட்கத் தொடங்கினர்.

ஆனல் 1960-க்குச் சமீபமாக வசதிகள் எல்லாம் காலியாகி, சீனத் திட்டங்கள் வேகமாக சிரம நிலையை அடைந்துவிட்டன. பெரிய முன்னேற்றப் பாய்ச்சல் திட்டம் பிசுபிசுத்தது. 1960-ம் ஆண்டில் சோவியத் உதவியின் அளவு குறையலாயிற்று. சீனப் பொருளாதாரம் கீழ்நிலையை நோக்கி சரிந்துகொண்டிருக்கும் போக்கு வலுத்தது. சோவியத் யூனியன் துரோகம் இழைத்துவிட்டதாகவும், 343 ஒப்பந்தங்களைக் கிழித்தெறிந்து, அவற்றின் துணைப் பகுதிகளாகவிருந்த உதவித் திட்டங்களையும் கைவிட்டது என்றும் "பீகிங் பீபிள்ஸ் டெய்லி" கூறியது. அதையடுத்து, சாதனங்களின் சப்ளையை மிகப் பெரிய அளவில் ரஷ்யர் குறைத்து விட்டதாகவும் அது புகார் செய்தது.

அதற்கப்புறம் பொருளாதாரச் சாதனைகளைப் பற்றிய புள்ளி விவரங்களை பீகிங் வெளியிடவில்லை. 1957-க்கும் 1960-க்குமிடையே தொழில் துறையில் மட்டும் அடைந்த லாபங்கள் பின்னர் பெரும்பாலும் நஷ்டமாகிவிட்டதாகவே தோன்றுகிறது. 1960-ல் 5,600 கோடி K. W. H. ஆக இருந்த மின்விசை உற்பத்தி 3,000 அல்லது 3,500 கோடி K. W. H. ஆகக் குறைந்து விட்டது. 1960-ல் 180 லட்சம் டன்னக இருந்துவந்த உருக்கு உற்பத்தி 1962-ல் 80 லட்சம் டன்னகச் சுருங்கி விட்டது. நிலக்கரி, சிமிட்டி, மற்றத் தொழில் துறைப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

சாதனங்களும், தொழில் துறை நிபுணர்களின் சேவையும் இல்லாத காரணத்தால், பல ரயில் பாதை அமைப்பு வேலைகளும் அணைகளின் கட்டுமானப் பணிகளும் நடுவில் நின்றுவிட்டுள்ளன. ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன, அல்லது பகுதிநேர வேலையே செய்கின்றன. இதற்குக் காரணம் மூலப் பொருட்கள் பற்றுக்குறையாக இருந்து வருவதும், தேவைப்படும் தனி உறுப்புகள் கிடைக்காமையுந்தான். உலக நாடுகளில் சீனா ஒன்றில்தான் பொருள் உற்பத்தியின் மொத்த அளவு குறைந்துவிட்டிருப்பதைக் காணலாம்.

## II

"பெரிய முன்னேற்றப் பாய்ச்சல்" திட்டம் தொழில் துறையில் தோல்வியுற்றது போலவே விவசாயத்திலும் பயனற்றுப் போய்விட்டது. கம்யூனிஸ்ட் நாடுகளின் காலைத் தட்டிவிடுவது எப்போதுமே விவசாயத் துறைதான். 1952-க்கும் 1960-க்குமிடையே வருஷம் 120 லட்சம் முதல் 150 லட்சம் வரையில் சீனாவின் ஜனத்தொகை வளர்ந்துகொண்டே வந்தது. ஆனால் உணவு தானிய உற்பத்தி ஏறக்குறைய தேக்கமுற்ற நிலையிலேயே காணப்பட்டது. 1958-ல் உபயோகித்த சராசரி உணவு தானிய அடிப்படைக் கணக்கை வைத்துக்கொண்டு பார்த்தால், 1962-ல் பற்றுக்குறை 150 லட்சம் டன்னாக உயர்ந்து

விட்டது. இப்போதைய வேகத்தில் ஜனத் தொகை கூடுதலாகிக் கொண்டே போனல், ஒவ் வொரு வருஷமும் உணவு தானியப் பற்ருக்குறை 50 லட்சம் டன் அதிகரித்துக் கொண்டுதான் செல்லும். நல்ல மகசூல் கிடைக்கும் ஆண்டில் கூட, அந்த விளைச்சலானது, மக்களுக்கு வேண்டிய உணவு அவ்வருஷம் கிடைப்பதற்குத் தான் போதுமானதாக இருக்கும் என்ற கடுமை யான உண்மையை இந்தப் புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்றன. சாதாரண விளைச்சலுள்ள வருஷத்திலேயே பற்ருக்குறை நிலை கடினமாகத் தான் இருக்கும். மோசமான ஆண்டில் போஷாக் கின்மை பரவலாகக் காணப்பெறும்.

நிலைமை திருந்துவதற்கான நல்வாய்ப்புக்கள் இப்போதைய அரசாங்கத்திற்குக் கிட்டுமெனத் தோன்றவில்லை. சீனவின் மொத்த நிலப்பரப்பில் 14 சதவீதத்தில்தான் இப்போது சாகுபடி நடக் கிறது. ஆனல் விளைநிலம் விரிவு காண்பதன் சாத்தியக் கூறுகள் அதிகம் இல்லை. பல தலை முறைகளாகவே சீனக் குடியானவர்கள் சாகுபடி விஸ்தீர்ணத்தை அதிகப்படுத்துவதற்கு முயன்று வந்துள்ளனர். ஆனல் இம்முயற்சியில் கிட்டிய வெற்றி குறிப்பிடத்தக்கதாக இல்லை. மிகச் சாதகமான நிலவரத்திலுங்கூட இப்போதுள்ள விளைநிலத்தின் விஸ்தீர்ணத்தை 20 சத வீதத் திற்கும் மேல் அதிகப்படுத்த முடியாது. அதிகப் படியாக சாகுபடி செய்யும் நிலங்களில் பெரும்பா லானவை தரக் குறைவுள்ளவை. எனவே கூடுத

லாகக் கிடைக்கும் விளைச்சலின் சராசரி, பிற நிலங்களில் கிடைப்பதைவிட இவற்றில் குறைவாகத்தான் இருக்கும். இப்போதுள்ள விளை நிலங்களிலேயே இன்னும் தீவிரமாகச் சாகுபடி செய்வதன் மூலம் மிகப் பெரிய வெற்றிகளை எதிர்பார்க்கக்கூடிய நிலைமையில் சீனு இல்லை. உலகிலேயே மிகச் சிறந்த விவசாயிகளிடையே சீனக் குடியானவர்களையும் சேர்க்கத்தான் வேண்டும். ஆசியாவில் சீனுவைவிட அதிகமாக விளைச்சல் காண்கின்றவை ஜப்பானும் தாய்லாந்தும்தான். இவ்விரண்டு நாடுகளிலும் விவசாயிகள் தாமே முன்வந்து பெரு முயற்சி செய்து பாடுபடுகின்றனர். அவற்றுடன்கூட ரசாயன உரங்களை அங்கு அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். உரங்களின் உபயோகம் அடிப்படையானது. எனவே, அதைச் சற்று விவரமாக ஆராய்வது பயனுள்ளதாய் இருக்கும்.

சீனுவில் இப்போது ஆண்டுதோறும் 30 லட்சம் டன் ரசாயன உரம் தயாராகின்றது. அனுகூலமான சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் உர உற்பத்தி அதிரடி வேகத்தில் நடைபெறுவதாக வைத்துக் கொண்டாலுங்கூட, அதன்மூலம் அடுத்த 6 முதல் 10 ஆண்டுகளில் 50 லட்சம் டன் தானியம் கூடுதலாக விளையலாம். இதற்கு ஆகின்ற செலவு 60 கோடி டாலராக இருக்கும். இவ்வளவு பெரு முயற்சியில் ஈடுபடுவதற்கு வேண்டிய தொழில் நுட்ப நிபுணர்களும், மின்சார வசதியும், பிற சாதனங்களும் கிடைப்பதாக இருந்தாலுங்கூட,

இவ்வளவு பெரிய அளவில் ஒருவகைத் தொழிலை உருவாக்கி நடத்துவதாயின் அத்தியாவசியமான பிற பணிகளைப் புறக்கணிக்கத்தான் வேண்டியிருக்கும். தவிர லட்சியம் பூராவாக கைகூடினாலுங்கூட, சீனவின் எதிர்கால விவசாயத் தேவைகளுக்கு அது போதுமானதாக இருக்குமெனத் தோன்றவில்லை.

ஒரு ராத்தல் ரசாயன உறத்தை உபயோகித்தால் மூன்று ராத்தல் அதிகப்படி உணவு கிடைக்கும். 50 லட்சம் டன் உரத்தைப் பயன்படுத்தினால் 150 லட்சம் டன் அதிகப்படி உணவு கிடைக்கும். அதைக்கொண்டு, இப்போதைய பற்றாக்குறை அளவின் அடிப்படையில், 4½ கோடி பேருக்கு உணவளிக்க முடியும். புதிய ரசாயன உரத் தொழிற்சாலைகளைக் கட்டி முடிப்பது 1970-க்கு முன் சாத்தியமல்ல. ஆனால் அதற்குள்ளாக ஜனத்தொகை வளர்ச்சியின் காரணமாக. இன்னும் 10 கோடி பேருக்கு உணவு அளித்தாக வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படும். ஜனத்தொகை விஸ்தரிப்பு இப்போதைய வீதாச்சாரத்தில் இருக்குமென்ற அடிப்படையில் இதைக் கணக்கிட்டுச் சொல்லுகிறோம்.

சீனவின் விவசாய வரவுசெலவுக் கணக்கில் ஆதாய வகையில் சேரக்கூடிய அம்சங்கள் பல இருக்கின்றன. அதிகப்படி விளை நிலம் சாகுபடிக்கு வரலாம். அதனால் ஓரளவு நன்மையும் விளையக்கூடும். பாசன வசதிகள் விரிவு காணலாம். அதன் விளைவாக பல பிரதேசங்களில் மற்றொரு

போகம் சாகுபடி நடைபெறலாம், விளைச்சல் கூடுத லாகலாம். வித்துக்களை அபிவிருத்தி செய்து உபயோகிக்கலாம். உறுதியாக முயன்று பாடு பட்டு ஜனத்தொகையின் நிர்ப்பந்தத்தை படிப் படியாகக் குறைக்கக்கூடும்.

எனவே நிலவரம் மிக அனுகூலமாயிருப்ப தாக ஏற்பட்டாலும், இப்போது தன் எல்லைக்குள் இருக்கின்ற விளைநிலத்தை மட்டும் வைத்துக் கொண்டு, போதிய உணவு தானியங்களை விளை விக்க சீன சர்க்காரால் முடியுமெனத் தோன்ற வில்லை. இந்த மதிப்பீடு சரியானதாக இருக்கும் பட்சத்தில், நமது காலத்தில், மிகமிகப் பொருள் படைத்தனவாக இருக்கக்கூடிய ராஜீய உண்மை களில் மிக முக்கியமானதாகவே இதைக் கருத வேண்டும்.

## III

தொழில் துறையில் பல அம்சங்களில் தோல்வி கிட்டியது ஏன்? விவசாயத் துறையில் வெற்றி காணாதது ஏன்? பேராசையுடன்கூட, சக்தியை மீறிய அளவில் மக்களை நிர்ப்பந்தம் செய்து, இப் பணிகளில் ஈடுபடுத்திய, முயற்சிகளில் இருந்த குறைபாடுகள்தான் இதற்குக் காரணம். 1960-ம் ஆண்டு வாக்கில் இக்குறைபாடுகளைக் கண்டோம். சீன மக்கள் மீது முழு ராஜீய ஆதிக்கத்தை உறுதி செய்துகொள்கின்ற முயற்சியில் பல நிர்ப்பந்த நடவடிக்கைகளை கம்யூனிஸ்ட் தலை வர்கள் மேற்கொண்டனர். நீண்டகாலம் உள்

நாட்டு யுத்தம் நிகழ்ந்துகொண்டிருந்தபோது பொதுஜன ஆதரவை வெற்றிகரமாகத் திரட்டுவதற்கு அவர்களால் முடிந்தது. ஆனல் இப்போதைய நிர்ப்பந்த நடவடிக்கைகள் அந்த ஆதரவுக்குக் குழிபறிக்கலாயின.

சீன மக்கள் சண்டை போட்டுப் போட்டு அலுத்துவிட்டனர். பன்னெடுங் காலத்திற்குப் பிறகு, முதல் தடவையாக, சீன ஒரு அரசாங்க அமைப்பின்கீழ் ஒன்றுபட்டுள்ள நிலைமையை அவர்கள் கண்டனர். எனவே புதிய அரசாங்கம் நல்லபடி உழைத்து வெற்றி காண்பதற்கான அனைத்தையும் செய்து கொடுப்பதற்கு அவர்கள் ஆவலுள்ளவர்களாகவும், தாமே முன்வந்து பாடுபடுகிறவர்களாகவும் காணப்பட்டனர். புரட்சி மாபெரும் அளவில் வெற்றி கண்டபோது இதுதான் அங்கு இருந்து வந்த நிலவரம் என்று நிச்சயமாகக் கூறலாம்.

விளைநிலங்களை மிகப் பெரிய அளவில் விவசாயிகளிடையே புதிய அரசாங்கம் வினியோகிக்கமுற்பட்டகாலையில், ஆரம்பநிலையில், பொதுஜன ஆதரவு மேலும் மேலும் வலுத்துக்கொண்டு வந்ததாகவே தோன்றியது. ஆனல் அதனல் ஏற்பட்ட களேபரம் சற்று அடங்கியபிறகு உண்மை நிலை தெளிவுபட்டது. தனக்குக் கிடைத்த விளைநிலத்தின் விஸ்தீர்ணம் சராசரி ஒரு ஏக்கருக்கும் குறைவு என்பதை சீன விவசாயி கண்டு கொண்டான். குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு அது போதுமானதாக இருக்கவில்லை.

"உழுபவனுக்கே நிலம்" என்ற புரட்சிகரமான வாக்குறுதி, திட்டமிட்டு நடத்தி வைக்கின்ற பித்தலாட்டம் என்று சில நோக்கர்கள் நம்புகின்றனர். நிலம் சொந்தமாக இருப்பதன் காரணமாக விவசாயக் குடும்பங்கள் பெருமையும் அந்தஸ்தும் நிம்மதி உணர்வும் பெறுகின்றன. அத்தகைய 10 கோடி விவசாயக் குடும்பங்கள் சுதந்திர அந்தஸ்துடன் உழைத்து வருகின்ற நிலைமையை மதித்துச் செயலாற்றும் உத்தேசம் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு எக்காலத்திலும் இருந்ததில்லை. ராஜீய நலன்கள் கிட்டுமென வாக்களித்துத்தான், பத்து லட்சக்கணக்கில் இளம் சீன விவசாயிகளை உற்சாகப்படுத்தி, செஞ்சேனைகளில் தாமே முன் வந்து பணியாற்றுவதற்கு வரும்படி சீனத் தலைவர்களால் செய்ய முடிந்தது. ஆனால் விரைவில் அந்த வாக்குறுதியை மாவும் அவரது சகாக்களும், ஸ்டாலினது மரபைப் பின்பற்றி, காற்றுவாக்கில் விட்டுவிட்டனர். இம்மாதிரி வாக்கு மீறியதற்கு, பிரத்தியட்ச உண்மைகளுக்குப் போதிய மதிப்பை அரசாங்கம் தர முடியாது போனது காரணமா, அல்லது முதலில் வாக்களித்துவிட்டு, பிறகு அதை மீறிவிடுவது என்று ஆரம்பத்திலேயே திட்டமிட்டு அப்படிச் செய்தார்களா என்று தெரியவில்லை. முழு ஆதிக்கச் சூழ்நிலையில், எல்லா வசதிகளையும் பயன்படுத்துகின்ற புதிய வேலைத் திட்டம் செயலாற்றத் தொடங்கியவுடனேயே, சீனாவின் கிராமப் பகுதிகளில் அரசாங்கத்தின் மவுசு துரிதமாகக் குறையலாயிற்று.

ஒருவருக்கொருவர் பரஸ்பர அடிப்படையில் உதவி செய்து கொள்கின்ற சிறு குழாம்களை லட்சக்கணக்கில் முதல் கட்டத்தில் நிறுவினுர்கள். தமக்குச் சொந்தமாக இருந்து வந்த கால்நடைகளையும், சாதனங்களையும் நேர்ந்து நிரவிக் கொண்டு சாகுபடி, அறுவடை முதலிய பணிகளை மக்கள் செய்து வந்தனர். இரண்டாவது கட்டத்தில் விவசாய உற்பத்தியாளர்க் கூட்டுறவுகள் தோன்றின. நிரந்தர அடிப்படையில் விளைநிலங்களை இணைத்து, மொத்தமாகச் சாகுபடி செய்வதற்கு அவை பயன்பட்டன. ஒவ்வொரு நிலக்காரனுக்கும் பங்குகளை வழங்கினுர்கள். கூட்டுறவிடம் அவன் முதலில் ஒப்படைத்த நிலத்தின் அளவுக்கேற்ப ஆண்டுதோறும் டிவிடெண்டு கிடைக்கும் என்று உறுதி கூறினுர்கள்.

மூன்ருவது கட்டம் 1955-ல் கூட்டுப்பண்ணைகளின் நிறுவனமாக அமைந்தது. நிலம் தனது சொந்த உடைமையாக இருந்து வர வேண்டுமென்பது சீன விவசாயியின் சம்பிரதாயமான கனவு. அத்தகைய உடைமை, எவ்வித அடையாளமும் இல்லாமல், அடியோடு அகற்றப்பட்டு விட்டது. நிலங்களின் பரப்பின்மீது டிவிடெண்டு தரும் முறை ரத்தாயிற்று. கூட்டுறவு சம்பாதித்த லாபத்தொகை, ஒவ்வொரு குடியானவனும் எந்த அளவு வேலை செய்தான் என்ற அடிப்படையில் வினியோகிக்கப்பட்டது. “ஒவ்வொருவனுக்கும் உழைப்புக்கேற்ற ஊதியம்” என்ற மார்க்ஸ்-லெனின் கோஷம் மீண்டும் உயிர்ப்பிக்

கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு நியாயம் கூறும் சித்தாந்த விளக்கமாகவே அது பயன் பட்டது.

கூட்டு வாழ்க்கையின் வெற்றிக்கு இறுதிச் சாதனமாக மதிக்கப்பெறும் 'கம்யூன் முறை' 1958-ல் அமலுக்கு வந்தது. முதல் கம்யூன் ஹு்னன் மாகாணத்தில் ஏற்பாடாயிற்று. கம்யூன் என்பது நிர்ப்பந்த ரீதியில் மக்களை இணைத்து வேலை வாங்குகின்ற கூட்டுறவு அமைப்பு. ஒவ் வொரு கம்யூனிலும் சராசரி சுமார் 50 ஆயிரம் பேர் இணைந்து இருப்பர். 'மாபெரும் முன் னேற்றப் பாய்ச்சல்' வெற்றிகரமாவதற்கு வேண்டிய விவசாயச் சாதனங்களாகவே இந்த கம்யூன்கள் பயன்பட வேண்டுமெனத் திட்ட மிட்டனர். கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற 55 கோடி சீன மக்களை மத்திய அரசாங்கத்தின் நிர்த் தாட்சண்யமான ஆதிக்கத்தின்கீழ் கொணர்ந்து, மாபெரும் அளவில் அவர்களுடைய ஆள்பலத்தை திரட்டி, நிர்ப்பந்தமாகப் பயன்படுத்திக்கொள்வதே இதன் நோக்கம்.

புதிய நிலைமையைச் சமாளிப்பதற்கேற்றவாறு வேறொரு கோஷம் விரைவில் எங்கும் ஒலித்தது. "ஒவ்வொருவனிடமிருந்தும் அவனது திறமைக் கேற்ப, ஒவ்வொருவனுக்கும் அவனது தேவைக் கேற்ப" என்பதுதான் அந்தக் கோஷம். புதிய கம்யூன்களைச் சிலாகித்துப் புகழ்ந்த ஒரு பேட்டி யாளர் பீகிங்கில் கூறினார்: "ஏ கம்யூனே! என் னிடமுள்ள அனைத்தும் உனது; ஆனால் எனது பல்

தேய்க்கும் பிரஷ் மட்டுமே இதற்கு விலக்கானது!''

ஆள்பலத்தைத் திரட்டி, தமது பரீட்சைகளில் ஈடுபடுத்துவதற்கு கம்யூன்களை மா சே-துங் தோற்றுவித்ததுதான் இறுதியில் பேராபத்தாக முடிந்தது. தமக்கென ஒரு தனி மனம் இல்லாமல், சிந்தனையின்றி, தமது சக்தியை செயலில் ஈடுபடுத்துகின்ற ஒரு பிரம்மாண்டமான ஆள்பலத் தேக்கம் மத்திய அரசாங்கத்திற்கு இதன்மூலம் உறுதியாகக் கிடைத்துக் கொண்டே இருக்கும், அதை வைத்துக்கொண்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடத்தி வைக்கலாம், உணவு உற்பத்தியையும் அதிகரித்துக்கொள்ளலாம் என்று அவர் முதலில் நினைத்திருந்தார்.

பள்ளி மாணவர்கள் திடும்பிரவேசமாக விவசாய மேற்பார்வையாளர்களாக மாறினர். குடியானவர்கள் அணைகளைக் கட்டும் பணியாளராகச் செயலாற்றினர். குடும்பப் பணிகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் ஊதுலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளாகச் செயல்பட்டனர். மனிதவர்க்கத்தின் வரலாற்றிலேயே, இவ்வளவு பெரிய அளவில் மக்களின் பணி முறைகள் நிலை குலைக்கப்பட்டதில்லை. இதன் விளைவாக, தேசமெங்கும் ஆசாபங்கம் பரவலாயிற்று. சீனப் பொருளாதாரம் ஏறக்குறைய அடியோடு குமுங்கிவிட்டது.

## IV

கம்யூனிஸ்ட் சீனவின் பொருளாதாரத் தவறுகளால் பெருநாசம் ஏற்பட்டது. எனினும் அவற்

றின் ராஜீய எதிரொலிகள் இன்னும் அதிகமான சிரமத்தை விளைவிக்கக்கூடும். மக்களின் விருப்பத்தை அரசாங்கம் முற்றிலும் புறக்கணித்தது. சீனப் பண்பாட்டின் பழைய அடிப்படையையே அழிப்பதற்கு அது முற்பட்டது. இவற்றின் காரணமாக மக்களிடையே இருந்து அரசாங்கம் பிரிந்துவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியில் மெம்பர்களாக இல்லாத மக்களைப் 'பாமர மக்கள்' என்று அக் கட்சியின் வெளியீடுகளில் குறிப்பிடுகின்றார்கள். அந்தப் பாமர மக்கள் கட்சி மெம்பர்களை 'அவர்கள்' என்று பிரஸ்தாபிக்கிறார்கள். "ஒரு நல்ல கம்யூனிஸ்டாக இருப்பது எப்படி?" என்ற தலைப்பில் ஒரு வெளியீடு வந்திருக்கிறது. வழி வழியாக மார்க்ஸீய தத்துவத்தின் முதுகெலும்பு என்று மதிக்கப்பெற்றுவரும் பாட்டாளி மக்களை, உழைப்பாளரைக்கூட, சந்தேகக் கண்ணுடன் தான் பார்த்து வரவேண்டுமென்று கட்சி மெம்பர்களை அப்பிரசுரம் எச்சரிக்கிறது.

குறுகிய சுயநல காரியங்களுக்காக மக்களை, தமது விருப்பத்திற்கேற்ப, இப்படியும் அப்படியுமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு முயலும் நவீன சர்வாதிகாரிகள், இந்தப் பழைய படிப்பினையை மீண்டும் மீண்டும் தாமாகவே அனுபவபூர்வமாகத் தெரிந்துகொண்டுதான் ஆகவேண்டும் போலிருக்கிறது. தமது நலன்களும் ஆள்கின்றவர்களது நலன்களும் ஒன்றுதான் என்று மக்கள் கருதி, இசைவுடன் உழைக்கத் தவறுகின்ற நிலவரத்தில்,

ஒவ்வொரு கோஷ்டியும் மற்றொரு கோஷ்டியைக் கண்டு பயப்படுகின்ற நிலைமையில், அரசாங்கத்தின் ராஜீய ஸ்திரத் தன்மையானது பலவீனப்பட்டுப் போய், இறுதியாக அழிக்கப்பட்டு விடும். பொருளாதார அபிவிருத்தியானது ராஜீய ஸ்திரத் தன்மையைத்தான் பெரிதும் பொறுத்திருக்கிறது.

விவசாய நெருக்கடியானது தொழில் வளர்ச்சியின் மந்த நிலையை மேலும் மேலும் பாதித்தது. விளைபொருட்களின் உற்பத்தி குறைந்த அளவில் இருந்ததன் காரணமாக, அரிதாக இருந்து வந்த விடுமுதலையும் அந்நியச் செலாவணியையும் வேறு காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஒவ்வொரு ஆண்டும் 45 கோடி டாலர், 50 கோடி டாலர் வரை மதிப்புள்ள தானியங்களை ஆஸ்திரேலியாவிலிருந்தும், கானடாவிலிருந்தும் இறக்குமதி செய்வதற்காக இவை பயன் படுத்தப்பட்டன. தவிர தொழில்களுக்கு வேண்டிய விளை பொருட்களைப் பயிராக்கி வந்த நிலங்களை உணவுத் தானிய உற்பத்திக்காகத் திருப்பிவிட வேண்டியதாயிற்று. இதன் காரணமாக பருத்தி போன்ற விவசாயக் கச்சாப் பொருட்களை நம்பியிருந்த பல தொழிற்சாலைகளை மூடிவிட நேரிட்டது. பெரிய தொகைகளைச் செலவு செய்து வாங்கிய சாதனங்கள் உறக்கமுற்றன. தொழில் திறம்படைத்த ஊழியர்கள் சும்மாயிருக்க நேரிட்டது. ஏற்றுமதிகள் குறையலாயின.

சீன போன்ற மிகப் பெரிய நாட்டில், தலைவர்கள் ஒரு சிறிய தவறை இழைத்தாலுங்கூட,

அது 70 கோடி மக்களைப் பாதிக்கின்றது என்ற காரணத்தால், தேசத்துக்கே பெரு நாசம் விளைகின்றது என்பதை அண்மையில் ஒரு சீனத் தலைவர் ஒப்புக்கொண்டார். கம்யூனிஸ்ட் சீனுவின் தவறுகள் சிறியவை என்று கூறுவது பொருந்தாது. எனவே இந்தத் தலைவரின் கருத்துரையை வைத்துக்கொண்டு பார்த்தால், பெரிய முன்னேற்றப் பாய்ச்சலுக்கு, உரித்தானதோர் சமாதியைக் கட்டிவிட்டதாகத்தான் ஏற்படும்.

V

சீனுவின் இந்தச் சங்கடங்களைக் கருத்திற்கொண்டு இந்தியாவின் பிரச்சினைகளையும் இங்குள்ள சாத்தியக்கூறுகளையும் பரிசீலிக்கலாம். சீன நிலவரத்திலிருந்து தீவிரமாக மாறுபட்டிருப்பது இந்தியப் பொருளாதார, சமூக, ராஜீய சூழ்நிலை.

சேர்ந்து உழைப்பதன் நன்மைகளை எந்த ஜனநாயக நாட்டிலும் மக்கள் தாமே கண்டறியச் செய்தாக வேண்டும். இதற்கு அவகாசமாகும் என்ற உண்மை சரிவரப் புரிந்துகொள்ளப்படுவதில்லை.

தவருன கோஷங்கள் எழுந்தால், சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைகள் அவற்றின் தன்மையை விரைவில் அம்பலப்படுத்திவிடும். எனவே, நிலையான பயன் அவற்ருல் ஏற்பட முடியாது. பெரு முயற்சிகளில் ஈடுபட்டால் கைக்கு மெய்யான நன்மைகள் கிடைக்கும் என்பதை விவசாயிகள், தொழிலாளர், நிர்வாகிகள் ஆகியோர் தெளிந்

தறியச் செய்வது அவசியம். அதிகப்படி உணவு, உடை, வாழ்க்கைக்குத்தேவைப்படும் பிற பொருட்கள் கிடைப்பதற்காக வேண்டி, விடுமுதலின் உபயோகத்தை ஒழுங்குபடுத்தியாக வேண்டும்.

எந்தத் தேசத்திலும் ஜனநாயக அடிப்படையில் உருப்பெறும் வளர்ச்சியானது ஒழுங்கற்றதாகத்தான் வெளிக்குத் தோன்றும். இதை யாராலும் மறுக்க முடியாது. எல்லோரும் ஒருமுகமாகச் சேர்ந்து உழைக்கும்படி செய்ய அரசாங்கத்தால் இயலாது. பெரும்பாலான தனி நபர்கள் தமது சொந்த நன்மைக்காகத்தான் முக்கியமாக உழைக்கின்றனர்கள். சமுதாயத்தின் நன்மைக்காக அவர்கள் உழைப்பது மறைமுகமாகத்தான். பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும் இடையருது அரசாங்கத்தையும் அதன் திட்ட வளர்ச்சிப் பணிகளையும் குறைகூறுகின்றன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அந்த எதிர்ப்பு பொறுப்புள்ளதாகவே இருக்கிறதென்று சொல்ல முடியாது.

இம்மாதிரி வெளிக்குத் தென்படும் ஒழுங்கீனம் இருப்பதினுல்கூட பல அனுகூலங்கள் விளையலாம். மக்களின் உள்ளுறைச் சக்திகள் பெருமளவில் வெளிப்போந்து செயல்படலாம். புதிய கருத்துக்கள் பரவுவதற்கு ஊக்கம் ஏற்படலாம். புதிய உற்பத்தி-உபாயங்கள் வளர்ச்சி காணலாம். ஒரு தவறையோ அல்லது பல தவறுகளையோ தொடர்ச்சியாக இழைத்தாலுங்கூட பெருநாசம் விளையாது என்ற உண்மை புலப்படலாம்.

கம்யூனிஸ்ட் சீனவின் வளர்ச்சியில், வேக

மான முன்னேற்றப் பாய்ச்சலும், அதைத் தொடர்ந்து பேராபத்தான வாபசும் வளைய வளைய வந்து கொண்டிருந்தது கண்கூடு. ஜனநாயகச் சூழ்நிலையில் இம்மாதிரி ஒரு நிலவரத்தைக் காண முடியாது. வளர்ச்சியானது ஒரு ஒழுங்கு முறையில்லாமல் ஏனோதானோவென்று நடைபெறுவதாக வெளிக்குத் தோன்றலாம். ஆனால் அது ஏறக்குறைய ஒரு திடமான, நிச்சயமான வேகத்தில் நிகழ்ந்து வருகிறது என்பது உண்மை.

இந்தியாவின் சமீபகால அனுபவத்தை சீன அனுபவத்துடன் ஒப்புநோக்கிப் பார்த்தால், ஜனநாயக வளர்ச்சியில் காணப் பெறும் பலமும், பலவீனமும் தெளிவாகப் புலப்படும். இந்தியாவில் திட்டமிட்டதிலேயே தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் திட்டத்திற்கேற்ப வளர்ச்சியைக் காண முடியவில்லை. ஆரம்ப மதிப்பீடுகளைவிட ஜனத்தொகை வளர்ச்சியானது அதிகமாக இருந்து வருகிறது. எனவே, தனிநபரின் சராசரி வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது அது எதிர்பார்த்ததைவிட மெத்தனமாகவே இருப்பது தெரிகின்றது.

விளைபொருட்களும், வாழ்க்கைக்கு அவசியமான பிற ஆலைப் பண்டங்களும், சமநிலை வாய்ப்புடன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற கருத்துடன், இந்தியா தன் வளர்ச்சிப் பணிகளை இணக்கமாகத் தொடங்கியது. எனவே சில துறைகளில் எதிர்பார்த்த அளவு உற்பத்தி கை

கூடாமல் இருந்தபோதிலும், பொருளாதாரத்தின் பிற பகுதிகளை அவை பெருமளவில் பாதிக்க வில்லை. இடையருது கூடிப்பேசி, விட்டுக் கொடுத்து, சமரசமாகப் போகின்ற நடைமுறை யைக் கையாண்டு, நீக்குப்போக்குடன் திட்டத்தை இந்தியாவில் தயாரித்திருக்கின்ருர்கள். புள்ளி விவரங்களைக் கொண்டு பார்ப்போமானுல், இந்தி யாவில் வளர்ச்சி அவ்வளவு கவர்ச்சிகரமாகத் தென்படாமல் இருக்கலாம். ஆனுல் அது ஏறக் குறைய ஒரே நிதானத்தில் ஏற்றங்கண்டு வந் திருக்கிறது. சில பகுதிகளில் ஏற்பட்ட பற்ருக் குறைகளை வேறு சிலவற்றின் வெற்றிகள் சரிக் கட்டிக்கொண்டு போகின்றன என்பது புலனுகும்.

சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களின் விஷயத்தில் இந்த வேறுபாடுகள் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவை. தனது சம்பிரதாயமான சமூகக் கட்டுக்கோப்பை மாற்றியமைப்பது என்று இந்தியா உறுதி பூண்டிருக்கிறது. பழைய நியதி களுக்கு மதிப்புக் கொடுத்துத்தான் இதற்கு வழி செய்கிருர்கள். ஜனத்தொகைப் பெருக் கத்தின் கடுமைகளை நிதானப்படுத்தவும், சிறு வயதில் திருமணமாவதைத் தடை செய்யவும் நிர்ப்பந்தங்கள் செயல்பட்டு வந்துள்ளன. ஆனுல் அவற்றின் நோக்கம் தனிநபரைக் கட்டுதிட்டத் தில் வைப்பதல்ல. முழு வளர்ச்சி காண்பதற்கு இடையூருக பழக்கவழக்கங்களில் சில அம்சங்கள் இருக்கின்றன. அவற்றின் நிர்ப்பந்தங்களினின்று பொதுமக்களை விடுவிப்பதுதான் இந்த முயற்சி

களின் நோக்கம். கடந்த காலம் அளித்த சிறப்புக்களை அழித்துவிடுவதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை. புதிய பண்பாட்டு நியதிகளைத் திணிக்கவும் முயலவில்லை. பழைய கருத்துக்களுக்குப் புத்துயிரூட்டி புதிய நிலைமைகளுக்கேற்ப அவற்றைத் தயார்ப்படுத்துவதுதான் இந்த முயற்சியின் பிரதான நோக்கம்.

தொலைதூரப் புரட்சி யாத்திரையை நடத்தி வைத்த சீன வீர புருஷர்கள், தமது சித்தாந்த ஆர்வத்தில் ஒரு பகுதியை மட்டுமே மக்களிடமும் தோற்றுவிக்க முடிந்தது. ஆனாலும் மாறுதல்கள் ஏற்படுவது அவசர அவசியம் என்று ஏற்பட்ட காலையில், வேலைத் திட்டத்தை பிரத்தியட்ச உணர்வுடன்கூட மாற்றிக்கொள்வதற்கான மன நிலை இல்லாதபடி, சித்தாந்த விசுவாசமானது தடை செய்துவிட்டது. எதிர்காலம் இப்படித்தான் இருக்குமென்று முன்கூட்டியே நிச்சயமாக அறுதியிட்டுக் கூறுகின்றனர் சீனர். ஆனால் இந்திய அரசாங்கம் சிறிது சந்தேக புத்தியுடன் இருந்து வருவது அதன் விவேகத்தைக் காட்டுகிறது. பிரதிகூல நிலைகள் வந்துற்றகாலையில் சீன அமைப்பு முறையில் விரல்கள் ஏற்பட்டன. அதே சூழ்நிலையில் இந்திய முறையானது சற்று வளைந்து கொடுத்தது.

## VI

இரண்டு தேசங்களிலும் எதிர்காலத்தைப்பற்றி முன்கூட்டியே மதிப்பிட்டுச்சொல்வது சாத்யமல்ல.

எனினும் சில போக்குகளைத் தெளிவுறக் காண லாம்.

எதிர்கால வளர்ச்சிக்கான உறுதியான அஸ்திவாரத்தை 17 ஆண்டுகளில் இந்தியா சிருஷ்டித்துள்ளது. மெதுவாகவேனும் அது முன்னேறிக்கொண்டே வருகிறது. முதல் ஐந் தாண்டுத் திட்டத்தின் முதல் வருஷத்திலிருந்தே அபிவிருத்தி ஏறுமுகமாக இருந்து வந்திருக்கிறது. இந்திய மக்களுக்கு வரவர அதிகமான நன்மைகள் கிடைத்து வருகின்றனவேயொழிய. அவை குறையவில்லை. ஐந்தாண்டுகளுக்கு முன்னிருந் ததைவிட இப்போது தமது நிலைமை சற்று திருந்தி யிருப்பதாக, ஒவ்வொரு நான்கு இந்தியர்களிலும் மூவர் கருதுகின்றனர். அண்மையில் பொதுஜன அபிப்பிராயத்தைப்பற்றி நடத்திய மதிப்பீட்டி லிருந்து இது தெரிகின்றது.

ஜனத்தொகைக் கட்டுப்பாட்டுக்கு வேண்டிய நடைமுறைகளை உருவாக்கி அறிமுகப்படுத்தி வருகிறார்கள். ஜனநாயகத்தின் நடைமுறைகள், உத்திகள் ஆகியவற்றை மக்கள் படிப்படியாக ஜரித்துக்கொண்டு வருகிறார்கள். அதன் காரண மாக பெருமையுணர்வும் நிச்சய புத்தியும் விரிவு கண்டு வருகின்றன.

இந்தியாவின் ராஜீய, சமூக முறைகள் இப்போது அடைந்து வந்துள்ள நிலைமையைக் கொண்டு மதிப்பிட்டால், அவை மிகத் தீவிரமான மாறுதல்களுக்கு உள்ளாகும் என்றோ அல்லது குமுங்கி விடுமென்றோ தோன்றவில்லை.

மேலும் இந்தியாவின் ராஜீய, பொருளாதார வளர்ச்சியானது சுதந்திரமுள்ள ஒரு சமுதாயக் கட்டுக்கோப்புக்குள் நிகழ்கின்றதாகையால், உலகின் பெரும் பகுதியின் நம்பிக்கைக்குப் பாத்திர மாக உழைப்பது சாத்தியமாகின்றது. அதன் அரசாங்கமும் மக்களும், வளர்ச்சி கண்டுள்ள நாடுகள் பலவற்றிலிருந்து கணிசமான உதவியை அடைந்து வருகிறார்கள். அந்நிய அரசாங்கங்க ளிடமிருந்து இவ்வாறு தொடர்ச்சியாகக் கிடைத்து வருகின்ற உதவியும் தனியார்த் துறையிலுள்ள அந்நியரின் விடுமுதலும் இந்தியாவுக்குக் கிடைப் பதுபோல சீனாவுக்குக் கிடைப்பதில்லை. இந்தியா வின் வளர்ச்சி வேகத்தை நிர்ணயிப்பதில் இவ் விரண்டும் இனியும் விசேஷ முக்கியத்துவம் உள்ளவையாக இருந்து வரும்.

சீனாவின் வளர்ச்சி, மிகத் தாழ்நிலையில் இப் போது இருந்து வருவதைக் காண்கிறோம். அது மிகத் தீவிரமான ரீதியில் செயலாற்றுகிறது. உலக விவகாரங்களில் ஆதிக்க அந்தஸ்தை வகிக்க வேண்டுமென விரும்பி, முயன்று பார்த்து, சீனா தோல்வியுற்றது. சித்தாந்தச் சர்ச்சைகளில் ஈடுபட்டு, உலகின் பிற பகுதிகளிலிருந்து அது தன்னைத் தொடர்பற்ற தனி நாடாக ஆக்கிக் கொண்டு விட்டது.

சீன விவகாரங்களின் போக்கு திருப்திகரமாக இருந்துவரும் என்று முன்கூட்டிச் சொல்வது சிரமமாக இருக்கிறது. பெருமளவில் வளர்ச்சி யானது நிலைகுலைந்துவிட்டதன் காரணமாக,

அதன் இப்போதைய அரசாங்கம் பின்வாங்கி, மீண்டும் எல்லாவற்றையும் புதிதாக ஆரம்பிப்பது சாத்தியமல்ல. அதன் இப்போதைய வழி தாறு மாருக இருந்து வருகிறது. எனவே மொத்தத்தில் கணிசமான அபிவிருத்தி ஏற்படுவது அநேகமாக அரிதென்றே தோன்றுகிறது.

எனினும் சீன பொருட்படுத்தியாக வேண்டிய தேசம். திறமையற்ற தலைவர்களும் வறட்டுச் சித்தாந்தமும் அதை பலவீனப்படுத்தியுள்ளன. எனினும் 70 கோடி மக்களைக் கொண்ட ஒரு சமுதாயம் மறைந்துவிடுமென எதிர்பார்க்க முடியாது. இறுதியாக ஏதாவது ஒரு தீர்வு ஏற்படத் தான் செய்யும். விரைவிலோ, சற்று தாமதித்தோ திறமையும், பிறரை ஈர்க்கின்ற குண நலன்களையும் படைத்த சீன மக்கள், தமது விதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்வதற்காக உழைப்பர். மீண்டும் அந்தத் தேசம் உலக சமுதாயத்தில் ஜன நாயகம் உள்ளதோர் உறுப்பாக இயங்கத்தான் செய்யும்.

## VII

இறுதியாக ஒரு வார்த்தை. சீனவையும் இந்தியாவையும் ஒப்புநோக்கிப் பார்க்கையில், நாம் காண்கின்ற மிக முக்கியமான முடிவு இதுதான்: "சர்வாதிகார அமைப்பானது திறமையின் உறைவிடம் என்று கருதுவது வெறும் கட்டுக்கதை. அதன் நடைமுறைகளை வெறுத்தவர்கள்கூட, சில ஆண்டுகளுக்கு முன்வரை அதன் திறமையில்

நம்பிக்கையுள்ளவர்களாகவே இருந்து வந்தனர். பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய மிகத் திறமையான நிர்வாகத்தைச் சர்வாதிகாரத்தினுல் அளிக்க முடியுமென அவர்கள் கருதினர். விரைவிலோ சற்று தாமதித்தோ, வளர்ச்சி கண்டு வருகின்ற நாடுகள், தமக்குரிய வழி என்னவென்பதை நிர்ணயித்தாக வேண்டும். இரும்புப்பிடி போன்ற கட்டுத்திட்டத்துக்கு உட்பட்ட ஆதிக்க முறை வேண்டுமா? அல்லது வறுமையுடன்கூடிய, சிரமம் மிகுதியாகவுள்ள எதிர்காலம் வேண்டுமா என்று அவர்கள் தமக்குத்தாமே முடிவு செய்து கொள்ள வேண்டும்", என்ற ரீதியில் 1955 வாக்கில் பொறுப்புள்ளவர்கள் கூறியதுண்டு. ஆனுல் ஜனநாயக ரீதியில் வளர்ச்சி காண்பதற்குத் தைரியத்துடன் பாடுபட்டுவரும் தேசங்களில் வெற்றிகாண்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன என்றே இப்போது தோன்றுகிறது.

பிரேஜில், ஜப்பான், மெக்ஸிகோ, டாய்வான் ஆகியவையும் வளர்ச்சி கண்டு வருகின்ற பிற நாடுகளும், சீனுவைவிட அதிக வேகத்தில் அபிவிருத்தியடைந்துள்ளன. எல்லாக் கம்யூனிஸ்ட் நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சியின் வேகமானது 1962-ல் 3.6 சதவீதமாகத்தான் இருந்தது. மேற்கு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் உள்ள ஒவ்வொரு ஜனநாயக நாட்டிலும் வளர்ச்சி வேகம் இதைவிட அதிகம்.

சர்வாதிகார அரசாங்கங்களால் அபிவிருத்தியைத் தோற்றுவிக்க முடியாது என்று இதற்குப்

பொருள்கொள்ளக் கூடாது. சோவியத் யூனியன், எவ்வளவோ சிரம நிலைகளிடையே, பெரு முயற்சி செய்து உலகில் தொழில் துறையில் இரண்டாவது வல்லரசாக வளர்ந்து விட்டது. ஆனுல் ஜன நாயக வழிமுறையில் சென்று வளர்ச்சி காண்பதென்று முடிவு செய்துள்ள நாடுகள், நம்பிக்கையுடன் முன்னேறலாம் என்ற உண்மையையும் அதன் அனுபவத்திலிருந்து புரிந்துகொள்ளலாம்.

பொருளாதார வளர்ச்சி ஏற்படுங்காலையிலேயே, தனி நபரின் கண்ணியத்தையும் உறுதி செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் அவை தொடர்ந்து பணியாற்றும். சுதந்திரமாக இருந்து வரும் மக்களுக்குச் சுயமான ஒரு சக்தி உண்டு. தவிர ஒரே அச்சில் வார்த்தவர்களாக இராமல், பலதரப்பட்ட பிரிவினரும் சேர்ந்து வாழ்கின்ற கூட்டுச் சமுதாயமானது, வளர்ச்சிக்கான வீரியம் நிறைந்தது. இவை இரண்டும் எந்தச் சமுதாயத்திலும் முதன்மையான ஆஸ்திகள் என்றுதான் மதிக்கப் பெறும்.

வளர்ச்சி காண்கின்ற தேசங்கள் எல்லாமே இறுதியாக தமக்கு வேண்டுவது உணவா, சுதந்திரமா என்பதை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று கம்யூனிஸ்ட் சீனுவின் தலைவர்கள் சமீபத்தில்தான் கூறினுர்கள். பத்து வருஷ காலம் வெறிபிடித்தவர்கள்போல உழைத்தபிறகும் அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை, சுதந்திரமும் இல்லை. ஜனநாயக இந்தியாவில் இவ்

விரண்டும் சரிவரக் கைகூடுமென்று நம்புவதற்கு உறுதியான காரணங்கள் இருக்கின்றன.

எனினும் மெத்தனத்திற்கு இடமே இல்லை. இந்தியாவின் பிரச்சினைகள் மகத்தானவை, அச்சுறுத்தும் ரீதியில் உள்ளவை, சிக்கல்கள் நிறைந்தவை. எவ்வளவோ தைரியத்துடன் பெருமுயற்சி செய்தபோதிலும், ராஜீய, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கான ராஜபாட்டை மிக நீண்டதாகத்தான் இருக்கும். அதில் ஏற்றம் காண்பதற்கு இப்போதுதான் இந்தியா தொடங்கியிருக்கிறது.

இந்தியா, சீனு ஆகிய இரண்டு மிகத் தொன்மையான நாடுகளை, இனி வரும் ஆண்டுகளில், உலகம் தொடர்ந்து கவனித்துவரவே செய்யும். இவ்விரண்டும் தத்தம் சொந்த வழிகளில் மக்களுக்குப் புது வாழ்வு அளிக்கப் பார்க்கின்றன. இதன் இறுதி விளைவு எவ்வாறு இருக்குமென்று முன்கூட்டியே யாராலும் சொல்ல இயலாது. ஆனுல் வாழ்க்கையை வளப்படுத்தும் அபிவிருத்தியில் மட்டுமின்றி, அந்த வளர்ச்சியை சாத்தியமாக்குகின்ற தனிநபர்களின் கண்ணியத்திலும் நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும், இந்தியாவின் வெற்றி தமது வெற்றி என்று கருதுகிருர்கள்.

(முற்றும்)

தேச நிர்மாணம் குறித்து தூதர் போல்ஸ் பல புத்தகங்களும் அநேக கட்டுரைகளும் எழுதி யுள்ளார். 1963 டிசம்பர் மாதத் தில் டில்லி சர்வகலாசாலையில் அவர் தொடர்ச்சியாக நிகழ்த்திய பல உரைகளை அடிப்படையாகக் கொண்டது, இந்தப் புத்தகம்.



**செஸ்ட்டர் போல்ஸ்**
இந்தியாவில் அமெரிக்கத் தூதர்

## போல்ஸ் எழுத்துக்களிலிருந்து சில மேற்கோள்கள்

விரைவாக மாறிவரும் நமது இன்றைய உலகத்தில் இன்றுள்ளதுபோல. வரலாற்றின் எந்தக்காலத்திலும் இவ்வளவு பயங்கரமான ஆபத்துக்கள் இருந்த தில்லை; தனி மனிதன் வளரவும், அவனது மாண்பு நனவாகவும், பொது நன்மைக்காக மனித ஆற்றல்கள் பயன் படவும் இப்போதுள்ளதுபோன்ற உற்சாகமூட்டும் வாய்ப்புகள் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

—வெளிநாட்டுக் கொள்கைச் சங்கம் செயின்ட் பால், மினஸோட்டா, 1962

“உலகில் ஜனநாயகம் பத்திரமாக இருக்குமாறு செய்வதே” அமெரிக்காவின் நோக்கம் என்று ஜனாதிபதி வுட்ரோ வில்ஸன் ஒரு சமயம் கூறினார். கனவுலகில் வாழ்பவர் என்ற கண்டனத்துக்கு அவர் உடனே ஆளானார்; எனினும் வேறு எப்படித்தான் நமது நோக்கத்தை வரையறுப்பது? வாஷிங்டன், ஆடம்ஸ், ஜெபர்ஸன், ஜாக்ஸன், லிங்கன் ஆகியோர் முன்னர் சொன்னதைத்தான் வில்ஸன் கூறினார்: தனி நபர் மாண்பு, வாய்ப்பு பற்றிய அமெரிக்கக் கனவு, மக்கள் குலம் முழுதுக்கும் சொந்தம் என்றார், அவர்.

—கருத்துகள், மக்கள், சமாதானம், 1958.

ஆசியாவின் அரசியல் ஆன்மாவைக் கவர அமெரிக்காவும் ரஷ்யாவும் போராட வில்லை; இந்தியாவும் சீனாவுமே முக்கியமாகப் போராடுகின்றன.

—சமாதானத்தின் புதிய பரிமாணங்கள், 1955.

செல்வம், நன்மை அனைத்துக்கும் தாய்-நிலமே என்ற ஒரு புனிதமான சிறப்புக் கருத்து நிலவுவதை உணர்வதே ஆசியக் கிராமவாசிகளை அறிவதற்கு ஒரு வழி என்று நான் நினைக்க முற்படுகிறேன்; எல்லாக் கண்டங்களிலுமே நிலத்தில் உழுபவர்களின் பொதுவான கருத்து அது. எனவே நிலம் குடியானவர்களுக்குச் சொந்தமாக இருக்கும்போதுதான் அவர்களிடம் முழு உற்சாகம் ஏற்படுத்த முடியும்.

—தூதர் அறிக்கை, 1954.

UNITED STATES INFORMATION SERVICE
Madras-2.